REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 நவம்பர் 21 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 276 | Tuesday 21, November, 2023 | 16 பக்கங்கள் | 50/-







## குழு கூட்டங்களில் வெளியார்களை அழைத்து வர அனுமதி அவசியம்

### சபாநாயகர் கண்டிப்பான உத்தரவு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற குழுக் கூட்டங்களுக்கு வெளியாட்கள் எவரையேனும் அழைத்து வருவதாயின், தம்மிடமிருந்து கட்டாயமாக எழுத்துபூர்வமான அனுமதியைப் பெற வேண்டுமென சபாநாயகர் அறிவித்துள்ளார்.

சகல பாராளுமன்ற குழுக்களின் தலைவர்களுக்கும் 06

## கிரிக்கெட் இடைக்கால நிர்வாக குழுவுக்கு எதிரான மனு

### நாளை 22 வரை ஒத்திவைப்பு



கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிரான மனு மீதான விசாரணையை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்க, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (20) உத்தரவிட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அன்றைய தினம் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாதென, அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

## உலக தொலைக்காட்சி தினம் இன்று அனுஷ்டிப்பு




உலக தொலைக்காட்சி தினம் (World Television day) இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21ஆம் திகதியை உலக தொலைக்காட்சி தினமாக ஐ.நா கொண்டாடி வருகின்றது. இன்றைய உலகில் தொலைக்காட்சியின் முக்கியத்துவம் கருதி இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 06

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் நியமனம்



நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு இதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது. தேர்வுக்கான திறந்த போட்டித் தேர்வு எதிர்வரும் 2024 ஜனவரியில் நடத்தப்பட உள்ளது.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் www.doenets.lk இணையத்தளத்தில் “Online 06

## தரமற்ற மருந்து வகைகள் இறக்குமதி செய்து மோசடி

# சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் பலர் கைது

### நீதிமன்ற உத்தரவையடுத்து CID யின் அதிரடி நடவடிக்கை

சர்ச்சைக்குரிய வகையில் தரமற்ற இம்யூன் குளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில், சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்கிரமநாயக்க உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியர் கபில விக்கிரமநாயக்க மற்றும் ஏனைய மூவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (20) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தரமற்ற தடுப்பூசிகளை இறக்குமதி செய்த மருந்து நிறுவன உரிமையாளரையும், சுகாதாரத் துறையின்

### டாக்டர் கபில விக்கிரமநாயக்க, டாக்டர் விஜித் குணசேகர உட்பட மேலும் இரு சிரேஷ்ட வைத்தியத்துறை அதிகாரிகள் நேற்று கைதாகினர்

மேலும் இரண்டு அரச உயர் அதிகாரிகளையும் கைது செய்யுமாறு, ஒக்டோபர் மாதம் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து இந்த கைது இடம்பெற்றுள்ளது.

சுகாதார அமைச்சின் வழங்கல் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்கிரமநாயக்க மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வைத்தியர் விஜித் குணசேகர ஆகியோர், தரமற்ற மருந்து நிறுவன உரிமையாளருக்கு உதவிய இரண்டு சிரேஷ்ட சுகாதாரத் துறை அதிகாரிகள் என அடையாளம் காணப்பட்டனர்.



இரண்டு சிரேஷ்ட அரச அதிகாரிகளின் உதவியுடன் போலியான ஆவணங்களை உருவாக்கி 22,500 தரமற்ற இம்யூன் குளோபுலின் தடுப்பூசி குப்பிகளை 06

## சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஜனாதிபதியுடன் நேற்று முக்கிய சந்திப்பு

### சுற்றுலா, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதில் கவனம்



சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அரச உறுப்பினருமான சேன் யிங்க் (Shen Yiqin) நேற்று (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் உட்பட இலங்கைக்கு சீனா வழங்கும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, இதற்காக சீன ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நன்றி 06

### பொத்துவில் பஸ் டிப்போ தரமுயர்வு

## அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கிழக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு





பொத்துவில் பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக நிலவி வந்த போக்குவரத்து பிரச்சனைக்கு தீர்வு வழங்கிய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

2005 ஆம் ஆண்டு முதல் அக்கரைப்பற்று டிப்போவின் கீழ் உப டிப்போவாக இயங்கி 06

## எதிர்க்கட்சிகளின் பகற் கனவை தவிடுபொடியாக்கி பட்ஜட் பதிலடி



### அதிக வாக்குகளுடன் நிறைவேற்றப்படும்

மக்கள் மேலும் இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கிக் கொள்ளும் வரை காத்திருந்த எதிர்க்கட்சிகளின் கனவுகள், இந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் சிதைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவது மாத்திரமன்றி, அந்த நிவாரணங்களை எவ்வாறு வழங்குவது என்பதை எடுத்துக் காட்டியுள்ள இம்முறை 06

## 15 வருடங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை சிறப்பான பட்ஜட்

### வரவேற்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கடந்த 15 வருடகால வரவு செலவுத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை சில முன்னேற்றகரமான விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளதால், அதனை வரவேற்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் 06

## நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எதிரணியும் ஜே.வி.பியுமே காரணம்

### நாமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவிப்பு



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்க்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பொறுப்பு கூற வேண்டுமென, சிறிலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சி காலத்தில் வரிகளை குறைக்க மேற்கொள்ளப்பட்ட 06

## குற்றச்சாட்டை நிரூபித்தால் உடன் பதவி விலகுவேன்

### கோப் குழு தலைவர் ரஞ்சித்பண்டார எம்.பி




**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்க்கட்சியினர் சுமத்தியுள்ள பாலியல் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள கோப் குழு தலைவர் ரஞ்சித்மத்தும பண்டார எம்.பி, சபாநாயகருக்கு எழுத்து மூலமாக இதுபற்றி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று 06

## யாழில் 101 கிலோ கேரள கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணத்தில் சுமார் 3 கோடி ரூபா மதிப்புள்ள 101 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. காரை நகர் சாம்பலோடை சிவகாமி அம்மன் ஆலய வீதியிலுள்ள பற்றைக்காட்டுக்குள், இவை 06



## தங்கத்தின் விலையில் நேற்று சிறிய வீழ்ச்சி

24 கரட் பவுண் 1,66,294 ரூபா

03



## ரயில் மிதிபலகையில் பயணித்த நால்வர் வைத்தியசாலையில்

கொம்பனித்தெரு சுவரில் மோதியதில் சம்பவம்

03

## தவறிழைக்கும் எம்.பிக்கள் மீது பாய்கிறது புதிய சட்டம்

### தண்டனை விதிப்பதற்கு ஏற்ப புதிய ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தவறிழைக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தண்டனையளிப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் வரையப்பட்டுள்ள புதிய சட்டமூலமொன்று, அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ 06

## இந்தியாவின் தோல்வியை கொண்டாடுவது முறையானதல்ல

### உதவிகளை மறப்பது மனிதாபிமானமில்லை




நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தபோது, அண்டை நாடான இந்தியாவே முதலில் உதவியது. இந்நிலையில், இந்திய அணியின் தோல்வியை இங்குள்ள சிலர் பட்டாசு கொளுத்தி கொண்டாடுவது நன்றி கெட்ட செயலென, கல்வி இராஜாங்க அமைச்சர் 06

## விளக்கமறியலில் கைதி மரணம்; இரு பொலிஸாருக்கு இடமாற்றம்

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

**யாழ். விசேட நிருபர்**




மல்லாகம் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரின் உயிரிழப்புக்கு, சிறுநீரகம் பாதிக்கப்பட்டதே காரணமென மருத்துவ அறிக்கை தெரிவித்துள்ளது. மேலும், கடுமையாக துன்புறுத்தப்பட்டதாலே சிறுநீரகம் பாதிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் 06

### 1691 பயணிகள், 704 பணியாளர்களுடன்

## உலகின் பிரமாண்டமான சொகுசு கப்பல் கொழும்பில்



எகிப்திலிருந்து வந்த "பசுபிக் வேர்ல்ட்" சொகுசு பயணிகள் கப்பல் நேற்று (20) அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இக் கப்பலில், 06


91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரு மாணவர்கள் சித்தி



**திறப்பனை தினகரன் நிருபர்**

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் அ/ நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர் இருவர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். எம். எச். ஹாசிப் அஹமட் 152, எஸ். ஹம்தான் 149 புள்ளிகளையும் பெற்று இம்முறை சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் முறையே மொஹமட் ஹிஷாம் பாத்திமா பஹ்மியா, சலீம் பமீலா ஆகியோர்களின் புதல்வர்கள் ஆவர்.

## வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பெண் மீது தாக்குல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தனது மனைவியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த அயல்வீட்டு பெண் ஒருவரை கத்தியால் வெட்டி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை சந்தேகத்தின் பேரில் ஹொரவப்பொத்தானை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஹொரவப்பொத்தானை கபுகொள்ளாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த (18) இரவு 08.00 மணியளவில் கடமை முடித்து வீட்டுக்கு வந்தபோது தனது மனைவியுடன் அயல்வீட்டு பெண் ஒருவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளதை அவதானித்த சார்ஜன்ட், வீட்டிலிருந்த கத்தியால் பெண்ணை வெட்டி காயப்படுத்தியுள்ளதாக ஹொரவப்பொத்தானை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவத்தில் காயமடைந்த பெண் சிகிச்சைக்காக ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சு பணியாளர்கள்

## கைரேகை இயந்திரங்களை பயன்படுத்த மறுப்பது ஏன்?

‘கோபா’ உபகுழு அதிகாரிகளிடம் கேள்வி





சுகாதார அமைச்சு வளாகத்தில் விரைவில் ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறலை பதிவு செய்யும் கைரேகை இயந்திரங்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் முன்னிலையில் தெரிவித்தனர்.

சுகாதாரப் பணியாளர்கள் கைரேகை வைத்து சேவைக்கு வர மறுப்பது ஏன்? என சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழு, கேள்வி எழுப்பிய போதே அமைச்சின் அதிகாரிகள் இவ்வாறு பதிலளித்துள்ளனர்.

அரச நிறுவனங்களில், கைரேகை இயந்திரங்கள் ஊடாக பணியாளர்களின் வருகை மற்றும் வெளியேறலை உறுதிப்படுத்துவது தொடர்பாக 2017 இல்,பொது நிர்வாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த சுற்றறிக்கைக்கமைய 31.08 மில்லியன் ரூபா செலவில் சுகாதார அமைச்சினால் நிறுவப்பட்ட 213 கைரேகை இயந்திரங்கள் இன்னமும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. இது குறித்து இந்த உபகுழு கேள்வி எழுப்பியது. கைரேகை வைத்து சேவைக்கு வருவதை சுகாதாரப் பணியாளர்கள் எந்தக் காரணத்துக்காக மறுக்கிறார்கள் என அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் தலைவர், இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிடுகையில், பணியாளர்களின் எதிர்ப்பினால் இது நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. சுகாதார அமைச்சின் வளாகத்தில் விரைவில் கைரேகை இயந்திரங்களை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம் என்றார்..

பொதுவான முறைமை ஊடாக அரச சேவையை வினைத்திறனாகவும் ஊழலற்ற சேவையாகவும் மாற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் சுகாதார சேவையும் இணைந்து கொள்ள வேண்டுமென குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

## பசுபிக் வான் மாநாட்டில் இலங்கை விமானப்படை தளபதி பங்கேற்பு



இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ கடந்த 13 தொடக்கம் 16ம் திகதி வரை ஹவாய் பேர்ல் துறைமுகத்தில் அமைந்துள்ள பசுபிக் விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற 2023ம் ஆண்டுக்கான பசுபிக் வான் பிரதானிகளின் மாநாட்டில் கலந்துகொண்டார்.

22 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மாநாடு வான் பிரதானிகள் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ஒன்றுகூடும் மிகப்பெரிய ஒரு கலந்துரையாடல் நிகழ்வாகும். இதன்போது பிராந்திய பாதுகாப்பு சவால்களை சமாளிக்க உலகளாவிய உளவுத்துறையை பயன்படுத்துவது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. விமானப்படைத் தளபதியும் பசிபிக் விமானத் தளபதிகள் மாநாட்டின் தொகுப்பாளருமான ஜெனரல் கென் வில்ஸ்பாக் தலைமையில் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இதன்படி, வான்வெளி விழிப்புணர்வு முக்கியத்துவம், அண்மைக்கால மோதல்களில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

அந்த கலந்துரையாடல்களுக்கு மேலதிகமாக, சர்வதேச பங்காளிகளுக்கிடையிலான உறவுகளை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஈடுபாடுள்ள சமூக நிகழ்வுகளும் மாநாட்டில் இடம்பெற்றன.



வெளியான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் கெக்கிராவ கல்வி வலய பலளுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.அர்.எம்.அக்ரம்160 ,எம்.என். அம்ரா சைனப் 146, எஸ்.ஹிமா 146 ,எம்.எஸ். சஹ்லா 144 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்களை படத்தில் காணலாம்.

(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 78ஆவது பிறந்த நாள் நிகழ்வு கொழும்பு, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் அவர், சர்வமத தலைவர்களுடன் இணைந்து கேக் வெட்டுவதை படத்தில் காணலாம்.

## பாரம்பரியம் நிகழ்ச்சியில் இன்று பக்கீர் பைத் நினைவுகள்

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இன்று செவ்வாய்க்கிழமை (21) இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில், முஸ்லிம் சமூக கலை, கலாசார அம்சங்களில் ஒன்றான "பக்கீர் பைத்" பாரம்பரிய நினைவுகள் பரிமாறப்படவிருக்கின்றன.



ஆரம்ப நாட்களில் அவ்வப்போது இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சிகளில் பக்கீர் பைத் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வந்தன. 1980 களில், இக்கலையை கண்ணியப்படுத்தும் நோக்கில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை போதுமான களம் கொடுத்து வளர்த்து வந்தது. புத்தளம், மன்னார், கிழக்கு மாகாணம் போன்ற பிரதேசங்களில் வாழும் பக்கீர் பைத் பாடிவந்த பாவாக்களை, நிலைய கலையகம் அழைத்து, அவர்களைப் பாடவைத்து பக்கீர் நிகழ்ச்சிகளை தொடராக முஸ்லிம் சேவை ஒலிபரப்பியிருக்கிறது. இன்று அவர்களில் அதிகமானோர் நம்மில் இல்லை. அதே நேரம் அக்கலை தொடராது, அருகி போனமை துரதிர்ஷ்டமே.

அந்நாட்களில் முஸ்லிம் சேவையில் பக்கீர்பைத் பாடிய பாவாக்களில் ஒருவரான, அக்கரைப்பற்று மர்ஹூம் பீ.எம். ஜமால்தீன் கலீபா பாவா அவர்களின் நினைவுகளை அவரது புதல்வர் நஜ்முல் ஹுசைன் தீன் பாவா, நினைவு கூருகிறார். அத்தோடு, இன்றைய நிகழ்ச்சியில், கொழும்பு திறந்த பல்கலைக்கழக முன்னாள் கல்வி பீடாதிபதி, அகில இலங்கை முஸ்லிம் பக்கீர் ஜமாத்தின் தலைவர் அல்ஹாஜ் பீ.சீ. பகீர் ஜவ்பர், பக்கீர் பைத் பாரம்பரிய வரலாறுகளையும், பகிர்ந்து கொள்கிறார்.

இந்நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

## அட்டுலுகம அல் கஸ்ஸாலியில் 16 மாணவர்கள் சித்தியடைவு



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

களுத்துறை மாவட்டத்தில் ஹொரண கல்வி வலயத்தைச் சேர்ந்த அட்டுலுகம அல் கஸ்ஸாலி ஆரம்ப பாடசாலையில் பதினாறு பேர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று சித்தியடைந்து பாடசாலையில் வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்கள்: அஸ்மா ஜெமீல்183, இல்மா இர்ஷாத்172, ஹமாம் நிஜாம்171, நுஹா ஹஸன்168, றிபா பஹ்ஜான் 164, அஹமத் முஜீப்164, யாஸிர் உபைதுல்லா161, நஸ்ஹா நஸ்மின் 161, நுஹா றிப்தி159, சஹானி ரிம்ஸான்158, இல்மா இமாம்156, ஹம்ளா ரினாஸ்156, ஸல்ஹா நஸ்மின்156, இஸ்மா இம்ரான்151, சிமா நபாயிஸ்148, இஷ்பா இஷாக் 147. மேற்படி மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை சித்தியானது பெரு மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமன்றி பாடசாலையின் வரலாற்றுச் சாதனையாகவும் உள்ளதாக அதிபர் அஷ்ஷெய்ஹ் எம். என்.எம். ஜொழிபர் (நளீமி) தெரிவித்தார்.

குவைத் நிதியுதவியில்

## பண்டாரகொஸ்வத்த மக்களுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம்

அல்ஹிமா அமைப்புக்கு மக்கள் பாராட்டு





குவைத் நாட்டின் இலங்கைக்கான மனிதாபிமான உதவி திட்டத்தின் கீழ் குவைத் 'இஸ்லாமிய கெயா சொசைட்டி' யின் நிதி ஒதுக்கீட்டில் பண்டாரகொஸ்வத்த கிராம பிரதான பள்ளிவாசலுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நீர் சுத்திகரிக்கின்ற இயந்திரம் பொருத்தப்பட்டு அண்மையில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பண்டாரகொஸ்வத்த கிராமத்தில் அண்மைக்காலமாக கிட்னி நோயாளிகள் அதிகரித்து வருகின்றனர். இதனை தடுக்கும் நோக்கில் பள்ளிவாசல் நிர்வாகம் அல்ஹிமா சமூக சேவை அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் விடம் விடுத்த வேண்டுகோளின்பேரில் இந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு பணிப்பாளர் சகிதம் பள்ளிவாசல் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரின் பங்குபற்றலுடன் அண்மையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.





பேருவளை சீனன்கோட்டை கங்கானங்கொடை நூரானியா சாவியாவில் ஆத்மீக ஞானி மர்ஹூம் அஷ்ஷெய்க் முஹம்மத் பாஸி (ரஹ்) அவர்களின் 27வது வருட ஞாபகார்த்த கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் கலீபதுஷ் ஷாதுலி மௌளவி எம்.எம் ஸெய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் (18) நடைபெற்றது. கலீபதுஷ் ஷாதுலி மௌளவி அஸ் ஸெய்யத் அலவி மௌலானா (முர்ஸி) விஷேட உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

## வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் 13 மாணவர்கள் சிறந்த பெறுபேறு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி, தென் மாகாணம், மாத்தறை மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளில் மாறை / வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களுல் அதிகூடுதலான மாணவர்கள் வெட்டுப்புள்ளியை தாண்டி மாத்தறை மாவட்டத்தில் சாதனைப் படைத்துள்ளனர்.

இப் பாடசாலையில் 13 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் பதுஹுர்ரஹ்மான் தெரிவித்தார்.

ஏ.என்.உல்பா மர்யம் (176), என். ஆர் இப்றாஹீம் (173), எம்.வை. ஆய்ஷா ஹம்தா (166), எம்.எம் அர்கம் (158), எம்.எப்.எம் ஹம்ஸா (157), எம்.எம் அப்துர்ரஹீம் (156) எம்.என். ஷம்மாஸ் அஹ்மது (152), எம்.கே.எம்.அர்கம் (152), ஏ.எஸ் பாத்திமா அம்னா (151), ஏ. அப்துர் ரஹ்மான் (149), எம்.எம் அப்துர் ரஹ்மான் (149), அஹ்மது மஹ்மூத் (148), மற்றும் எம்.எப் ஆயிஷா மின்ஹா (147), ஆகியோரே பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பாடசாலைக்கு பெருமை சேர்த்த இவர்களையும், இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள், இவர்களுக்கு பக்கபலமாக இருந்த பெற்றோர்கள், அதிபர், உதவி அதிபர்கள், அனைவர்களுக்கும், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை சமூகம், பெற்றோர்கள் ஆகியோர் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 21 செவ்வாய்க்கிழமை

தினகரன் THINAKARAN

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : மாலை : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அஸ்வெசும நிவாரணத் திட்டம் நிதி ஒதுக்கீடு மேலும் அதிகரிப்பு!

## பட்ஜட்டில் ரூபா,123 பில்லியன் மேலதிகம்

அஸ்வெசும நிவாரணத் திட்டத்திற்காக இதுவரை 60 பில்லியன் ஒதுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில்,இவ்வருடம் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் இது 183 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் பல சாதகமான விடயங்கள் உள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது, ஜனாதிபதி ரணிலால் இதனைச் செ ய்ய முடியாது என எதிர்க்கட்சிகள் தெரிவித்தன. நான், சொன்னது போன்று காகத்தின் கூட்டில் குயில் முட்டையிடுவது போன்ற கதைகளையே சொல்லித் திரிந்தனர்.

ஆனால், இதுவரை 70% ஆக இருந்த பணவீக்கம் 1.3% ஆக குறைந்துள்ளது. பூஜ்ஜியமாக சரிந்திருந்த டொலர் கையிருப்பு 3530 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



2023 இன், முதல் ஒன்பது மாதங்களில், குறிப்பிடத்தக்க முதன்மை உபரியான 123.8 பில்லியன்களை அடைய முடிந்தது.30% ஆக இருந்த வட்டி வீதம் தற்போது 15 சதவீதமாக குறைந்துள்ளது. மின்சாரம் தொடர்ந்து கிடைக்கிறது. எரிவாயு உள்ளது. தொடர்ச்சியான எரிபொருள் விநியோகம் கிடைக்கிறது. உரப் பிரச்சினை இப்போது இல்லை.

எனவே, 2024ஆம் ஆண்டின் காலாண்டில் சாதகமான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. விமர்சனம் இருக்கலாம். ஓய்வூதிய கொடுப்பனவு 2500 ரூபா அதிகரிக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளி, சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு 7500ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு 3000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் எனது அமைச்சு தொடர்பில் பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன. எங்கள் விடயத்தில் அவர்களுக்கு பதிலளிப்பேன் என்று நான் நம்புகிறேன்.

ஏனெனில் கடந்த முறை அறிவித்தபடி, அடுக்குமாடி வீட்டுத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளோம். அதே சமயம், சட்டச் சிக்கல்களும் தீர்க்கப்பட வேண்டும். ரணசிங்க பிரேமதாச வழங்கிய காணிகள் இதுவரை கைமாற்றப்படவில்லை.

அந்த ஒதுக்கப்படாத நிலங்களில் உரிமைப் பத்திரம் கொடுக்க முடியாது. இந்த வீட்டு வளாகங்களில் உள்ள நிலம் ஒப்படைக்கப்படவில்லை.

அதற்கான சட்டப் பின்னணியை உருவாக்குவதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

கடந்த வருடம் அதைச் சரியாகச் செய்ததால்தான் ஜனாதிபதி அச்சமின்றி இவ்வருடமும் செய்வோம் என்றார். 50,000 வீடுகள் இருக்கிறதா என்று கேட்டதற்கு, அதற்கும் மேல் இருக்கிறது என்றேன்.

# தங்கத்தின் விலையில் நேற்று சிறிய வீழ்ச்சி

## 24 கரட் பவுண் 1,66,294 ரூபா



தங்கத்தின் விலையில் நேற்று சிறிய வீழ்ச்சி ஏற்பட்டது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தகவல்களின்படி, நேற்றைய தினம் தங்க அவுன்ஸின் விலையானது 650,240.18 ரூபாவாக பதிவாகியுள்ளது.நேற்றைய தினத்துடன் ஒப்பிடும் போது, இது சிறு வீழ்ச்சியையே காட்டுகிறது.

இதேவேளை, சந்தை நிலவரங்களின் படி இன்றைய தினம் தங்க அவுன்ஸின் விலை 646,540 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மேலும், 24 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 20,787 ரூபாவாக நேற்று பதிவானது. 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 166,294 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை,22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 152,436 ரூபாவாகியுள்ளது.அத்துடன் 22 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 19,055 ரூபாவாக உள்ளது.21 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 18,188 ரூபாவாகவும், 21 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 145,507 ரூபாவாகவும் நேற்று பதிவாகியிருந்தது.

எனினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளில் இருந்து மாற்றமுறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விமர்சனங்கள், குறைகளை விடுத்து மலையகத்தை முன்னேற்ற முயல வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் மீது குறைகளையும் விமர்சனங்களையும் முன்வைப்பதை விடுத்து ஜனாதிபதியுடன் இணைந்து, மலையக பிரதேசங்களை அபிவிருத்திசெய்ய முன்வர வேண்டும் என மருதபாண்டி ராமேஸ்வரன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதற்காக 4 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கியமை தொடர்பில், ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் சபையில் குறிப்பிட்டார்.



பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில், கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மலையக மக்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்து 200 வருடங்களாகியும் அவர்களுக்கு காணி மற்றும் வீட்டு உரிமை வழங்கப்படவில்லை.

எனினும், மலையகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கத்துடன் இணைந்து இ.தொ.கா தலைவர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர்.

தற்போது, மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதற்கு ஜனாதிபதி யோசனைகளை முன் வைத்துள்ளார். இதற்காக 4 பில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 'நாம் மலையகம்'என்ற நிகழ்வை கொழும்பில் நடத்தினோம்.

அதில், கலந்துகொண்ட வெளிநாட்டமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மலையக மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். இந்நிகழ்வையும் சிலர் விமர்சித்து வருகின்றனர்.

06 ஆம் பக்கம் பார்க்க...

# ரயில் மிதிபலகையில் பயணித்த நால்வர் வைத்தியசாலையில்



ரயிலின் மிதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்தந நால்வர்,சுவரில் மோதப்பட்டதில் காயமடைந்தனர். கொழும்பு கொம்பனித் தெரு ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள சுவரிலே,இவர்கள் மோதப்பட்டனர்.இச்சம்பவம் (20) இடம்பெற்றது.காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து பாணந்துறை நோக்கி பயணித்ததாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.காயமடைந்த நால்வரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

# தரம் ஐந்தில் சாதனை



மாபோலை அல்அஷ்ரப் மஹா வித்யாலயத்தில் முதல் முறையாக தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சிங்கள மொழிமூலம் தோற்றி,இரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களுடன்,தமிழ்மொழியில் தோற்றிய ஒரு மாணவரும் சித்தியடைந்துள்ளார். பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களின் பெயர்கள் சிங்கள மொழி மூலம் எம்,ஏ,எப், ஹனா (159) எஸ்,எச்,எப், சபா (158) தமிழ் மொழி மூலம் ராதீஸ்கண்ணா (159) இவர்களை, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை மற்றும் பழைய மாணவ சங்கம் என்பன வாழ்த்தியுள்ளன.

# கலாஓய நீர் மட்டம் உயர்வடைந்ததால் எழுவன்குளம் நுழைவாயிலுக்கு பூட்டு

கலாஓய நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் வில்பத்து வனப் பூங்காவுக்கான வனாத்தவில்லு எழுவன்குளம் நுழைவாயில், தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பூங்கா கட்டுப்பாட்டாளர் சுரங்க ரத்நாயக்க தெரிவித்தார். கலாஓய நீர் மட்ட வேகம் அதிகரித்துள்ளதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதனால்,புத்தளத்திலிருந்து வில்பத்து தேசிய வனப் பூங்காவிற்குச் செல்லும் எழுவன்குளம் குறுக்கு வீதியில்வெ ள்ளம் வடிந்தோடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எழுவன்குளம் நுழைவாயிலில் இருந்து வில்பத்துக்கான பாதையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இருந்த போதிலும், வில்பத்து பிரதான பகுதி அமைந்துள்ள நொச்சியாகம ஹூனுவிலகமவிற்கு அருகில் உள்ள பூங்காவிற்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு எவ்வித தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை. ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டு அதிலிருந்து பாரியளவிலான

06 ஆம் பக்கம் பார்க்க...

# வரவு செலவுத் திட்ட 02 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இன்றைய வாக்கெடுப்பின்போது எதிர்க்ட்சிகள் எதிர்த்து வாக்களிக்கத் தீர்மானித்துள்ளதுடன் ஆளும் கட்சியின் சில உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்க மாட்டார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை கடந்த 13 ஆம் திகதி நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார். அதனையடுத்து வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் கடந்த 7 நாட்களாக இடம்பெற்ற நிலையில், அதன் மீதான வாக்கெடுப்பே இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த வாக்கெடுப்பின்போது 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே .வி. பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியன தீர்மானித்துள்ளன. தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரான நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்க மாட்டார் என அவரது கட்சி வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பும் அதன் முன்னாள் பங்காளிக் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ மற்றும் தமிழ் மக்கள் விடுதலைக்கழகமான புளொட் ஆகியவை இன்று காலையே வாக்கெடுப்பை எதிர்ப்பதா அல்லது வாக்கெடுப்பில் பங்கேற்காது விடுவதா என்பது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சி தரப்பில் சுயாதீன தரப்பினராக செயற்படும் எம்.பிக்களில் சிலர் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

2024 ஆம் ஆண்டுக்காக இறப்பர் மீள் பயிர்ச்செய்கை / புதிய பயிர்ச்செய்கைக்காக அனுமதிப்பத்திரம் வழங்கல்

இறப்பர் மீள் பயிர்ச்செய்கை, புதிய பயிர்ச்செய்கைக்காக 2024 ஆம் ஆண்டுக்காக பயிர்ச்செய்கை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பங்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு ரூபா 5 /= பணத்தை செலுத்தி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
   (அ) இந்த திணைக்களத்தில் களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி மற்றும் மொனராகலையில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களில்
   (ஆ) பிராந்திய இறப்பர் அபிவிருத்தி அலுவலகங்களில்
   (இ) வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களின் விண்ணப்பதாரர்களுக்கு வவுனியா மாவட்ட பிராந்திய செயலாளர் அலுவலகத்தில் உள்ள இறப்பர் அபிவிருத்தி அதிகாரியிடம் இருந்து
2. விண்ணப்பங்கள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தில் ஏற்கப்படும்.

**நடவு பொருட்களை வழங்கல்**

1. சிறு தோட்ட உரித்துடைய பயிர்ச்செய்கையாளர்களுக்கு இணைக்கப்பட்ட இறப்பர் செடி இலவசமாக வழங்கப்படும்.
2. இலவசமாக வழங்கப்படுகின்ற செடியை நடுவதற்கு முன்னர் அல்லது நடப்பட்ட பின் அழிவுற்றால் அல்லது பயிரிடப்பட்ட காணி மாற்று பயன்பாட்டுக்கு ஈடுபடுத்தப்பட்டால் இறப்பர் செடிக்காக செலவான பணத்தை பயிர்ச்செய்கையாளர் மூலம் அரசுக்கு செலுத்த வேண்டும்.

**முக்கியம்**

1. 2024 ஆம் ஆண்டுக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுறுவதோடு, அங்கீகரிக்கப்படும் காலத்தில் பயிரிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அவ்வாறு பயிரிடுவதற்கு தவறுகின்ற ஒரு அனுமதிப்பத்திரத்தின் காலம் அதற்கு அப்பால் நீடிக்கப்படமாட்டாது. அதேபோன்று 2024 ஆம் ஆண்டின் மீள்/ புதிய பயிர்ச்செய்கைக்காக சலுகைக் கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்படமாட்டாது.

   க.கொ.:- 2023 ஆம் ஆண்டில் விண்ணப்பித்திருந்தாலும், என்றபோது அனுமதிப்பத்திரம் பெறாத காணி உரிமையாளர்களுக்காக 2024 ஆம் ஆண்டு அனுமதிப்பத்திரம் வழங்குவதில் முன்னுரிமை தரப்படுவதோடு மீண்டும் 2024 ஆம் ஆண்டுக்காக விண்ணப்பிப்பது தேவையற்றது என்பதை தயவுடன் கருத்தில்கொள்ளவும்.

**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,**
**இலக்கம் 465, கனஹேன, பத்தரமுல்லை.**
**தொ.பே. 0112-889447/0112-889446**
**மாதவ வர்ணகுலசூரிய**
**பணிப்பாளர் நாயகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல்

அம்பன்பொல கல் உடைக்கும் தளத்தில் பாறை உடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது

| விபரம் | ஒப்பந்த இலக்கம் | ஆள்துளைகளின் எண்ணிக்கை (Nos) |
|---|---|---|
| அம்பன்பொல கல் உடைக்கும் தளத்தில் பாறை உடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது | RDA/DPR/RBAM/2023/120 | 4,000 |

தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் "அம்பன்பொல கல் உடைக்கும் தளத்தில் பாறை உடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக" விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.11.21 ஆம் திகதி முதல் 2023.12.12 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை www.rda.gov.lk பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ரம்பேவ பிரதேச சபை

2024ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

ரம்பேவ பிரதேச சபைக்கு 2024ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்து கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2023-11-21ஆம் திகதி முதல் 2023-12-12ஆம் திகதி வரையில் ரம்பேவ பிரதேச சபையில் அல்லது Web முகவரி மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023.12.12ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை இந்தச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை Web முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Web Address - www.rambewaps.xyz

தொலைபேசி இல. 025-2266606

**எஸ்.டீ. ஜயவர்தன,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**பிரதேச சபை, ரம்பேவ.**

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்

ஒருபலம் புழுதி, கால்பலம் ஆகிற அளவுக்குப் பலமுறை உழுதாலே ஒரு பிடி எருவும் தேவையின்றிப் பயிர் செழித்து வளரும்.

## இயற்கை அனர்த்தங்களை அலட்சியப்படுத்தலாகாது!

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் தற்போது மழை பெய்து வருகின்றது. ஒருசில பிரதேசங்கள் தவிர அதிகளவான பிரதேசங்களில் மாலை வேளையில் தொடர்ச்சியாகப் பெய்துவருகின்ற தொடர்ச்சியான மழை காரணமாக பல இடங்களில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுகின்றது. வீடுகள், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கு கின்றன. விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மழை காரணமாக அதிகம் பாதிக்கப் படுகின்ற பிரதேசம் மலையகம் ஆகும். மண்சரிவுகள் பல இடங்களில் ஏற்பட்டுள்ளன. மக்கள் பலர் மண்ச ரிவு காரணமாக தங்களது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துமுள்ளனர்.

இலங்கையில் பெரும்பாலான மாகாணங்களில் பிற்பகலில் தொடங்கி மழை அல்லது இடியுடன் கூடிய மழை தொடர்ந்து பெய்வதற்கான அறிகுறிகள் தென் படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடிய அபாயமும் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆகவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். இன்றைய சீரற்ற கால நிலையை மக்கள் அலட்சியப்படுத்துதல் கூடாது. அவ்வாறு அலட்சியம் செய்வார்களானால் அனர்த்தங் களில் அகப்பட்டுக் கொள்ள வேண்டிய ஆபத்து ஏற்ப டலாம். பிரதானமாக வெள்ளம், இடிமின்னல், காற்று போன்ற இயற்கை அனர்த்தங்கள் விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் மக்கள் நடந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக ளைக் குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடந்த சில வாரங்களாக இடி மின்னல் தாக்கத்தின் காரணமாக மக்கள் ஒருசிலர் பரி தாபமாக மரணமடைந்தும் உள்ளனர் என்பது குறிப்பி டத்தக்கது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள ஆறுக ளில் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளதால், ஆறு களுக்கு அண்மித்த தாழ்நிலப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும். மழை தொடர்ந்து பெய்வதனால் ஆறுகள் எந்நேரத்தி லும் திடீரென்று பெருக்கெடுக்கும் ஆபத்து எதிர்நோக் கப்படுகின்றது.

ஆறுகள் மற்றும் குளங்களுக்கு நீராடச் செல்லு தல், படகுகளில் பொழுதுபோக்குக்காகச் செல்லுதல் போன்றன உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியவையென் பதை மறந்து விடலாகாது.

ஆறுகள் மோசமாகப் பெருக்கெடுக்குமானால் அதன் அயலில் வாழ்கின்ற மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுவதே பாதுகாப்பானதாகும். மக்கள் ஒவ் வொருவரும் தங்களது உயிர்ப்பாதுகாப்பு தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எச்சரிக்கை அறி குறிகள் விடயத்தில் அலட்சியம் காட்டுதல் புத்திசாலித்த னமானதல்ல.

அதேசமயம் மண்சரிவு குறித்த ஆபத்தும் தொடர்ந்து நீடித்து வருகின்றது. இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங் களில் மண்சரிவு அபாயம் நிலவுகின்ற பிரதேசங்க ளில் வாழ்கின்ற மக்கள் எச்சரிக்கை அறிகுறிகளை அவதானமாக செவிமடுத்து அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும். மலையகத்தின் சில பிரதேசங்கள் தொடர்ச்சியான மழையின் போது மண்சரிவு அபாயம் நிறைந்த பிரதேசங்களாக மாறி விடுகின்றன.

மின்னல் தாக்கமு ம் சாதாரணமானதல்ல. இலங் கையில் மின்னல் தாக்கத்தினால் வருடாந்தம் மக்கள் பலர் பரிதாபமாக உயிரிழக்கின்றனர். மிகக்குறுகிய நேரத்தில் ஏற்படும் மின்னல் தாக்க பாதிப்பிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். எனவே மின்னல் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு நம் மத்தியில் அவசியமாகும். அந்தவகையில் அனர்த்தத் திற்கு முன்னரான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், அனர்த்த வேளையின் போதான நடவடிக்கைகளையும நாம் முறையாகக் கடைப்பிடிக்கின்றபோது ஆபத்துக ளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இடிமின்னல் வேளைகளில் நாம் மிகவும் அவதான மாக இருத்தல் வேண்டும். வானிலை அவதான நிலை யத்தால் வெளியிடப்படும் வானிலை எதிர்வுகூறல் களை செவிமடுத்து அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும். இடியுடன் கூடிய மழை பெய்யும் என அறி விக்கப்படும்போது இந்நாட்களில் நாம் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.

இடிமின்னல் வேளைகளில் திறந்தவெளிகளில் நிற் பதையோ அல்லது விளையாடுவதையோ அல்லது வயல்களில் வேலை செய்து கொண்டிருப்பதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அந்தப் பரந்தவெளியில் உயர்ந்த பொருளாக நீங்களே இருக் கும்போது நேரடியாக மின்னல் உங்களைத் தாக்க லாம்.

சந்தர்ப்பவசத்தால் வெட்டவெளியில் இருக்க நேர்ந் தால் மின்னலின்போது தரையில் படுத்துவிடாதீர்கள். தரைக்கும் உடலுக்குமான தொடர்பினை இயலுமான ளவில் குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் அம ருங்கள். இதனால் ஓரளவேனும் மின்னல் தாக்கத்தின் பாதிப்பை குறைக்கலாம்.

இயற்கை அனர்த்தமானது அலட்சியத்துக்குரிய தன்று. அவை எமது உயிருக்கே ஆபத்தை ஏற்ப டுத்தி விடக்கூடும். ஆகவே முன்னெச்சரிக்கையை பேணுவதே பாதுகாப்பானதாகும்.

editor.tkn@lakehouse.lk

# பொத்துவில் மக்களின் நீண்டகால வேண்டுகோள் நிறைவேறியது

### முஷாரப் எம்.பியின் முயற்சியினால் பொத்துவில் உப பஸ்டிப்போ தரமுயர்வு; அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் வருகை தந்து பங்கேற்பு





பாராளுமன்ற உறுப்பினர் சட்டத் தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் மேற்கொண்ட முயற்சியினால் பொத்துவில் உப பஸ்டிப்போவை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற் கான நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரபின் அழைப்பின் பேரில் பிரதம அதிதிக ளாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டு பிரதான பஸ் டிப்போவை திறந்து வைத்தனர்.

கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யு. டி. வீரசிங்க, இலங்கை போக்கு வரத்துச் சபையின் தலைவர் பொறியியலா ளர் லலித் டி அல்விஸ், தேசிய அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத் தின் தலைவர் பொறியியலாளர் குசான் தேவிந்தா மற்றும் அரசாங்க அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பாரா ளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன் போது பொத்துவில் பஸ்டிப் போவுக்கு போக்குவரத்து அமைச்சரினால் நவீன சொகுசு பஸ் வண்டி வழங்கி வைக் கப்பட்டதுடன், 60 மில்லியன் ரூபாய் செலவில் புதிய கட்டடத்திற்கான அடிக் கல்லும் அதிதிகளினால் நாட்டி வைக்கப் பட்டது.

பொத்துவில் உப பஸ்டிப்போவை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற் கான தீர்மானம் கடந்த வருடம் அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக பொத்துவில் பஸ் டிப்போவில் மேற் கொள்ள வேண்டிய அபிவிருத்திக்கென பணம் ஒதுக்குவதில் பல சிரமங்கள் காணப்பட்டன.

குறித்த காலப்பகுதியில் பொத்துவில் பஸ்டிப்போ அமைந்துள்ள நிலத்தின் சட் டரீதியான உரிமை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேற்கொண்ட முயற் சியின் காரணமாக பஸ்டிப்போவுக்காக உரிமம் சட்டரீதியாக வழங்கப்பட்டிருந் தது.

இந்நிலையில் குறித்த பஸ்டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக் கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில் லியன் ரூபா பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் விடுத்த வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப் பட்டு ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம் பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதா கும்.

பஸ்டிப்போவாக தரமுயர்த்தும் நிகழ் வில் அதிதிகள் கோலாகலமாக அழைத்து வரப்பட்டதுடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அத்தோடு அதிதிகள் இங்கு நினைவுச்சின் னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பொத்துவில் பிரதேசத்திலுள்ள நிறுவ னங்கள், பொதுஅமைப்புகள், விளையாட் டுக் கழகங்கள், இளைஞர் அமைப்புகள், பள்ளிவாசல்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து ஊரின் விழாவாக இந்நி கழ்வை ஏற்பாடு செய்திருந்தமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் பெருந்திரளான பொதுமக் களும் கலந்து கொண்டிருந்தனர்.

பொத்துவிலுக்கான உப பஸ்டிப் போவை பிரதான டிப்போவாகத் தரமுயர்த் தித் தருமாறு அம்பாறை மாவட்டத்தி லுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பல ஆண்டுகளாக பொத்துவில் மக்கள் கோரிக்கை முன்வைத்திருந்தபோதும் அக்கோரிக்கை இதுவரை நிறைவேறாம லிருந்தது. இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முசாரப்பிடம் இவ்விடயத்தை மக்கள் முன்வைத்திருந்தனர். அதனையடுத்து மக் களின் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டி ருந்தது.





எஸ்.எம். அறூஸ்

# இராகலை டெல்மார் பிரதேசத்துக்கான திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம்

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தின் இராகலை நகரில் டெல்மார் பிரதேசம் அமைந்துள்ளது. கல்வியில் காணப்பட்ட பின்னடைவு நிலையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த ஊரில் கல்வி கற்று பல்க லைக்கழகம் மற்றும் கல்வியில் கல்லூரிக ளுக்கு தெரிவான மாணவ மாணவிகளால் சேர்ந்து உருவாக்கப்பட்ட அமைப்பே வள் ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றம் ஆகும்.

வள்ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றமா னது கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டு பல பணிகளில் ஈடுபட்டு வரு கின்றது. அவற்றில் ஒன்றாக டெல்மார் பிரதேசத்திற்கான திறன் வகுப்பறை உரு வாக்கப்பட்டுள்ளது.

திறன் வகுப்பறையானது இங்குள்ள மாணவர்களுக்கு இன்றைய காலகட்டத் தில் மிகவும் அவசியமானதொன்றாகக் காணப்படுகிறது. இது மாணவர்களின் இணையவழி கற்றல் நடவடிக்கைகளுக் கும் மாணவர்களின் தேடல்களுக்கும் மிக பயனுடையதாகக் காணப்படும் என்ற நோக்கத்தோடு வள்ளுவர் திறன் வகுப் பறையும் வள்ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றத்தினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு வலப்பனை கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பா ளர் யோகராஜா விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

அவர் தமது பிரதம உரையில், "இந்த திறன் வகுப்பறையானது எமது பிரதேசத் திற்குக் கிடைத்த பெரும் உதவியாகும். இந்த வகுப்பறையைப் பயன்படுத்தி எமது மாணவர்கள் கல்வியில் மேம்பட வேண்டும் என்பதே எமது நோக்கம். இதற்கு உதவி செய்த Ratnam Foundation, Vision Global Empowerment, Mr W. Harichandran (USA) அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்" எனத் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் இப்பாடசாலையின் அதிபர் நந்தகுமார் மற்றும் தோட்ட பொது மக்கள், மன்றத்தின் ஏனைய உறுப்பினர் கள், தன்னார்வலர்கள் பலர் கலந்து சிறப் பித்திருந்தனர்.








# பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காண சவூதி முன்னெடுக்கும் நடவடிக்கைகள்



பலஸ்தீன மக்களின் உரிமைகளுக் காக அவர்களுக்குப் பக்கபலமாக இருப்பதே பலஸ்தீனப் பிரச்சி னையில் சவூதி அரேபியாவின் நிலைப்பா டாகும். சவூதி அரேபிய இராச்சியத்தின் நிறுவனர் மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர்ரஹ்மான் ஆல் ஸஊத் காலத்தி லிருந்து இன்றுவரை அந்நிலைப்பாடு மாறாது நிலையாக இருந்து வருகிறது.

பலஸ்தீனத்தை ஆதரிக்கும் முதல் நாடாக சவூதி அரேபியா வரலாறு நெடு கிலும் இருந்து வந்துள்ளதோடு, இந்தப் பிரச்சினையானது அரேபியர்களின் முதன் மையான பிரச்சினை என்றும் பலஸ்தீனி யர்கள் தாம் விரும்புவது போல் கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்ட அவர்களின் சுதந்திர நாட்டை மீளப் பெறுதல் என்ற இலக்கை அடைந்து கொள்ளும் வரை அனைத்து அரேபி யர்களும் மற்றும் முஸ் லிம்களும் அதை ஆத ரிக்க வேண்டும் என்றும் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளது.

1982 ஆம் ஆண்டு மொராக்கோவில் பெஸ் நகரில் நடைபெற்ற அரபு உச்சி மாநாட்டில் மன்னர் பஹ்த் பின் அப்துல் அஸீஸின் சமாதானத் திட்டம் உட்பட, பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான பல மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் சவூதி அரேபியா அங்கம் வகித்துள்ளது. மன்னர் அப்துல் அஸீஸ் சமாதான திட்டமானது அரபு நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டதோடு அரபு அமைதி திட்டத்திற்கும் பின்னர் 1991 இல் மெட்ரிட் நகரில் நடைபெற்ற அமைதி மாநாட்டிற்கும் அடிப்படை யாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது பலஸ்தீனத்தின் காஸாவில், இஸ்ரேலியப் படைகளின் அத்துமீறல்க ளால் கடுமையான பிரச்சினைகள் நிகழ்ந் தவண்ணம் உள்ளன.

குழந்தைகள், பெண்கள் மற்றும் முதி யவர்கள் உட்பட பல ஆயிரக்கணக் கான அப்பாவி மக்கள் கொல்லப்பட் டும் காயப்பட்டும் உள்ளதோடு தங்கள் சொந்த இடங்களிள் இருந்தும் வெளி யேற்றப்பட்டுள்ளனர்.

பலஸ்தீன பிரச்சினையை நியாயமான முறையில் தீர்ப்பதையே அரபு தலைவர் கள் விரும்புகிறார்கள். இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் ஆகிய இரு பிரதேசங்களை கொண்ட இரண்டு தனிநாடுகளைக் கொண்டிருப்பதன் மூலம் அமைதியை உருவாக்க முடியும் என்பதை அவர்கள் எதிர்பாரப்பதோடு, கிழக்கு ஜெருச லேமை அதன் தலைநகராக கொண்டும் குறிப்பாக 1967 முதல் பலஸ்தீனுக்கு சொத்தமாக இருந்த பகுதிகளிலும் பலஸ்தீனின் பூரண கட்டுப்பாடு நிலவ வேண்டும் என்பதையும் அவர்கள் எதிர் பார்க்கின்றனர். பாலஸ்தீன நிலத்தின் மீதான இஸ்ரேலின் கட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வரவும், தீர்வு காண்பதை கடினமாக்கும் நடவடிக்கை களை நிறுத்தவும் உலக நாடுகளை ஜித்தா பிரகடனமானது வேண்டி நிற்கிறது என சவூதி அரேபியாவில் நடைபெற்ற வளைகுடா நாடுகள் மற்றும் ஆசியான் உச்சி மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட தனது உரையில் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தெரிவித்திருந்தார்.

சவூதி அரேபியா காஸா பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக தொடர்ந்தும் நிவாரண உதவிகளை அனுப்பி வருகி றது. இது பாலஸ்தீனிய மக்களுடன் அவர்கள் சந்திக்கும் பல்வேறு நெருக்கடி கள் மற்றும் இன்னல்களில்களின் போது அவர்களுடன் நிற்பதாக வாக்களிக்கப் பட்ட சவூதி அரேபியாவின் வரலாற்றுப் பங்களிப்பின் ஒரு பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

காலித் ஹமூத் அல்கஹ்தானி
(இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர்)



# உறவின் பாலமாக அன்னை மரியாள்

## மாதா ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட திருநாள் இன்று

அன்னை மரியாள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழாவை திருச்சபை பிரதி வருடமும் நவம்பர் 21ஆம் திகதி கொண்டாடுகிறது.

எருசலேமில் கி.பி.543 ல் நவம்பர் 21 ம் நாள் மரியாள் நோவா ஆலயமானது அர்ச்சிக்கப்பட்டது. அந்த திருவிழா தான் அன்னை மரியாள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழாவைக் கொண்டாடுவதற்கு ஆதாரமாக உள்ளது.

காணிக்கை அன்னை என்ற பெயரில் அழைக்கப்படும் அன்னை மரியாளின் பெயர் இந்த திருவிழாவில் பெறப்பட்டதுதான். இதற்கு விவிலிய ஆதாரங்களோ இறையியலோ கிடையாது.இது மரபின் அடிப்படையில் கொண்டாடப்பட்ட திருவிழாவாகும்.

இம்மரபின்படி அன்னை மரியாள் அவரது மூன்றாம் வயதில் தன்னுடைய பெற்றோரால் ஆலயத்தில் இறைவனுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப் பட்டார்.

அன்றிலிருந்துஆலயத்தில் தங்கி ஆண்டவரின் பணியைச்செய்வதற்கு உதவி செய்தாள் என்றும் இந்த பாரம்பரியம் சுட்டிக்காட்டுகிறது.

இந்த விழா கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. மரபின் அடிப்படையில் என்பதால் திருத்தந்தையர்கள் இந்த திருவிழாவை அதிகாரபூர்வமாகக் தயங்கினார்கள். ஆயினும், திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துஸ் இவ்விழாவினை வழிபாட்டு நாட்குறிப்பேட்டில் இணைத்துக் கொண்டுள்ளார்.

இரண்டாம் வத்திக்கான சங்கம் புனைக்கதைகளை ஒட்டி கொண்டாடப்படும் பல திருவிழாக்களை திருவழிபாட்டிலிருந்து நீக்கியது. ஆனால், இந்த திருவிழாவை அது நீக்கவில்லை.

அன்னை மரியாள் சிறுவயதிலேயே தன்னுடைய வாழ்வை இறைவனுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறார். சிறு வயதிலிருந்தே, ஆலயப்பணிகளில் தன்னை இணைத்துக்கொள்கிறார். ஆண்டவரின் அடிமை என்று சொன்ன அவருடைய வார்த்தைகள் அந்த நேரத்தில் வந்தது அல்ல. அது தான் அவளது ஆன்மீகமாகவே இருந்தது. அந்த ஆன்மீகத்திற்கான அடித்தளம் இந்த விழாவிலிருந்துதான் பிறக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் உறவுகளுக்குள் இடர்கள் ஏராளம். பெற்ற தாயை, தந்தையை, உடன் பிறப்புகளை, உறவுகளை, நட்பை உதறித்தள்ளி ஊதாரியாய் அலைகின்றவர்கள் ஏராளம்.அலைய வைப்பவர்கள் ஏராளம் ஏராளம்.

இச் சூழலில் நம் இறைவன் இயேசு உறவின் உச்ச நிலையை நமக்குஅன்னை மரியாளை வைத்து அறிமுகம் செய்கிறார்.

அன்னை மரியாளின் குழந்தைப் பருவம் தொடர்பான விடயங்கள் யாக்கோபின் நற்செய்தியில் காணக் கிடைக்கின்றன.

மரியாளின் பெற்றோர்களாகிய சுவக்கீன் மற்றும் அன்னா இருவரும் முதிர்ந்த வயது அடையும் வரை குழந்தை இல்லாமல் இருந்தார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் மன்றாடி வந்தார்கள். இறைவனின் வாக்கு இவர்களுக்கு அருளப்பட்டது. அதன்படி மரியாள் பிறந்தார்.

குழந்தை பிறந்ததற்கு நன்றியாக தங்கள் மகளை கூட்டிக்கொண்டு எருசலேம் ஆலயத்திற்கு அவர்கள் சென்றார்கள் ஆண்டவருக்கு அவரை காணிக்கையாக்கினார்கள். அதன் பிறகு அவர் இளம் பெண் ஆவது வரை ஆலயத்தில் இருந்தார் என்று அதில் யாக்கோபு குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று புனித மத்தேயு நற்செய்தியிலும் அது தொடர்பில் தெரிவிக்கப்படுகிறது. மரியாளுக்கு மூன்று வயது ஆன போது அவரது பெற்றோர் தங்களது நேர்த்தியை நிறைவேற்றுவதற்காக ஆலயத்திற்கு தங்கள் மகள் மகளை அழைத்துச் சென்றார்கள். அதன் பிறகு மரியாள் ஆலயத்திலேயே கல்வி கற்றார். இறைவனின் அன்னையாகவும் தூய்மையாக தயாரிக்கப்பட்டார் என்று அந்த நற்செய்தி குறிப்பிடுகின்றது.

கிறிஸ்துவின் வேறு பலன்களை முன்னிட்டு பிறப்பதற்கு முன்பே பாவத்திலிருந்து காக்கப் பட்ட அன்னை மரியாள் உலகத்தின் மீட்பராம் இயேசுவை கருத்தாங்கி தொடர்ந்து பாது காக்கப்பட்டு தூயவராக விளங்கினார் என்பதற்கு இந்த விழா சிறந்த சான்றாகும்.

இறை வார்த்தையில் தந்தை இறைவனின் திருவுளத்தை கண்டு கடைப்பிடித்து வாழ்வதில் உருவாகும் ஆன்மீக உறவே உயரந்தது. அங்கே மனித மாண்பும் மதிப்புறும். இறை அருளும் பெருகும். இத்தகைய இறை உணர்வில் உருவாகும் உறவு மனிதனின் வாழ்வில் வசந்தத்தை எப்போதும் வீசச்செய்யும்.

அதற்காகத்தான் அன்னை மரியாளை உறவின் பாலமாக நமக்குத் தாரை வார்த்துத் தருகிறார் இறைவன். இன்று கொண்டாடப்படும் இந்த விழா அன்னை மரியாளைப் போல் விசுவாசத்தில் உறுதியானவர்களாக நம்மை வளர்த்துக் கொள்ள வழி வகுக்கப்படும்.

**எல். செல்வா**








# கிறிஸ்து அரசர் பெருவிழா

## மக்கள் மனம் எனும் அரியணையில் இயேசு

கிறிஸ்துவை ஓர் அரசராகக் கொண்டாட கடந்த ஞாயிறன்று தாய் திருச்சபை எமக்கு அழைப்பு விடுத்தது. இவ்விழா உருவாக, முதல் உலகப்போர் ஒரு காரணமாக அமைந்தது. இவ்விழாவைக் குறித்தும் உண்மையான தலைவர்களிடையே நிலவ வேண்டிய பண்புகளைக் குறித்தும் சிந்திக்க நமக்கு இந்த விழா வாய்ப்பளிக்கின்றது.

முதல் உலகப்போர் நிகழ்ந்த வேளையில் திருஅவையின் தலைவராகப் பணியாற்றிய திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் அவர்கள், அந்தப் போரை, "பயனற்றப் படுகொலை" (*useless massacre*) என்றும், "கலாசாரம் மிக்க ஐரோப்பாவின் தற்கொலை" (*the suicide of civilized Europe*) என்றும் குறிப்பிட்டார்.

முதல் உலகப்போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்து 1922ஆம் ஆண்டு திருஅவையின் தலைமைப்பணியை ஏற்ற திருத்தந்தை 11ம் பயஸ் அவர்கள் அரசர்கள் மற்றும் அரச தலைவர்களின் அகந்தையும், பேராசையும் முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணங்களாய் இருந்தன என்பதை உணர்ந்திருந்தார்.

இந்த அரசர்களுக்கு ஒரு மாற்று அடையாளமாக, 1925ம் ஆண்டு, கிறிஸ்துவை அனைத்துலக அரசரென அறிவித்தார். கிறிஸ்துவின் அரசர் தன்மையையும் அவர் நிறுவ வந்த அரசையும் கண்டு மக்கள் குறிப்பாக அரச தலைவர்கள் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென இத்திருநாள் ஏற்படுத்தப்பட்டது.

கிறிஸ்து அரசர் திருநாளைப் பற்றி குறிப்பிடும்போது ஆயன், மீட்பர், செம்மறி, வழி, ஒளி, நாம் தரும் வழக்கமான ஆனால், தவறான இந்த இலக்கணத்தை வைத்துப் பார்த்தால் இயேசு கட்டாயம் ஓர் அரசர் அல்ல. ஆனால் மற்றொரு கோணத்தில் இயேசுவும் ஓர் அரசர்தான்.

ஓர் அரசை நிறுவியவர். அவர் நிறுவிய அரசுக்கு நிலப்பரப்பு கிடையாது. நிலம் இல்லை என்றால் போர் இல்லை. போட்டிகள் இல்லை. அதைப் பாதுகாக்கக் கோட்டைகள் தேவையில்லை.படைபலம் தேவையில்லை எதுவுமே தேவையற்றது.

இன்னும் ஆழமான ஓர் உண்மை இதில் உள்ளது. எதுவுமே தேவையில்லாமல் இறைவன் ஒருவரே தேவை. அவர் ஒருவரே போதும் என்று சொல்லக்கூடிய மனங்களில் மட்டுமே இந்த அரசு நிறுவப்படும்.

யார் பெரியவர் என்ற எண்ணமே இல்லாத இந்த அரசில் எல்லாருக்கும் அரியணை உண்டு. எல்லாரும் இங்கு அரசர்கள்! இந்த அரசர்கள் மத்தியில் இயேசு ஓர் உயர்ந்த நடு நாயகமான அரியணையில் வீற்றிருப்பார் என்று நாம் தேடினால் ஏமாந்துபோவோம். காரணம்?... அவர் நமக்குமுன் மண்டியிட்டு நம் காலடிகளைக் கழுவிக்கொண்டிருப்பார்.

மக்கள் அனைவரையும் அரியணை ஏற்றி அதன் விளைவாக அம் மக்களின் மனம் எனும் அரியணையில் அமரும் இயேசு என்ற மன்னரின் வேறுபட்ட அரச தன்மையைக் கொண்டாடத்தான் இந்த கிறிஸ்து அரசர் திருநாள்.

உண்மைக்காக வாழ்ந்தவர்கள் இன்றும்



வாழ்வு என்ற பல கோணங்களில் கிறிஸ்துவை எண்ணிப்பார்த்து மன நிறைவு பெறுகிறோம். ஆனால், கிறிஸ்துவை அரசராக எண்ணும் போது மனதில் சங்கடங்கள் உருவாகின்றன.

அரசர் என்றதும் மனதில் எழும் எண்ணங்கள் மனத்திரையில் தோன்றும் காட்சிகள் தான் இந்தச் சங்கடத்தின் முக்கிய காரணம். அரசர் என்றால்?... ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ பராக்கிரம... என்ற அர்த்த மற்ற பல அடைமொழிகளைச் சுமந்துத் திரியும் உருவம்! பட்டாடையும், வைரமும் உடுத்தி, பலரது தோள்களை அழுத்தி வதைக்கும் பல்லக்கில் அமர்ந்துவரும் கொழுத்த உருவம்! ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் சடலங்களைப் படிக்கற்களாக்கி, அரியணை ஏறும் அரக்க உருவம்.

அரசர் என்றதும் குப்பையாய் வந்துசேரும் இந்தக் கற்பனை உருவங்களுக்கும் இயேசுவுக்கும் எள்ளளவும் சம்பந்தமில்லையே. பிறகு எப்படி இயேசுவை அரசர் என்று ஏற்றுக் கொள்வது?சங்கடத்தின்அடிப்படை இதுதான். அரசர் என்ற சொல்லுக்கு வாழ்பவர்கள் அலங்கார அரியணைகளில் ஏற முடியாது. அவர்களில் பலர் சிலுவைகளில் மட்டுமே ஏற்றப்படுவார்கள். ஆனால், அவர்கள் அனைவருமே இறைவனின் அரசில் என்றென்றும் அரியணையில் அமர்வர் என்ற உண்மையே இந்தத் திருநாள் நமக்குச் சொல்லித்தரும் பாடம்.

உன்னதமான இந்தப் பாடத்தைப் பயில கிறிஸ்து அரசருக்கு இவ்வுலகம் தந்த சிலுவை என்ற அரியணையை நாமும் நம்பிக்கையுடன் அணுகிச் செல்வோம்.

"அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற பழமொழியை நாம் அறிவோம். ஆனால், மற்றொரு கோணத்தில் சிந்தித்தால், "குடிகள் எவ்வழி அரசன் அவ்வழி" என்றும் சொல்லத் தோன்றுகிறது.

குடிமக்கள் அடிமைகளாக வாழ தீர்மானித்துவிட்டால் அரசர்கள் கட்டுப்பாடற்ற அதிகாரத்துடன் ஆள்வர் என்பதும் உண்மை. கிறிஸ்துவை அனைத்துலக அரசர் என்று கொண்டாடும் இந்த விழாவில் அடிமைகளாக வாழ்வதில் சுகம் கண்டு தலைவர்களை துதிபாடி வாழும் மக்கள் தங்கள் தவறுகளிலிருந்து விழித்தெழ வேண்டும் . உண்மையான தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தலைமைப் பொறுப்புகளை வழங்கி அவர்களுடன் இணைந்து நீதி நிறைந்த உலகை உருவாக்க முன்வர வேண்டும் என்றும் அனைத்துலக அரசர் கிறிஸ்துவிடம் மன்றாடுவோம்.

**ஜெரோம் லூயிஸ்**

# கொடையாக பெற்றதைக் கொடையாக கொடுப்போம்

**திருத்தந்தை பிரான்சிஸ்**



இறைவனிடமிருந்து அன்பைப் பரிசாக கொடையாகப் பெற்றுள்ள நாம் அதனை மற்றவர்களுக்குக் கொடையாகக் கொடுக்க அழைக்கப்படுகிறோம் என்றும், நம்மைப் பாதுகாத்த இயேசுவின் அன்பு, நம் காயங்களை ஆற்றிய அவரது இரக்கம் மற்றும் மகிழ்ச்சி, நம் இதயங்களைத் திறந்த தூய ஆவியின் ஒளி ஆகியவை இறைவன் நமக்கு அளிக்கும் கொடைகள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 19 கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுக்காலத்தின் 33ஆம் ஞாயிறன்று ஏழாவது உலக வறியோர் தினத்தை முன்னிட்டு வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்ற திருப்பலி மறையுரையின்போதே திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

வீட்டுத்தலைவரின் பயணமானது இயேசுவின் மறைபொருள், கடவுள் மனிதனைப் படைத்தது இயேசுவின் உயிர்ப்பு, விண்ணகத்திற்கு எழுந்து செல்லுதல் போன்றவற்றை சிந்திக்க வைக்கின்றது என்றும், தந்தையிடமிருந்து வந்து மனித குலத்தை சந்திக்க வந்தவர் மரணத்தை வென்று மீண்டும் தந்தையிடமே திரும்பினார் என்றும் எடுத்துரைத்தார்.

.மனித நேயத்தோடு நம்மை ஏற்றுக் கொண்ட இயேசு நல்ல சமாரியன் போல நம் காயங்களை ஆற்றினார், இறைமனித வாழ்வால் நம்மை வளப்படுத்த ஏழையானார், சிலுவையில் அறையப்பட்டு தன்னையே பலியாக்கினார் என்றும் கூறினார் திருத்தந்தை.

நம்மைச் சுற்றிலும் கடவுளின் அன்பைப் பெருக்காவிட்டால் நமது வாழ்க்கை மிகவும் இருளில் மூழ்கிவிடும் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், வறுமை ஒரு ஊழல், இறைவன் திரும்பி வரும் நாளின் போது நம்மிடம் கணக்குக் கேட்பார் என்றும் கூறினார்.

நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட அருளின்படியும் இறைவன் நம்மிடம் ஒப்படைத்த பணியின்படியும், தான தர்மங்களைப் பெருக்குவதற்கும், ஏழைகளுடன் நெருங்கிப் பழகுவதற்கும் நம்மை நாம் அர்ப்பணித்துக்கொள்ள செபிப்போம் என்றும் இதனால் இறுதி நாளில் நன்று நன்று நம்பிக்கையுள்ள நல்ல பணியாளரே உம் தலைவரின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும் என்று இயேசு கூறுவதைக் கேட்க முடியும் என்றும் கூறினார் திருத்தந்தை.

**மெரினா ராஜ்**

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 98 ஆவது ஜெயந்தி தினம்



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 98 வது தெய்வீக வருகை நவம்பர் 23 ஆம்திகதி நினைவு கூரப்படுகிறது. இதை யொட்டி உலகெங்கிலுமுள்ள பக்தர்கள் பல நிகழ்வுகளில் ஒன்றுபட்டு இந்த மகா அவதாரத்தைக் கொண்டாடுகிறார்கள். பாபாவின் சர்வ தர்ம கொள்கையின் சாரம் உலகில் அழியா முத்திரை பதித்துள்ளது. பாபாவால் நிறுவப்பட்ட ஸ்ரீ சத்ய சாயி சர்வதேச அமைப்பு, உலகின் 160 நாடுகளில் வியாபித்துள்ளது. இதன் உறுப்பினர்கள் உலகெங்கும் சமூகங்களுக்குப் பயனளிக்கும் வகையில் சேவைகளில் ஈடுபடுகின்றனர்.

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகள், இலட்சக்கணக்கான பக்தர்களின் இதயங்களில் ஒரு உத்வேகமாகவும், வழிகாட்டியாகவும், உயிரோட்டத்துடன் தொடர்ந்தும் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன. உலகளவில் போற்றப்படும் ஆன்மீகக் குருவான ஸ்ரீ சத்ய சாயிபாபா, பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் மதங்களைப் பின்பற்றுபவர்களால் தெய்வீக அவதாரமாக மதிக்கப்படுகிறார். உண்மை, சரியான நடத்தை, அமைதி, அன்பு மற்றும் அகிம்சை ஆகிய கொள்கைகளின் மூலமான மனித குலத்தின் ஆன்மீக மறுமலர்ச்சியை அவரது செய்தி வலியுறுத்தி நிற்கிறது. ஸ்ரீ சத்ய சாயி பாபா, தானே முன்னுதாரணமாக நின்று, "மனிதனுக்குச் செய்யும் சேவையை கடவுளுக்குச் செய்யும் சேவையாக" பார்க்க இலட்சக் கணக்கானவர்களைத் தூண்டியுள்ளார். இலவச மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், கல்வி முயற்சிகள், குடிநீர் விநியோகம் மற்றும் வீட்டுத் திட்டங்கள் உட்பட பல சேவைத் திட்டங்களில் அவரது அன்பின் ஆழம் தெளிவாகத் தெரிகிறது. ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தன்னலமற்ற மனிதாபிமான முயற்சிகள் அவரது மங்காப் புகழுக்குச் சான்றாக விளங்குகின்றன. எதிர்வரும் நவம்பர் 23 ஆம்திகதி, பின்வரும் இடங்களில் பாபாவின் ஜெயந்தி தின விஷேட நிகழ்ச்சிகள் நடைபெறும்:

சாய்மந்திர், 22 பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 7 காலை 5:30 முதல் 8:30 வரை

'சிவானந்த நிலையம்' சைவ மங்கையர் வித்தியாலயம், 23 ருத்ரா மாவத்தை, கொழும்பு 6 காலை 5 மணிமுதல் 6 மணி வரை மற்றும் காலை 10:30 முதல் 12 மணி வரை

இராமகிருஷ்ணமிஷன், 40 ராமகிருஷ்ண வீதி, கொழும்பு 6 மாலை 5:30 முதல் இரவு 8:30 வரை இந்நிகழ்வுகளில் பஜனை, நகர சங்கீர்த்தனம், இசை, நடனம் மற்றும் நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இம்மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள அனைவரையும் அழைப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## எதிர்க்கட்சிகளின் பகற் கனவை...

வரவு செலவுத் திட்டம், நிச்சயம் அதிக வாக்குகளுடன் நிறைவேற்றப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்:

நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்பட்ட அரசியல் நோக்கற்ற தீர்மானங்களால், நாடு ஸ்திரத் தன்மை அடைந்துள்ளது. அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

மேலும் மக்களுக்கு நிவாரணம் கிடைக்காது என எண்ணிய எதிர்க் கட்சிகளின் கனவை சிதைப்பதில், இவ்வருட வரவு செலவு திட்டம் வெற்றி கண்டுள்ளது.

2024 வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பதுடன் சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அங்கவீனருக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் மலையக மக்களுக்கு முழு காணி உரிமை வழங்குதல், பயன்படுத்தப்படாத காணிகளை விவசாயிகளுக்கு வழங்குதல், உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் போன்ற நீண்ட கால வேலைத்திட்டங்களும் இதில்,உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, நவீன உலகிற்குப் பொருத்தமான தொழில் வல்லுநர்களை உருவாக்கும் திட்டங்களும் பட் ஜட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளால் மாத்திரம் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. அதற்கு நீண்ட கால வேலைத்திட்டங்கள் தேவை. இந்த நீண்ட கால வேலைத் திட்டங்களில் 2034 ஆம் ஆண்டுக்குள் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துவதும் அடங்குகின்றது. மேலும், இதில் நேரடி வரிகளை அதிகரிக்கும் திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

## சுகாதார அமைச்சின் உயர்...

அந்த மருந்து நிறுவனம் இறக்குமதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இந்நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தரமற்ற மருந்தை இறக்குமதி செய்ததன் மூலம் 130 மில்லியன் ரூபா நிதி மோசடி நடந்துள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி...

தெரிவித்தார். சுற்றுலா, விளையாட்டு, விவசாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் என்பன முதலீட்டுக்குத் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியில் அதிக பங்களிப்பை வழங்கக் கூடிய பெல்ட் என்ட் ரோட் (Belt & Road) திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கு, பங்காளரான இலங்கை போன்ற நாடுகள் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் .

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்குள் (RCEP) பிரவேசிக்க இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விளக்கப்பட்டது.

இந்துசமுத்திரம், கடற்பயணத்திற்கான சுதந்திர வலயமாக இருக்க வேண்டும் எனவும், புவிசார் அதிகாரப் போட்டியின்றி அமைதியான வலயமாக பேண இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

சீனாஇலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மிக விரைவில் நடைமுறைப்படுத்தவும் இரு தரப்பும் உடன்பாடு தெரிவித்தன.

இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஷென் யிங்க், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இதில்,கலந்து கொண்டனர்.

## குழு கூட்டங்களில் வெளியார்களை...

இதுபற்றி சபாநயகர் அறிவித்துள்ளார். பாராளுமன்றத்தில், நேற்று விசேட அறிவித்தலொன்றின் ஊடாக சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

"கோப்" எனப்படும் அரசாங்கத்தின் பொறுப்பு, முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அண்மையில், ஸ்ரீ லங்கா கிரிக்கெட் அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார, அவரது மகனான கனிஷ்க பண்டாரவை அழைத்து வந்திருந்தார். இதுதொடர்பில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலே, சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

## குற்றச்சாட்டை நிரூபித்தால்...

(20) பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த அவர்: பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளாத நேரத்தில், தன்மீதும், தன்னுடைய குழுவை சேர்ந்த இருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பொய்யான குற்றசசாட்டுக்களை மறுக்கிறேன். என்மீது முன்வைக்கப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டை விசாரணை செய்யுங்கள்.

அது நிரூபிக்கப்பட்டால் உடன் பாராளுமன்ற பதவியிலிருந்து விலகத் தயார். என்மீது குற்றம் சுமத்திய பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதாரன, இக்குற்றச்சாட்டு தொடர்பில் குற்றவாளியாக இனம்காணப்பட்டால் அவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.இவ்வாறு, கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார பாராளுமன்றத்தில் கூறினார்.

## விளக்கமறியலில் கைதி மரணம்...

குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சித்தன்கேணி பகுதியை சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 25) எனும் இளைஞனின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து,இவ்விளைஞன், யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்விளைஞன் உயிரிழந்தார். இதையடுத்து,இவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை உடற்கூற்றுப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. பரிசோதனையில்,துன்புறுத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக சட்ட வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு,பொலிஸாரே உயிரிழப்புக்கு காரணமென தெரியவந்துள்ளது. இதையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸார் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 15 வருடங்களுடன் ஒப்பிடுகையில்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வட மாகாணத்துக்கான பூநகரித் திட்டம், பாலியாறு குடிநீர்திட்டம். மீள்குடியேற்றம், வீடமைப்புத் திட்டம் ,காணாமற்போனோருக்கான ஒதுக்கீடுகள் என சில சிறந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவை நடைமுறைப்படுத்தப்படுமா என்பதிலேயே சந்தேகமுள்ளது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக்கட்சி மாநாட்டை நடத்தி 13ஆவதுஅரசியலமைப்புத்திருத்தம், காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு வாக்குறுதி வழங்கினார்.

ஆனால், அவை எதுவுமே நடைபெறவில்லை. யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாகாணங்களாக வடக்கு,கிழக்கு மாகாணங்கள் காணப்படுகின்றன.

எனினும், யுத்தம் முடிவடைந்து வருடங்கள் பல கடந்தும் இன்று வரை விசேட தேவையுடைய மாகாணங்களாக வடக்கு,கிழக்கு மாகாணங்கள் அறிவிக்கப்படவில்லை. வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் பொருளாதாரங்களும் பாதுகாக்கப்படவில்லை.

மைத்திரி ரணில் ஆட்சிக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. ஆனால் அந்த நல்லாட்சி வரவு செலவுத் திட்டத்திலும் வடக்கு,கிழக்கு முற்றாக புறக்கணிக்கப்பட்டது.

சர்வதேச உதவி வழங்குவோர் மாநாட்டை நடத்தி அதன் மூலம் வடக்கு,கிழக்கு அபிவிருத்தி செய்யப்படுமென உறுதி வழங்கப்பட்டது.

ஆனால் அதற்குள் 52 நாள் ஆட்சியில் மாற்றம் வந்ததால் எதுவும் நடக்கவில்லை.

யுத்தத்தினால் 30 வருடங்களாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள வடக்கு,கிழக்கு மக்கள் கொரோனாவாலும் அதன் பின்னர் பொருளாதர நெருக்கடியினாலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

## அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு...

வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பொத்துவில் டிப்போவை, பிரதான டிப்போவாக தரம் உயர்த்தி நவீனப்படுத்த அமைச்சர் பந்துல குணவர்த்தன எடுத்த முயற்சிக்கே அப்பகுதி மக்கள் நேரடியாக நன்றி தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சருடன் மக்கள் கலந்துரையாடி நன்றிகளை தெரிவித்தனர். பாராளுமன்ற உறுப்பினர் முசஷாரபின் வேண்டுகோளின் பேரில் அமைச்சர் இவ்வுதவியை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாணத்தில் மேலும் பல உப டிப்போக்கள் இன்னமும் கீழ் நிலையில் உள்ளதாகவும் அவற்றையும் அமைச்சர் பந்துல குணவர்தன புனரமைத்து, மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் இதன்போது, மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இங்கு பேசிய அமைச்சர்:

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் நீண்டகாலமாக முடங்கிக் கிடக்கும் நிலையில், பொத்துவில் டிப்போ தர முயர்த்தப்பட் டமை,கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டத்தின் புதிய ஆரம்பமாகும். பொத்துவில் மற்றும் லௌகல பகுதிகளை உள்ளடக்கி டிப்போ அத்தியட்சகர் ஒருவரின் கீழ் போக்குவரத்து சேவையை மிகவும் திறம்படவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ள முடியும். இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையை டிசம்பர் 31இல், நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் காலாண்டில், இதனை முற்றாக நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் மட்டுமன்றி உலக முழுவதும் பிரசித்திபெற்ற இடம் அறுகம்பே. அறுகம்பேயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வரையிலான பயணம் மிகவும் விலை உயர்ந்தது. தனியார் வாகனத்தை பயன்படுத்தினால் 50,000 ரூபாவுக்கு மேல் செலவாகும். நாளை முதல் 2900 ரூபாவிற்கு சொகுசு பஸ்வண்டியில் அறுகம்பேயிலிருந்து விமான நிலையத்திற்கு செல்வதற்கான புதிய பஸ் சேவையை ஆரம்பிக்கவுள்ளோம். அரசாங்க திட்டங்களை விமர்சித்தும், நிராகரித்தும் வருபவர், ஒருவேளை ஆட்சியைப் பிடித்தாலும் இரண்டு வாரங்களுக்கே அதில் நிலைப்பார். கிரிக்கெட் நெருக்கடியைப் பார்ப்பது போன்று கூட தற்போதைய நெருக்கடியை பொருட்படுத்தவில்லை. அரசாங்க அதிகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலுள்ளவர்,இந்த கடனை எப்படி செலுத்துவது என்பதை நாட்டுக்கு விளக்க வேண்டும் என்றார்.

## நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு...

முயற்சிகளுக்கு, இத்தரப்பினர் ஆதரவு தெரிவித்திருந்ததாகவும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதுபற்றி மேலும் கருத்து தெரிவித்த நாமல்ராஜபக்ஷ: தமது கட்சி உறுப்பினர்கள் மாத்திரமின்றி ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்க வேண்டும். நாட்டில்,2015 இல் நடைபெற்ற ன் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார்.அந்த நேரத்தில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7 வீதமாக பதிவாகியிருந்தது. இந்நிலையில், 2020 ஆம் ஆண்டளவில் பொருளாதார வளர்ச்சி ஏழு வீதத்திலிருந்து இரண்டு வீதாமாக குறைவடைந்திருந்தது. இவ்வாறாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடைந்தமைக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன பொறுப்புக் கூற வேண்டும். இந்நிலையிலேயே, 2019 இல், ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டபாய ராஜபக்ஷ தமது கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப, வரிகளை குறைத்திருந்தார். எனவே, மக்கள் ஆணை மூலம் தெரிவான கோட்டபாய ராஜபக்ஷ வரிகளை குறைக்க நடவடிக்கை எடுத்தமை பொருளாதார நெருக்கடிக்கு காரணமென கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எதிர்க்கட்சியினர் எந்த அடிப்படையில் கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தை தவறான முறையில் வெளிக்காட்ட முயற்சிப்பதாகவும் அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

## இந்தியாவின் தோல்வியை...

அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

விளையாட்டுப் போட்டி ஒன்றில் வெற்றி தோல்வி என்பது சாதாரண விடயம். அந்த வகையில் கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டியின் (2023) இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றியீட்டியது. இதனை அடுத்து இலங்கையில் சில பகுதிகளில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை சிலர் வெளிப்படுத்தியுள்ளனர். அவுஸ்திரேலியா வென்றுவிட்டது என்பதை விடவும் இந்திய அணி தோல்வி அடைந்துவிட்டது என்பதையே அவர்கள் கொண்டாடினர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. பொருளாதார நெருக்கடியில், இந்தியா உதவியிருக்காவிட்டால் இலங்கை சோமாலியா என்ற நிலையில்தான் இருந்திருக்கும். பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலையும் இருந்திருக்காது. ஆகவே, நன்றி கெட்டத்தனமாக இந்தியாவின் தோல்வியை கொண்டாடுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் 101 கிலோ...

மீட்கப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 3 கோடி ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காங்கேசந்துறை கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை யில்,இந்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

## உலக தொலைக்காட்சி...

1996 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற அனைத்து லகத் தொலைகாட்சிக் கருத்தரங்கின் விதந்துரைப்பின்படி ஐக்கிய நாடுகள் சபை நவம்பர் 21ஆம் திகதியை உலகத் தொலைக்காட்சி தினமாக அறிவித்தது.

இதன்படி முதல் தொலைக்காட்சி தினம் 1997 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

## இன்றைய பலன்கள்

### ( 21. 11. 2023 )




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா


(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)



**மேஷம்:**
மகிழ்ச்சி குறைவாகவே இருக்கும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்ய முடியவில்லை என்ற கவலை இருக்கும்.




**ரிஷபம்:**
ஆரோக்கியத்தில் கட்டுப்பாடு செலுத்துவது அலைச்சலை குறைத்துக் கொள்வதன் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள இயலும்.




**மிதுனம்:**
பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும். ஆனாலும் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.




**கடகம்:**
மகிழ்ச்சி கொஞ்சம் குறைவாகவே இருக்கலாம். தாய் வழி உறவைகளால் தொல்லை உருவாகலாம் .




**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.




**கன்னி:**
அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கப் போகிறது. தொழில் வளம் மேலோங்கும் ,தொல்லை தந்த எதிரிகள் விளக்குவர்.




**துலாம்:**
இக்காலம் ஒரு பொற்காலகமாகவே அமையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். தற்காலிக பணிகளில் உள்ளவர்களுக்கு நிரந்தரப் பணிகளுக்காக மாறும் சூழல் உண்டு.



**விருச்சிகம்:**
எந்தச் செயலையும் தொடங்கி விட்டால் அதற்குரிய பொருளாதாரம் வந்து சேரும். பல வழிகளிலும் நன்மைகள் கிடைக்கும்.



**தனுசு:**
உத்தியோகத்தில் இடமாற்றங்கள் ஊர் மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வரலாம். தொழில் பங்குதாரர்கள் விலகி கொள்வதாக சொல்லி அச்சுறுத்துவர்.



**மகரம்:**
தொழில் பங்குதாரர்கள் தொழிலை பிரிந்து கொள்ள நினைப்பர். எதையும் நினைத்த மாத்திரத்தில் செய்ய இயலாது.



**கும்பம்:**
நகைகளை அடகு வைத்து பணம் புரட்டிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம் .



**மீனம்:**
விரையங்கள் கூடும். வீடு மாற்றங்கள் உருவாகும். அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமல் தவிர்க்கலாம். நகைகளை அடகு வைக்கும் சூழலும் ஏற்படலாம்.

## விமர்சனங்கள், குறைகளை... (03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அமைச்சர் ஜீவன் தொண்டமான் அந்நிகழ்வுக்கு ஜனாதிபதியை அழைத்ததுடன் மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணிக்கான உறுதிமொழியை வழங்கவேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

அவ்வாறே ஜனாதிபதியும் அந்த உறுதிமொழியை அந்த நிகழ்வில் வழங்கினார். தற்போது அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று இம்முறை வரவு செலவு திட்டத்தில் மலையக அபிவிருத்திக்காக கடந்த காலங்களை விட அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதனையும் சிலர் விமர்சனம் செய்கின்றனர். இவ்வாறு விமர்சனம் செய்தே மலையக மக்களின் எதிர்காலத்தை இல்லாதொழிக்க சிலர் செயற்பட்டு வருகின்றனர். எம்மைப் பொறுத்தவரை ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி மலையக மக்களுக்கு தேவையானதை பெற்றுக் கொடுப்பதையே நோக்காகக் கொண்டுள்ளோம்.

அத்துடன் மலையக மக்களுக்கு ஒரு இலட்சத்து 70,000ற்கும் அதிகமான வீடுகள் தேவையாக உள்ளன. அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் 1000 வீடுகளையே நிர்மாணிக்கிறது. அதன் படி மலையகத்துக்கு தேவையான வீடுகளை பெற்றுக் கொள்ள பல வருட காலம் செல்லும். அதனால் 10 பேர்ச் காணி உரிமையை பெற்றுக்கொள்வதன் மூலம், அந்த மக்கள் அவர்களே வீடுகளை கட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கலா ஓய... (03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

நீர் கலா ஓயாவிற்கு விடப்பட்டதால், கலா ஓயாவின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வில்பத்து நுழைவாயிலுக்கு அருகில் பாரிய நீர்மட்டம் பாய்கிறது.இதனாயே, எழுவன்குளம் குறுக்கு வீதியின், இந்த நுழைவாயில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு...

Applications – Recruitment Exams" என்பதன் கீழ்,வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி டிசம்பர் முதலாம் திகதியுடன் முடிவடையும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தவறிழைக்கும் எம்பிக்கள்...

தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே, அவர் இதனை தெரிவித்தார். தமது பதவியின் கௌரவத்தை பாதுகாக்க தவறுகின்ற மற்றும் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில், இந்த சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்ற தர நிர்ணய சட்டமூலம் என்ற பெயரிலான குறித்த இச்சட்டமூலம், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தவறிழைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுயாதீனமான குழுவொன்றின் ஊடாக தண்டனை விதிப்பதற்கு குறித்த சட்டமூலத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## உலகின் பிரமாண்டமான...

1691 பயணிகள் மற்றும் 704 பணியாளர்கள் உள்ளனர். இதில், ஜப்பானிய மற்றும் சீன சுற்றுலாப் பயணிகளே அதிகளவில் உள்ளனர்.

இந்நிலையில், "செலிப்ரிட்டி எட்ஜ்" (Celebrity Edge) என்ற சொகுசு பயணிகள் கப்பலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தடைந்தது. இந்தியாவின் கொச்சின் துறைமுகத்திலிருந்து இக்கப்பல் வருகை தந்துள்ளது. 306 மீட்டர் நீளமுடைய நவீன வசதிகளுள்ள இந்த கப்பலில் 15 தளங்கள் உள்ளன. இதில், 2,780 பயணிகளும் 1,273 பணியாளர்களும் உள்ளனர்.

இவர்கள்,நாட்டின் பல பகுதிகளுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.கொழும்பு, காலி மற்றும் கண்டி உள்ளிட்ட பகுதிகளுக்கும் இவர்கள் பயணிக்கவுள்ளனர்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பம்




**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் 15 வரை இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கைகளின் போது 17 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டதுடன் துப்பாக்கி சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்க தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டன. இந்நிலையில் நேற்றையதினம் மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

புதைகுழிக்குள் நீர் தேங்காதவாறு போடப்பட்டுள்ள கொட்டகையானது மேலும் 10 அடிக்கு நீட்டப்பட்டுள்ளது. இம்முறை அகழ்வுப் பணிகளின் போது ராடர் என்ற கருவியை பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் இதன்மூலம் புதைகுழியின் தூரத்தை அடையாளப்படுத்தி கொள்ளக் கூடியதாகவிருக்கும் என முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

மேலும் நீதிமன்ற கூற்றுப்படி 2.5 மில்லியன் வரையிலான நிதி இருப்பதாகவும் இது இரண்டு வார அகழ்வுப் பணி மற்றும் ஏனைய பணிகளை மேற்கொள்ள போதுமானதாகவிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் தற்பரன், சட்டத்தரணிகளான வி.கே.நிறஞ்சன், கு.ஆன்சுமங்கலா மற்றும் கொக்குளாய் பொலிஸ் நிலைய பொலிஸார், தடயவியல் பொலிஸ் பொலிஸார், விஷேட அதிரடி படையினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட தரப்பினர் இடத்தை பார்வையிட்டு கலந்துரையாடியதன் பின்னர் அகழ்வுப் பணி ஆரம்பமானது.



யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அகில இலங்கை கர்நாடகசங்கீதப்போட்டி 2023 இசைநாடகப்பாடலில் தேசியமட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

# வவுனியா த.வித்தியாலயத்தில் 43 மாணவர்கள் சித்தி

**(வவுனியா விசேட நிருபர்)**

புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 43 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. அதில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து 175 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அதில் மாவட்டத்தில் முதல் நிலை உட்பட 43 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். மேலும், பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 138 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியை சட்டத்தரணியானார்

யாழ்.ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியை முகம்மது ஷாகிர் பாத்திமா ஸப்னா தனது LLB (Hons) சட்டப் பட்டப்படிப்பை அண்மையில் நிறைவு செய்தார். இதற்கான பட்டமளிப்பு விழா கடந்த 2023 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

**(தகவல் யாழ் பரீட் இக்பால்)**







## சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி மாபெரும் ஏலவிற்பனை

63 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்

2023 நவம்பர் 24 வெள்ளிக்கிழமை

இல. 463, கண்டி வீதி, களனி

என்ற முகவரியில்

காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

**மோட்டார் கார்கள்:**

| | | |
|---|---|---|
| CBH-1xxx | ஹொண்டா சிவிக் EX வீடெக் | 2019 |
| CAX-8xxx | சுசூகி DAA-MH55S வெகன் R | 2017 |
| CBA-6xxx | சுசூகி CBA-WB42S gnyNdh | 2017 |
| CAP-9xxx | சுசூகி அல்டோ LXI 800 | 2016 |
| CAW-1xxx | சுசூகி DAA-MH44S வெகன் R | 2015 |
| KW-6xxx | மயிக்ரோ பண்டா LC 1.0 | 2013 |
| KX-0xxx | மயிக்ரோ பண்டா LC 1. | 2013 |
| KK-9xxx | மயிக்ரோ MX-7 | 2011 |
| KL-7xxx | மயிக்ரோ MX7 மார்க் | 2011 |
| KR-5xxx | BMW X1D | 2011 |
| KT-2xxx | போர்ட் பயஸ்டா | 2011 |
| KI-0xxx | மயிக்ரோ டிரெண்ட் | 2009 |
| KE-8xxx | செர்ரி QQ | 2007 |
| KF-6xxx | பெரோடுவா கெலிசா | 2007 |
| KH-1xxx | சுசூகி அல்டோ - ஜப்பான் | 2004 |
| GI-9xxx | பேர்ஜோ 406 ST | 2001 |
| JW-5xxx | கியா ஸ்பெக்ட்ரா 1.6M | 2001 |
| KA-0xxx | ஹைஉண்டி அடோஸ் GLS A | 2001 |
| HV-8xxx | கியா ரியோ | 2000 |
| GP-5xxx | நிஸான் செபைரோ | 1999 |
| 300-3xxx | வொல்வோ S 70 | 1997 |
| 300-4xxx | டைஹட்சு | 1997 |
| 18-7xxx | மஸ்டா மிஸ்டர் LX | 1994 |

**ஜீப் வண்டிகள்:**

| | | |
|---|---|---|
| CAG-8XXX | மிட்ஷுபிஷி DLA-GG2W அவுட்லான்டர் | 2013 |
| KI-0XXX | மயிக்ரோ சாங்யொங் கைரோன் 200XDI | 2009 |
| KC-7XXX | டெம்போ டிரெக்ஸ் ஜுடோ | 2005 |
| KC-7XXX | ஹைஉண்டி சான்டபே | 2003 |
| HP- 9XXX | ஹைஉண்டி சான்டபே | 2001 |

**கெப்கள்:**

| | | |
|---|---|---|
| PD-0xxx | நிஸான் நவரா | 2007 |
| JP-2xxx | நிஸான் KG-SP6F23 குரோ கெப் | 2000 |

**வேன்கள்/ பஸ்:**

| | | |
|---|---|---|
| 253-0xxx | மிட்ஷுபிஷி | 1999 |
| 57-8xxx | மஸ்டா புரோவ்னி | 1990 |
| NA-8xxx | ஸோன்டா YCK 6107 HP | 2010 |

**லொறிகள்/ டிப்பர்கள்:**

| | | |
|---|---|---|
| LO-4xxx | சோஜன் LF J1040G4 | 2017 |
| DAC-6xxx | டாட்டா சுப்பர் ஏஸ் | 2015 |
| DAC-8xxx | டாட்டா சுப்பர் ஏஸ் | 2015 |
| DAG-0xxx | சுசூகி EBD-DA16T கர்ரி | 2015 |
| PX-7xxx | மஹிந்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2014 |
| PW-3xxx | டாட்டா ஏஸ் EX 2 | 2013 |
| LK 9xxx | டாட்டா LPK 909 | 2012 |
| PS-6xxx | மஹிந்ட்ரா பொலேரோ PIK UP | 2012 |
| PU-8xxx | மஹிந்ட்ரா மெக்ஸிமோ | 2012 |
| PQ-1xxx | டாட்டா ஏஸ் | 2011 |
| PQ-4xxx | டாட்டா ஏஸ் | 2011 |
| PR-9xxx | மஹிந்ட்ரா மெக்ஸிமோ | 2011 |
| LH-9xxx | டாட்டா LPK 1615 | 2010 |
| LF-8xxx | டாட்டா ஏஸ் | 2008 |
| 43-0xxx | இசுசு | 1997 |
| 227-3xxx | மஸ்டா டைட்டன் | 1993 |
| 48-2xxx | டொயோட்டா டொயோ ஏஸ் | 1991 |

**முச்சக்கர வண்டிகள்:**

| | | |
|---|---|---|
| ABM-3xxx | பஜாஜ் RE | 2016 |
| ABB-9xxx | பஜாஜ் RE | 2015 |
| AAK-2xxx | பஜாஜ் RE 205 | 2013 |

**மோட்டார் சைக்கிள்கள்:**

| | | |
|---|---|---|
| BIU-6XXX | TVS ஸ்ரைகர் | 2020 |
| BIV-5XXX | ஹவ்ஜு GN 125 H | 2020 |
| BIF-1XXX | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2019 |
| BGT-1XXX | மஹிந்ட்ரா கஸ்ட்ரோ (M) | 2018 |
| BHG-2XXX | மஹிந்ட்ரா கஸ்ட்ரோ (M) | 2018 |
| BHS 2XXX | TVS மெட்ரோ | 2018 |
| BHE-1XXX | மஹிந்ட்ரா கஸ்ட்ரோ (M) | 2017 |
| BIB-4XXX | ஹொண்டா நவி | 2017 |
| BIB-8XXX | ஹொண்டா நவி | 2017 |
| BIF-3XXX | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2016 |

பார்வையிடல் -
ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில் 2023 நவம்பர் 22 புதன் மற்றும் 23 வியாழன் ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்

- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2023 நவம்பர் 29ஆந் திகதி புதன்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

011 2671468
www.sandslanka.com


# விழிகள் கலா முற்றத்தால் சிரேஷ்ட கலைஞர்கள் கௌரவிப்பு



**(தலைமன்னார் விஷேட நிருபர்)**

மன்னாரில் விழிகள் 10 வது நிறைவாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) பேசாலையில் சங்கவி தியேட்டர்ஸ் அன்ட் பிலிம்ஸ் அனுசரணையுடன் விழிகள் கலா முற்றத்தின் 'கலை விழி' விருது மற்றும் கலா விபூஷணம் பெற்ற கலைஞர் மற்றும் ஊடகவியலாளர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு பேசாலை சங்கவி திரையரங்கில் நடைபெற்றது.

பேசாலை மூத்த கலைஞர்களான சூசை ஞானப்பிரகாசம், லெம்பேட் மற்றும் திரு. செபமாலை விக்ரர் ஜெயபாலன் பர்ணாந்து ஆகியோருக்கு 'கலை விழி' விருதும்

கலாவிபூஷணம் பெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் எல். கொன்சால்வாஸ் கூஞ்ஞ, ஓய்வுநிலை அதிபர் சீ. எம். சேவியர் பர்னாந்து, ஓய்வுநிலை ஆசிரியர் எஸ்.ஏ.உதயன், செல்வி டிவன்சி மாக்கஸ், புகைப்பட கலைஞர் என் நியூட்டன், எ.சுகந்தன் ரூபன் கூஞ்ஞ மற்றும் தேசகீர்த்தி விருது பெற்ற ஏ.மெடோசன் பெரேரா ஆகியோர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ். மாக்கஸ் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழு உப தலைவர் மன்னார் சிரேஷ்ட சட்டத்தரணி எம். எம்.சபூர்தீன், பேசாலை உதவி பங்குத் தந்தை அருட்பணி அல்பன் ராஜ் அடிகளார் என பலர் கலந்து கொண்டனர்.


**பெயர் மாற்றம்**

இலக்கம் 421 மாவடி வீதி, சாய்ந்தமருது 3ஐச் சேர்ந்த **'மகேந்தரன் மேரி மாகிரட்'** ஆகிய நான் 2023.10.28ம் திகதி முதல் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை **'மகேந்திரன் பாத்திமா அஸ்மா'** என மாற்றிக் கொண்டேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**மகேந்திரன் பாத்திமா அஸ்மா**


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — ஞாயிறு 2023.11.19 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5303 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,056,464.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 6 8 1 6 3 0

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3545 — சீட்டிழுப்பு திகதி 2023.11.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,009,794.80
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 05 34 42 77 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02511

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1651 — 2023.11.19 — 64951 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 415,176,032.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 19 33 43 47
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7** — திகதி 2023.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0129
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 3 4 7 6 0 7 — L7 இலக்கம் 3 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,178,084.80

**ராசி சுப பலன்** — திகதி 2023.11.19 — சீட்டிழுப்பு இலக்கம் 612 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,535,384.00
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 02 06 37 59 — தனயோக இலக்கம் 43768 — நாளுக்கான விதி எண் 19

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1333 — 2023.11.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,243,588.80
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 30 61 66 74 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28012


## தேசிய கல்வி நிறுவகம் - மஹரகம

பட்டப்பின் கல்வி முகாமைத்துவ
டிப்ளோமா பாடநெறி (முழு நேரம்) – 2024/2025

**Post Graduate Diploma in Education Management (Full Time) – 2024/2025**

**தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

| | |
|---|---|
| **பாடநெறியின் காலம்** | : ஒரு வருடம் - முழு நேரம் (வார நாட்கள்) |
| **பாடநெறியின் தன்மை** | : நிகழ்நிலை ஊடான மூன்றுத் தவணைகளை (Terms) கொண்டக் கல்விசார் செயன்முறைகள் நடைபெறும். |
| **பாடநெறி நடைபெறும் இடம்** | : தொழில்வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க |
| **பாடநெறியின் மொழிமூலம்** | : சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் |
| **பாடநெறிக் கட்டணம்** | : ரூபா 80,000/- (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்) விண்ணப்பக் கட்டணம் ரூபா 1,500/-, பதிவுக் கட்டணம் ரூபா 2,000/- |

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 31.12.2023**

**விண்ணப்பிக்கும் முறை :**

தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் உத்தியோகபூர்வ இணையதள முகவரி exams.nie.lk/intakes/new ஊடாக, விண்ணப்பதாரிகள் நிகழ்நிலையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை (exams.nie.lk/info/applying-for-new-enrollments) இணையதள முகவரியிலிருந்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பேராசிரியர் பிரசாத் சேதுங்க**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**




# இலங்கையின் முதலாவது இலத்திரனியல் தொழிற்சாலையை ஆரம்பித்த OREL Corporation

உலக அளவில் இன்று கொண்டாடப்படும் உலகத் தொலைக்காட்சி தினத்தை நினைவுகூரும் வகையில், இலங்கையின் முதலாவது தொழின்முறை கட்டமைப்பிலான எலக்ட்ரோனிக் தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் கைத்தொழிற்சாலையை திறந்து வைத்து, எலக்ட்ரோனிக் துறையில் தங்களது முன்னோடிசாதனையை OREL Corporation பெருமையுடன் அறிவிக்கிறது. OREL Electronics வர்த்தக நாமத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய செயற்திட்டம், அதிநவீன இலத்திரனியல் உற்பத்திகளுக்கான வளர்ந்து வரும் மையமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்காக OREL Corporation நிறுவனத்தின் தனித்துவமான முயற்சியின் விளைவாகும்.

தொடர்ச்சியாக புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்து இலங்கையில் தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்திய நிறுவனம் என்ற பெருமையையும், வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது. அதி நவீன இயந்திரங்களால் பரிபூரண முழுத்திறமையும், சிறந்த தேர்ச்சியும் பெற்ற பணியாளர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் இந்த உற்பத்திகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

OREL Corporation இன் இலத்திரனியல் வர்த்தகப் பிரிவின் தலைவர் அனுராதா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், தகவல் சேகரிப்பதற்கும், பொழுது போக்கிற்கும் சக்திவாய்ந்த சாதனமாக தொலைக்காட்சிக்கு தனித்துவமான இடம் உண்டு, இது நவீன தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சிகரமான வாய்ப்பாகும். இதன் ஊடாக OREL Corporation மூலம் இலங்கையின் தொழிநுட்ப அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்தார். இந்த உற்பத்தி செயன்முறை தொடர்பான கூட்டங்களுக்காக 100 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு தரநிலைகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப திறமையான பணியாளர்களின் பங்களிப்புடன், இந்த புதிய தயாரிப்புகள் வாடிக்கையாளரை சென்றடையும், இது வழக்கமான தர சோதனைகள் மற்றும் ஆய்வுகளுக்கு உட்பட்டு சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

OREL Electronics ஸ்மார்ட் தொலைக்காட்சி சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற பயனர் அனுபவத்தை வழங்குகிறது. இது சர்வதேச விற்பனை நாமங்களில் உங்கள் கரங்களுக்கு கிடைக்கும் பல்வேறு தொலைக்காட்சிகளின் வடிவமைப்பு மற்றும்அவற்றின் வடிவமைப்புகளை பின்பற்றி இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

Orel Smart TV டைலான மெல்லிய நிறைவுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை தற்போது உள்ள தொலைக்காட்சிகளில் மெல்லிய தொலைக்காட்சியாக அறிமுகம் செய்ய முடியும். தெளிவான 16.7 மில்லியன் வண்ணங்களை கொண்ட ultrahighdefinition (UHD) 4K displays அகலத்திரையின் மூலம் தெளிவான காட்சிகளால் உங்களை திகைக்க வைக்கிறது. மேலும், Orel Smart TV MdJ, HDMI, USB, WiFi, Ethernetபோன்ற பல நவீன அம்சங்களைக் கொண்டுள்ளதால், Orel Smart TV எந்தவித சந்தேகமும் இல்லாமல் சந்தையை ஆக்கிரமிக்கும் தொலைக்காட்சியாக உருவெடுக்கும் எனபது உறுதியாகும். சமீபத்திய Android 13.0 இயக்க முறைமையில் இயங்குவதால் Orel Smart TV ஸ்மார்ட் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குறைந்த மின்நுகர்வில் இயங்குவதால் அதிகரித்து வரும் மின்சாரக் கட்டணத்தால் மக்களின் பொழுதுபோக்கு அல்லது தகவல் அறிவை வளர்த்து கொள்வதற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்ட வர்த்தக நிலையங்களில்

# கூடுதல் விலைக்கு சீனி விற்பனை செய்தோருக்கு எதிராக வழக்கு

## சுற்றிவளைப்பில் பலர் மீது நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு சீனி விற்பனை செய்த வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர்களால் மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுற்றிவளைப்புகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட பரிசோதனையின் போது நிர்ணயிக்கப்பட்ட விலையை விட சீனியை கூடுதலான விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் சில வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்ந்து விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்தல், நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தல்,நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை விற்பனை செய்தல் பாரிய குற்றமாகுமெனவும் குறிப்பிட்டார்.

கிராமப் புறங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு அத்தியவசியப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ம் இலக்கத்திற்கு அல்லது 0632222355ம் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பனங்காடு வைத்தியசாலை பொதுமக்கள் உதவியோடு முன்னேற்றமடைந்துள்ளது

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் புகழாரம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்



பொதுமக்களின் பங்களிப்புடன் வளர்ச்சி அடைந்து வரும் வைத்தியசாலைகளில் பனங்காடு பிரதேச வைத்தியசாலை கிழக்கு மாகாணத்தில் முதல் நிலை பெறுகின்றது. இவ்வைத்தியசாலையினை பொதுச் சொத்தாக கருதி பொதுமக்கள் செயற்படுவதானாலேயே இன்று இந்நிலை அடைந்துள்ளதென கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மகிழ்ச்சி தெரிவித்தார்.

பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற பொதுமக்களின் நிதிப் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் மற்றும் அரச நிதியில் நிர்மாணிக்கப்பட்ட மேல் மாடிக் கட்டட திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், பனங்காடு பிரதேச வைத்தியசாலையானது மிகவும் அபரிமித வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதற்கு பிரதான காரணம் இங்கு வாழும் மக்கள். இதனை அவர்களது சொத்தாக நினைத்து செயற்படுவதே. இவ்வாறு அனைவரும் அரச சொத்துக்களை பொதுச்சொத்தாக நினைத்து நடந்து கொண்டால் அக்கிராமங்களின் வளர்ச்சி சிறப்பாக அமையும் என கூறினார்.

மேலும் வைத்தியசாலையின் ஆளணி உள்ளிட்ட குறைபாடுகளும் விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி மொழி வழங்கினார்.

வைத்தியசாலைக்கு வருகை தந்த ஆளுநருக்கு வைத்தியர் குணாளினி சிவராஜ் தலைமையிலான வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து மகத்தான வரவேற்பளித்தனர்.

இதன் பின்னராக வைத்தியசாலையின் நுழைவாயிலை சிறுவர்களின் கரங்களினால் ஆளுநர் திறந்து வைத்தார். தொடர்ந்து கட்டடத்திற்கான பெயர்பலகையினையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

# 190 புள்ளிகளுடன் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்



(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இருந்து தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய முஹம்மட் அனஸ் பர்ஹத் பாத்திமா 190 புள்ளிகளைப் பெற்று அக்கரைப்பற்று வலயம், கல்முனை கல்வி மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் முதல் நிலை பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

பாடசாலை அதிபர் நஜீமா ஹாறுத்தீன் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துள்ளாஹ் முஹம்மட் அனஸ் பர்ஹத் பாத்திமாவை பாராட்டியதுடன் கல்வி கற்பதற்காக அன்பளிப்பு ஒன்றையும் பரிசளித்தார். ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இருந்து இம் முறை தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 29 மாணவிகள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று தெரிவாகியுள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் முதல் நிலை பெற்ற மாணவிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம் என்பன வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.



கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கந்தளாய் ரஜஎல வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற அறுபது மாணவர்களுக்கு 7500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் முஸ்லிம் எயிட் நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. இதன் போது முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் முகாமையாளர் எம்.எம்.எம்.முனீர், திட்ட இணைப்பாளர் வஹீ, தொழிலுட்ப உத்தியோகத்தர் ஏ.எம். ரமீஸ் உட்பட பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

(படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# திருமணமாகாத அழகு ராணியாக காரைதீவு நிவேதிகா தெரிவு



( காரைதீவு குறூப் நிருபர் )

இலங்கையின் முதலாவது திருமணமாகாத அழகு ராணியாக அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த செல்வி நிவேதிகா இராசையா தெரிவு செய்யப்பட்டுள்ளார். கனேடிய அமைப்பொன்று இலங்கையில் முதல் முதலாக இந்த போட்டியை கடந்த மூன்று மாதகாலமாக நடத்தியது. கொழும்பில் நடைபெற்ற இந்த தெரிவில் முதல் சுற்றில் 120 பெண்கள் நாடளாவிய ரீதியில் இருந்து கலந்து கொண்டனர். இறுதிச்சுற்றில் 15 பேர் கலந்து கொண்டனர். அதில் முதலாவது இடத்தில் நிவேதிகா இராசையாவும் இரண்டாவது இடத்தில் ஆச்சர்யா யோகராஜனும் மூன்றாவது இடத்தில் சந்திரகுமார் விதுர்ஷாவும் தெரிவு செய்யப்பட்டனர். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விழாவில் தெரிவான அழகுராணிகள் கிரீடம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

காரைதீவைச் சேர்ந்த செல்வி நிவேதிகா இராசையா காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் செல்லையா இராசையாவின் புத்திரி என்பது குறிப்பிடத்தக்கது.

# தாதிய உதவியாளர்களுக்கு பட்டமளிக்கும் நிகழ்வு

## மட்டக்களப்பில் பல பிரமுகர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு சிலோன் நேர்சிங் கல்லூரியில் தாதிய உதவியாளர் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த தாதிய உதவியாளர்களுக்கான தொப்பி அணிவித்து பட்டமளிக்கும் நிகழ்வு (19) மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதி மண்டபத்தில் இடம்பெற்றது.

மலர் மாலைகள் அணிவித்து அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன் ஒருநிமிட இறை வணக்கத்தோடு தேசியக் கீதம் இசைக்கப்பட்டு அதிதிகளினால் மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பமானது.

சிலோன் நேர்சிங் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெ. மியூறியா டிலாணியின் தலைமையில் ஆரம்பமாகிய நிகழ்வில், கலாச்சார நடனம் இடம்பெற்றதுடன் சிலோன் நேசிங் கல்லூரியில் ஒரு வருட கால தாதிய உதவியாளர் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 100 தாதிய உதவியாளர்களுக்கு தொப்பி அணிவித்து பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பதக்கம் அணிவிக்கப்பட்டு, நினைவுச் சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது பிரதம அதிதி உள்ளிட்ட ஏனைய அதிதிகள் அனைவரும் கல்லூரி நிருவாகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

அகில இலங்கை அழகியல் நடனப் போட்டியில் தேசிய மட்டத்தில் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் தப்பு நடனத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். அநுராதபுரம் மத்தியக் கல்லூரியில் இடம்பெற்ற தேசிய மட்ட அழகியல் நடனத்தில் இவர்கள் மூன்றாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களை நெறிப்படுத்திய நடன ஆசிரியை திருமதி யசோதினி குகாந்தன் இவ் நடனத்தின் பாடல் ஆக்கம், இசையமைப்பு ஆசிரியர் இதயநேசன் , வாத்தியங்களை இசைத்தவர் லோகிசன் மற்றும் வித்தியாலய அதிபர் திருமதி தவவாசுகி ரமணன் ஆகியோரை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது

# காத்தான்குடி கல்விக்கோட்டத்தில் 174 மாணவர்கள் சிறந்த பெறுபேறு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி கல்விக் கோட்டத்தில் 174 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளதாக காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி ஏ.ஜே.எம்.ஹக்கீம் தெரிவித்தார். இம் முறை ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு 1269 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 174 மாணவர்களும் அதேபோன்று 70 க்கும் குறைவாக 220 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

காத்தான்குடி மீரா பாலிகா தேசியப் பாடசாலையிருந்து 45 மாணணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். புதிய காத்தான்குடி அன்வர் வித்தியாலயத்திலிருந்து 29 மாணவர்களும், கிழ்றியா வித்தியாலயத்திலிருந்து 21 மாணவர்களும் பாத்திமா பாலிகா வித்தியாலயத்திலிருந்து 13 மாணவர்களும் பத்ரியா வித்தியாலயத்திலிருந்து 12 மாணவர்களும் ஸாவியா மகளிர் வித்தியாலயத்திலிருந்து 10 மாணவிகளும்வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

காத்தான்குடி கல்விக் கோட்டத்தில் காத்தான்குடி பத்ரியா வித்தியாலய மாணவன் ஆ.முஸ்னத் அஹமட் 186 புள்ளிகளைப் பெற்று கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.




# ஹற்றன் – நுவரெலியா சுரங்கப்பாதையில் விபத்து



ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் லொறியொன்று சுரங்கப்பாதையில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. தலவாக்கலையிலிருந்து அகரபத்தன நோக்கி சென்றுக் கொண்டிருந்த லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று (20) அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் லொறி சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இப்பகுதியில் மண்மேடுகள் சரிந்துவிழும் அபாயம் காணப்படுவதால் வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் ஹற்றன் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நூறு ரூபாவுக்கு உருளைக்கிழங்கை கொள்வனவு செய்தால் விவசாயிகள் வருமானமீட்டுவது எவ்வாறு?



இலங்கையில் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு பிரபல்யமான பிரதேசம் வெலிமடை ஆகும். வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவுகுட்பட்ட முஸ்லிம்கள் செறிந்து வாழும் சில்மியாபுரம், பொரகஸ், பாதிநாவெல, ரேந்பொல, குருத்தலாவ. அலுகொல்ல, போகாக்கும்புற மாத்திரமன்றி கெப்பெட்டிப்பொல, ரத்தம்ப, அம்பகஸ்தோவ, பொரலந்த போன்ற பிரதேச மக்களும் தமது பிரதான வாழ்வாதார தொழிலாக விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு உகந்த சிவப்பு நிறம் கலந்த இருவாட்டி மணல் நிலத்தை இப்பிரதேசம் கொண்டுள்ளது. நுவரெலியாவிற்கு அண்மித்த இப் பிரதேசத்தில் இம்முறை அரசாங்கம் வழங்கிய உரமானியம் மூலமும் விவசாயத் திணைக்கள ஆலோசனைகளுக்கு அமைவாகவும் உருளைக்கிழங்கு நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். தமது உள்ளூர் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு அரசாங்கம் நியாயமான விலையை நிர்ணயித்து சந்தைப்படுத்தல் வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என உருளைக்கிழங்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ச.தொ.ச நிறுவனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 40 ரூபா விலை குறைத்துள்ளமையினால் உள்ளூர் உருளைக்கிழங்கின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூரில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்கை 120 – 140 ரூபாய் விலையில் மொத்த வியாபாரிகள் கோள்வனவு செய்து வருவதாகவும், இந்த விலையானது தங்களது உற்பத்தி செலவை ஈடுசெய்ய முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். அரசாங்கம் முன்வந்து உள்ளூரில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்குக்கு நியாயவிலையை நிர்ணயித்து சிறந்த சந்தைவாய்ப்பினைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மொத்த வியாபாரிகள் 120 ரூபாவுக்கு உருளைக்கிழங்கை வாங்கிச் சென்று முன்னூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்கின்றனர். உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் வறிய நிலையில் இருக்கையில், மொத்த வியாபாரிகளோ இலட்சக்கணக்கில் பணமீட்டுகின்றனர் என்று விவசாயிகள் தெரிவித்தனர். எனவே விவசாய அமைச்சும் வர்த்தக அமைச்சும் இப்பிரதேச உருளைக்கிழங்கு விவசாயிகளின் கோரிக்கைக்கு செவிசாய்த்து உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும்.



**எம்.ஏ.எம்.ஹசனார்**
**(ஊவா சுழற்சி நிருபர்)**



கொழும்பு பல்கலைக்கழக வைத்திய பீட வருட மாணவனான பதுளை வினித்தகமையைச் சேர்ந்த சேகர் நிலாபரனுக்கு தேவையான மடிக்கணணியொன்றை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் அன்பளிப்பாக வழங்குவதை படத்தில் காணலாம்.

# காட்டெருமை தாக்கி வயோதிபர் பலி



கந்தப்பளை ஹைபொரஸ்ட் நகரில் காட்டெருமை தாக்கி 84 வயதான வயோதிபரொருவர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காட்டெருமை தாக்குதலுக்கு இலக்கானவர் ஹைபொரஸ் இலக்கம் மூன்று தோட்டத்தின் மூத்த பிரஜையான முனியன் கங்காணி என்பவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஹைபொரஸ்ட் மூன்றாம் பிரிவு சிறிய நகருக்குள் காட்டெருமை ஒன்று திடீரென வந்துள்ளது. இதன் போது காட்டெருமையை விரட்டியடிக்க நகரில் சிலர் முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வயோதிபரான முனியன் கங்காணி நகரிலிருந்த கடையோரத்தில் நின்றுக் கொண்டிருந்த போது காட்டெருமையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

பலத்த காயங்களுக்குள்ளான அவரை ஹைபொரஸ்ட் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் தீவீர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளதாக ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

**(ஆ.ரமேஷ்)**





அகில இலங்கை தேசிய ரீதியில் இடம்பெற்ற கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டிய போட்டிகளில் நாவலப்பிட்டி, க/ கிறீன்வூட் தமிழ் வித்தியாலய மாணவர்கள் பங்குபற்றி அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். நாட்டார் பாடல், தப்பாட்டம் போட்டிகளில் முதலிடத்தையும் தனிஇசை, வில்லிசை போட்டிகளில் இரண்டாமிடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இராகலை

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வீதியில் இறங்கி போராட்டம்





தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இராகலை மத்திய பிரிவு தோட்ட தொழிலாளர்கள் தமக்கான வீட்டு உரிமையை கேட்டு இராகலை நகரில் அமைதியான முறையில் போராட்டத்தில் நேற்று காலை ஈடுபட்டனர்.

இராகலை மத்திய பிரிவு தோட்டத்தில் கடந்த யூலை மாதமளவில் இடம்பெற்ற தொடர் குடியிருப்பு விபத்தில் 18 வீடுகள் தீயில் முற்றாக எரிந்து நாசமாகின.

இதனால் இதில் வசித்து வந்த 18 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் நிர்க்கதியானதுடன் இவர்கள் தற்காலிகமாக தோட்ட வைத்தியசாலை கட்டடத்தில் தங்கவைக்கப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்து கொடுப்பது தொடர்பில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் தோட்ட நிர்வாகம் மற்றும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட லயன் குடியிருப்புகளை புனரமைத்து அதில் மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இந்நிலையில் மக்கள் இதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன் பாதுகாப்பான இடத்தில் தனிவீடுகளை அமைத்து அதில் குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதற்கான அழுத்தத்தை கொடுக்கும் வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு இராகலை நகரில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைதி போராட்டத்தில் மத குருக்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

**(ஆ.ரமேஷ்)**

# அபாய நிலை கற்பாறைகளை அகற்ற நடவடிக்கை


**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக உருண்டு விழும் அபாயத்திலுள்ள கற்பாறைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன தெரிவித்தார்.

இறத்தோட்டை வில்கமுவ பிரதேசங்களில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ள கற்பாறைகளை கல்வெடி மூலம் பாதுகாப்பான முறையில் உடைத்து அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல் உடைப்பதற்கான வெடிமருந்து பொருட்களை பொலிஸார் மற்றும் பிரதேச செயலக காரியாலயத்தின் மேற்பார்வையில் விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் முதலிடம்



**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் பலாங்கொடை கல்வி வலயத்துக்குட்பட்ட இ/சீ. சீ தமிழ் மகா வித்தியாலய மாணவன் ஏ.எட்மிக் டன்ஸ்டன் இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ்மொழி மூல பாடசாலை மாணவர்களுக்குள் அதிகமான புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் பலாங்கொடை பிரதேச ஆசிரியரும் சமூக சேவையாளருமான என்டனீ பிரகாஷ் மற்றும் புளோரிடா தம்பதிகளின் புதல்வராவார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்,

# மொனராகலை பகினிகஹவெல முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் ஆறு மாணவர்கள் சித்தி



**(ஊவா சுழற்சி நிருபர்)**

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மொனராகலை பகினிகஹவெல முஸ்லிம் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அறுவர் சித்தியடைந்துள்ளதாக அதிபர்.எம்.எஸ். எம். நௌஸாத் தெரிவித்தார். அப்துல்லாஹ் 169, சன்ஹா 154, சாரா ஸைனப் 153, மிஸ்கா 152, மஸீன் 149, ஸம்லா சரீகத் 148 என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

# கண்டி மாவட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கடும் மழை காரணமாக கண்டி மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 100 மில்லிலீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக காலநிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

அதற்கமைய மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள இடங்களில் வசிப்போர் இதனை கருத்திற் கொண்டு எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளே, உடபலாத, உடதும்பறை, பாத்தும்பறை, உடுநுவர, மற்றும் மெததும்பறை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் வசிப்போர் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கண்டி மாவட்டத்தில் வத்துகாமம் மடுல்கலை பிரதான வீதியில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் காரணமாக போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஹதரலியந்த துங்கும்புற கொங்கிறீட் பாலம் கடும் மழை காரணமாக சேதமடைந்துள்ளது. இதனால் பொல்வத்தை, மாவத்தகம, மினிகமுவ, எலட்டுவாவ போன்ற பிரதேசங்களுக்கு செல்லும் மக்கள் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.



# மண்மேடு சரிந்து வீழ்ந்து சமையலறை சேதம்

கண்டி பன்விலை ஆத்தனை பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (18) மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடொன்றின் சமையலறைப் பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

மண்சரிவினால் வீட்டில் இருந்தவர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் மண்சரிவு காரணமாக வத்தேகம பகுதியிலிருந்து கபரகலை பெத்தேகம, கோமரை, பம்பரல்லை பகுதிகளுக்கான போக்குவரத்து பல மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

# மலையக நாவல் இலக்கிய வரலாற்றில்

# அருட் தந்தை யோசுவா அடிகளார் எழுதிய

# 'பூச்சாண்டி நாவல்'

# ஒரு புதிய திருப்புமுனை





காவேரிக் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் அருட் தந்தை யோசுவா அடிகளார் எழுதிய பூச்சாண்டி எனும் நாவல் நூலின் வெளியீட்டு விழாவும் 'கதைகள் காட்டும் பாதை சமூகப் பொருளாதார இலக்கியப் பார்வை' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற செயலமர்வும் கிளிநொச்சி அறிவியல் நகர் கால்நடைகள் திணைக்களத்தின் பிராந்திய பயிற்சி நிலையத்தில் திருமதி பெ. போரா, திருமதி சகனா ஆகியோர் தலைமையில் கதைகளும் கதை சொல்லிகளும் என்னும் தலைப்பில் முதலாவது செயலமர்வு நடைபெற்றது.

அதிபர் அ. பங்கையற்செல்வனின் தலைமையில் கல்வியும் கதை சொல்லிகளும் என்னும் தலைப்பில் இரண்டாவது செயலமர்வும் இடம்பெற்றது. அருட் தந்தை பெனி யே. சவின் தலைமையில் பூச்சாண்டி கதை காட்டும் காலம் என்னும் தலைப்பில் மூன்றாவது அமர்வில் நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. இதில் நூல் அறிமுகத்தை ஊடகவியலாளர் மு. தமிழ்ச் செல்வனும் நூல் விமர்சனத்தை இலக்கிய விமர்சகர் அ. கேதீஸ்வரனும் நிகழ்த்தினர்.

காவேரிக் கலா மன்றத்தின் தலைவர் வண பிதா சந்தானம் பிள்ளை நூலினை சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைத்தார். இதில் பெரு எண்ணிக்கையிலான மலையகத்தைச் சேர்ந்த அதிபர்கள், பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் சிறுதோட்ட தேயிலை செய்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது சிறு தேயிலைத் தோட்டச் செய்கையாளர்களுக்கான நிதி உதவி வழங்குதல் மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மலையக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்குதல் நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அருட் தந்தை பெனி. யே. ச தலையுரையாற்றும் போது;

யோசுவா அவர்களின் பூச்சாண்டி என்னும் நாவல் 'மலையக 200' என்பதனை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்துள்ளது. மலையக நாவல் இலக்கியத்தின் வரலாற்றில் பூச்சாண்டிக்கு முன், பூச்சாண்டிக்குப் பின் என்ற வேறொரு பார்வையை ஏற்படுத்தக் கூடியவை. பலரை பல விதங்களில் சந்திக்கின்றோம். ஆனால், அதில் ஆயிரத்தில் ஒருவர்தான் சுயமாகச் சிந்திப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை அடையாளம் கண்டு கொள்ளலாம். அந்த ஆயிரத்தில் ஒருவர்தான் யோசுவா அடிகளார். உள்வாங்கப்பட்ட சிந்தனைப் பற்றிப் பேசுகின்றோம். ஆனால் சுயமாக சிந்தித்து எழுத படைப்பாளியென்றால் யோசுவாவைத் தான் சொல்ல வேண்டும். அவருடைய கடந்த காலப் படைப்புக்களை எடுத்துப் பார்த்தாலும் சரி யாராவது நாட்டுப்புற கீரைகளை ஆய்வு செய்து அதைக் கதைகளாகவும் கட்டுரைகளாகவும் எழுதக் கூடிய திறன் யோசுவா அவர்களுக்கேதான் உண்டு.

ஒவ்வொரு கீரை வகைளையும் பற்றி கதைகளாக எழுதியுள்ளார். ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிரசவிக்கவுள்ள குழந்தையும் தாய்க்குமிடையில் நடைபெறும் மௌன உரையாடல் பாங்கில் அமைந்த கரிக்காட்டுப் பூக்கள் பாதி உயிர்' என்னும் காவியம் ஒன்றை எழுதியுள்ளார். அற்புதமான சிந்தனை. பஸ்ஸில் செல்வதற்கு ஏறும் போது நமக்கு அசூரத்தன்மையான ஆற்றல் வந்தால் பஸ்ஸை பிரட்டிப் போட்டு மிதிக்க முடியாதா என்ற எண்ணம் தோன்றும். அவை போல பந்தயர் தேவன் என்ற பாத்திரத்தில் செத்துப் போன ஆவி இன்னுமொரு நபருக்குள் புகுந்து சமூகத்தில் ஒன்பது விதமான பிரச்சினைகளை கையிலெடுத்து பேசுகின்றன. அப்படிப்பட்ட புதுமைப் படைப்பாளி. செயற்பாட்டு இலக்கியத்தின் பிதா மகன்.

இலக்கியம் சுவைக்காவோ ரசனைக்காகவோ, கற்பனைக்காகவோ என்பவற்றை எல்லாம் கடந்து ஒரு செயலை நாங்கள் செய்கிறோம். அவற்றை நாங்கள் இலக்கியப் படுத்துகிறோம். உண்மைச் சம்பவத்தைக் கதையாக்குகின்றோம் என்ற பின்னணியில் செயற்பாட்டு இலக்கியம் வளர்ச்சி பெற்று வருகிறது.

ஆகவே, இந்தப் பூச்சாண்டி நாவல் பல மரபுகளை, பல சிந்தனைகளை, பல நம்பிக்கைகளை, உடைத்தெறிகின்ற வகையில் வெளி வந்திருக்கின்றது. மலையகத்திலுள்ள பொய்மையை தோலுரித்து உண்மையை வெளிக் கொண்டு வருகிறது இந்தப் பூச்சாண்டி நாவல். இந்த நாவல் ஒரு வரலாற்றுத் திருப்பம் ஆகும். இது இலக்கியத்தில் ஒரு மைல்கல் என்று கூடக் குறிப்பிடலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நாவலாசிரியர் அருட் தந்தை நூலாசிரியர் டி. எஸ். யோசுவா அடிகளார் உரையாற்றும் போது; இந்த நிகழ்வின் பிரதான நோக்கம் ஒரு நூலைக் குறித்து உரையாடுவது மட்டுமல்லாமல் இந்த நூல் கூறுகின்ற செய்தியை நடைமுறைப்படுத்துவதாகும். காலையில் நடந்த கதை சொல்லும் நிகழ்வில் மலையகத்தில் இருந்து ஐந்து சிறு தோட்டத் தேயிலைச் செய்கை முயற்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அந்த செயற்திட்டத்தை இங்கே ஆரம்பித்து வைப்பது முதலாவது விடயம். 200 சிறுதோட்ட தேயிலைச் செய்கை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நானும் பங்கையற்செல்வன், கண்ணன் போன்றவர்களும் கடந்த மாதம் இரத்தினபுரியில் உறுதி எடுத்துக் கொண்டோம்.

முதலாவது தேயிலைத் தோட்டதைத் தொடக்கி வைத்தோம். இன்று அது உத்தியோகபூர்வமாக இந்த இடத்தில் அறிமுகப்படுத்தினோம்.

நூல்களை எழுத வேண்டும் என்ற பெரு அவா என்னிடம் எப்பொழுதும் இருப்பதில்லை. ஏதாவது மிகப்பெரியதொரு ஏக்கம் ஒன்றுக்குள் தள்ளிவிடுவது வழக்கம். அப்படித்தான் எல்லாம் தவிர்க்க முடியாதவாறு உருவாக்கப்பட்டவைகள். நீண்ட காலமாக திட்டமிட்டு யோசித்து செயற்படும் ஓர் எழுத்தாளன் அல்ல. என்னை ஒரு படைப்பாளி என்று என்னை அறிமுகப்படுத்தவும் விரும்பவில்லை. பாதி உயிர் என்ற காவிய நூலை வெளியிட்டதற்கு பின்னர் எழுத வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கவில்லை.



பூச்சாண்டி எழுதுவதற்கான காரணம் 'மலையகம் 200' ஆண்டு நிறைவு தொடர்பில் கிளிநொச்சியில் முதன் முதலில் ஒரு கூட்டம் இடம்பெற்றது, அக் கூட்டத்தில் என்னைக் கலந்து கொண்டு உரையாற்றும்படி என்னிடம் 40, 50 பேர் அளவில் அழைப்பு விடுத்தார்கள். அதன்போது நான் ஒரு கருத்தைச் சொன்னேன். அது ஒரு பரபரப்பாக இருந்தது. அதாவது மலையகம் 200 என்பது மலையக வரலாற்றை முழுமையான வரலாற்றைச் சொல்லவில்லை. இது பற்றிச் சிந்திப்பதற்கு தேடுதல் அவசியமானது. யாரோ சொன்னவற்றை வைத்துக் கொண்டு முக்கால் பகுதியை வைத்துக் கொண்டு பேசுவது சரியல்ல என்ற கருத்தை அப்பொழுது முன் வைத்தேன். அதன் பின்பு பல்வேறு கூட்டங்களுக்கு என்னைத் தொடர்பு கொண்டார்கள். பாதை யாத்திரை, வேறு உள்ளிட்ட கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். நான் ஒன்றுக்கும் செல்லவில்லை. அவர் செய்தது பிழை என்று சொல்ல வரவில்லை. அது அவர்களுடைய பார்வையில் செய்தார்கள். நான் போகாமல் விட்டதற்கான நியாயத்தையோ காரணத்தையோ நான் எனக்குள் வைத்திருக்க முடியாது என்பதன் வெளிப்பாடுதான் பூச்சாண்டி.

பூச்சாண்டி என்பது எனக்குள் இருக்கும் நியாயத்தை நான் சொல்லியே ஆக வேண்டும். அதுவும் இந்தக் காலத்தில் நான் சொல்லாமல் விடுவேனானால் அது மிகப் பெரிய தோல்வியுடன் முடிவுறும். இங்கே என்னுடைய தகப்பானர் துரைசாமி வந்திருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் தொடங்குவதற்கு முன்பு சம்புமல் கந்த இறப்பர் தோட்டத்தில் இருந்து தான் உழைத்துச் சேகரித்த 3000 ரூபா பணத்தை கையில் எடுத்துக் கொண்டு கிளிநொச்சிக்கு அழைத்து வந்தார். அப்பொழுது நான் ஒரு சிறு பையன். எனது சகோதரிகள் நான்கு பேர். எங்கள் எல்லோரையும் கூட்டிக் கொண்டு எவ்விதமான இலக்கு, இலட்சியமுமில்லாத நிலையில் கிளிநொச்சிக்கு வந்தார்.

அந்த 3000 காசில் 2000 ரூபாவுக்கு காணி வாங்கி அதில் ஒரு புதிய உலகத்தை உருவாக்கினார். என்னுடைய தாயார், தகப்பனார், தாய் வழி உறவுகள் சார்ந்த பலர் எங்களோடு கதைக்கின்ற பொழுது எங்களுக்கு உதாரணங்களாக சொன்ன கதைகள், எங்களோடு பேசுகின்ற பொழுது ஏதாவது விடயங்களுக்காகக் குத்திக் காட்டிய விசயங்கள் இங்கே இலக்கியங்களில் சொல்லப்படுகின்ற புதுமைப் பித்தனின் துன்பக்கேணியிலேயோ அல்லது ஒப்பாரிப் பூச்சியிலோ, அல்லது சிவலிங்கத்தினுடைய பஞ்சப் பிழைக்கவந்த சீமையிலோ சொல்லப்படாமல் இருந்தது ஏன் என்ற கேள்வி? நான் வாசித்த காலத்தில் இருந்து வந்துள்ளது. இவர்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.

என்னுடைய அப்பா, என் அம்மா, என் மாமார்கள் சொன்ன சிறிய கதைகள் அனைத்தையும் வைத்துக் கொண்டு நான் தேடத் தொடங்கினேன். உங்கள் கையில் உள்ள கையடக்கத் தொலைபேசியில் தேடிப்பாருங்கள். இலட்சக் கணக்கான மலையகம் பற்றிய உண்மைத் தகவல்கள் ஆவணங்கள் இருக்கின்றன. அந்த வரலாற்றின் விதைகளாக இருக்கின்ற என் தகப்பனார் போன்றவர்கள் உயிரோடு இருக்கத்தக்க வகையில் உங்களுடைய கதைகளை மட்டும் வைத்து வரலாறாகக் கொண்டாடுவதற்கு நாங்கள் ஆயத்தம் இல்லை என்பதைத்தான் பூச்சாண்டி சொல்லி இருக்கிறது. பூச்சாண்டி சொல்லுகிற கதை கதையாக மட்டும் நில்லாமல் அதைச் செயலாக்க வேண்டும் என்பதற்காக 200 தோட்டங்களை உருவாக்குதல் என்ற அந்தக் கைங்கரியத்தை கையில் எடுத்துள்ளோம். இன்றைய நிகழ்வு ஒரு நூல் பற்றிய உரையாடல் மட்டுமல்ல ஒரு செயல் குறித்தான தொடக்கமும் ஆகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் மு. தமிழ்ச் செல்வன் நூல் பற்றிய அறிமுகவுரையில்;

200 வருடங்களாக மலையக மக்கள் தொடர்பில் கூறி வந்த பூச்சாண்டிக் கதைகளை 180 பக்கங்களில் தகர்த்து எறிந்துள்ளார் வண பிதா யோசுவா அவர்கள். மலையகம் என்றால் என்ன? மலையக மக்கள் எப்படி வந்தார்கள்? இந்தியாவில் இருந்து எப்படி அழைத்து வரப்பட்டார்கள்? என்பது பற்றி 200 வருடங்களாக பூச்சாண்டிக் கதைகளாகவே நாங்கள் பார்க்க வேண்டி இருக்கிறது. மலையக வரலாற்றுக்கு இன்னுமொரு பக்கம் இருக்கிறது என்பதை அருட் தந்தை யோசுவா வெளிக் காட்டி இருக்கிறார்.

எப்பொழுதும் வித்தியாசமாக எதையும் செய்கின்றவர். நாங்கள் நிறைய எழுதுவோம். செயற்பாடு என்பது அடுத்த கட்டம் தான். ஆனால் அருட் தந்தை யோசுவா செயற்பாட்டில் மிகவும் முக்கியத்துவம் மிக்கவர். எழுதுவதை விட செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்து கொண்டிருக்கிறார். இவ்வளவு செயற்பாட்டுச் சூழலுக்கு மத்தியிலும் பூச்சாண்டி என்ற நாவலை எழுதுவதற்கு முன் அதற்குச் செயல் வடிவம் கொடுத்திருக்கிறார். அதுதான் 200 தேயிலைத் தோட்டங்களை உருவாக்குதல் என்ற செயற் திட்டம். உண்மையிலே அதற்கு நாங்கள் தலைசாய்க்கின்றோம்.

அருட் தந்தை யோசுவா அடிகளார் இந்த புத்தகத்தை ஒப்புநோக்குவதற்காகத் தந்தார். அதை ஒரு வாய்ப்பாக நான் கருதுகின்றேன். இந்த நூலை வாசித்து ஒப்புநோக்கிக் கொண்டு செல்லும் போது இந்த புத்தகத்தை ஒப்புநோக்கிக் கொண்டிருக்கின்றேன் என்கின்ற நிலையைக் கடந்து இந்த நூலின் வாசகனாகவே மாறிவிட்டேன். மூன்று நாளில் புத்தகத்தை ஒப்பு நோக்கிக் கொடுத்து விட்டேன். ஆனால் சில நாட்கள் கதை பாத்திரங்கள் மனதில் அப்படியே காட்சிகளாய் ஓடிக் கொண்டிருந்தன. பூச்சாண்டி யாழ்ப்பாணத்திற்கு வந்தது. மலையகத்திற்குச் சென்ற விடயம் எல்லாம் என் மனதில் ஓடிக் கொண்டே இருந்தது. அதுதான் இந்தப் புத்தகத்தின் வெற்றி.

மலையகம் குறித்து 100 ஆண்டிலும் பேசப்பட்டது. 200 ஆண்டிலும் பேசப்படுகிறது. 300 ஆம் ஆண்டிலும் இதே மாதரிப் பேசப்படும். அருட் தந்தை யோசுவாவின் பூச்சாண்டி நாவல் அப்பொழுது இந்நாவல் மலையகத்தில் ஒரு திருப்புமுனை ஏற்படுத்தியிருக்கும். மலையகம் 200 குறித்து 500 க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஆனால் இன்றைய மலையக மக்கள் அன்றிருந்த அதே நிலையில்தான் இருக்கிறார்கள் என்று பேசப்படுகின்றார்கள்.

மக்கள் தனித்துவமான அடையாளத்தை தனித்துவமான இனத்தைப் பேண வேண்டுமாயின் நிலம் இன்றியமையாதது. என்னுடைய தாத்தாமார்கள் சொன்ன கதைகளுக்கு நேர் எதிர்மாறான கதைகள் இந்தப் பூச்சாண்டி புத்தகத்தில் உள்ளன. மலையக மக்கள் தொடர்பில் ஒரு விதமான பார்வை மாத்திரமே இருந்தது. மலையக மக்கள் தொழிலுக்காக மன்னார் வழியாக மாத்தளை வந்தடைந்து தொழிலுக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் அடிமைகளாக வைத்திருக்கப்பட்டார்கள். 200 வருடங்கள் கழிந்து அவர்களுடைய வாழ்க்கை முறை மாறவில்லை என்ற ஒரு பக்கம் சார்ந்த கதைகள் கேட்டிருக்கின்றோம். ஆனால் பூச்சாண்டி அதனுடைய மறு பக்கத்தை தெளிவாகச் சொல்லியிருக்கிறது.





200 வருடங்களாகக் காட்டப்பட்ட பூச்சாண்டிக் கதைகளை அறைந்து எறிந்து உடைத்து இருக்கிறார் அருந் தந்தை யோசுவா அடிகளார். மன்னாரிலிந்து இருந்து அழைத்து வரும் போது நோய் வாய்ப்பட்டு இறந்தவர்களை அந்தந்த காடுகளில் புதைத்து விட்டு எஞ்சியவர்களைத்தான் மலையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற கதைகளே நாங்கள் கேட்டு வந்துள்ளோம். ஆனால் பூச்சாண்டி அதற்கு முற்பட்ட காலத்தில் இருந்து வந்த மக்கள் குறித்து பேசுகின்றன. அக்கால கட்டத்தில் அடிப்படை வசதிகள் குன்றிய நிலையில் இலங்கை நாட்டு மக்கள் வாழ்ந்தனர்.

ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்காக தகரம், சீட் போட்ட லயன்காம்பராக்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவர்களுக்காக மின்சாரம், குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நாவலில் அந்நேரம் வெள்ளையர்களினால் செய்து கொடுக்கப்பட்ட அடிப்படை வசதிகள் பற்றி சொல்லுகின்றன. இது மக்களை அடிமைகளாக வைத்திருப்பதற்காக அல்ல, தொழிலாளர்களை கௌரவமாக வைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களிடமிருந்து வினைத் திறன் மிக்க வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆங்கிலேயர்களினால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் அடையாளமாக யாழ்ப்பாணத்திலும் ஊர் ஒன்று உருவாகியுள்ளது. வரலாற்றை ஆதாரங்களுடன் தேடி எடுத்து ஒரு புதிய பார்வையில் ஒரு புதிய தளத்தை உருவாக்கியுள்ளது இந்த நாவல். ஒன்றை எழுதினால் அது பத்தோடு பதினொன்று என்று போய் விடக் கூடாது. ஒன்று சர்ச்சையை ஏற்படுத்த வேண்டும். அல்லது பேச வேண்டும் அல்லது மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

பூச்சாண்டி ஒரு சர்ச்சையை ஏற்படுத்துகின்ற நாவல். ஏனென்றால் இதுவரைக்கும் மலையகம் தொடர்பாகக் கூறப்பட்ட அனைத்தையும் உடைத்தெறிந்து இருக்கிறது. அந்த பிம்பத்தை மாற்றி இருக்கிறது. இந்த நாவல் ஒரு விவாதத்தை ஏற்படுத்தக் கூடியவை. ஒரு சர்ச்சையை ஏற்படுத்தும். உண்மையில் சர்ச்சையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் எல்லா மட்டத்திற்கும் அது சென்றடையும். இந்த ஒரு வித்தியாசமான படைப்பு. மலையகம் 200 இல் தொடர்பில் இருந்த மாயை அல்லது அவர்களிடத்திலுள்ள பிற்போக்குத் தனமான கருத்தியலை அல்லது வரலாறு தொடர்பிலான ஒரு பக்கத்தை உடைத்து இந்த நோக்கத்திற்காக அழைத்து வரப்பட்டார்கள்.

அவர்கள் இந்த நோக்கத்திற்காகத்தான் இருந்தார்கள். அவர்கள் இந்த நோக்கத்திற்காகத்தான் மாடாக உழைத்தார்கள் என்ற சம்பவங்கள் முன் வைத்து 200 தேயிலை தோட்டத்தை உருவாக்குதல் செயற் திட்டத்தை கதையின் மூலம் முன் வைக்கின்றார். உண்மையிலே நிலம் ஓர் இனத்தின் அடையாளம். நாங்கள் வன்செயலால் பாதிக்கப்பட்டு வடக்கில் வந்து நில உடமையாளர்களாக இருக்கின்றோம். பாதியளவிலான நில உடமையாளர்களாக இருப்பது எங்களுடைய இருப்புக்கு முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு காரணமாக அமையும்.

அந்த நோக்கத்தை அடைய வேண்டும். பூச்சாண்டி அதனைத்தான் சொல்லுகிறது. மலையக மக்கள் நில உடமையாளர்களாக மாற வேண்டும். உழைத்துச் சேர்த்த காசில் எப்படியாவது நிலத்தை வாங்கி நில உடமையாளர்களாக மாறும் போது அவர்களுடைய அடையாளமும் தனித்துவம் நிமிர்ந்து நிற்கும் என்பதையே பூச்சாண்டி சொல்லுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**(இக்பால் அலி)**

















# உலக தொலைக்காட்சி தினம்

21 நவம்பர்

விசேட அனுபந்தம் தினகரன்

# உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் முன்னோடியாக சிறந்து விளங்கும் OREL CORPORATION

OREL கோர்ப்பரேஷன் உலகளாவிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் முன்னணியில் நிற்கிறது, எலக்ட்ரோனிக்ஸ், தொலைத்தொடர்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற பல்வேறு தொழில்களில் ஒரு வலிமையான இருப்பை கொண்டிருக்கிறது. சிறந்த மற்றும் நிலையான முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் OREL கோர்ப்பரேஷன் அதிநவீன தொழில்நுட்பங்களால் வடிவமைக்கப்பட்ட எதிர்காலத்தை விளக்கு வைத்துள்ளது. இலங்கையின் போட்டித்திறன் வாய்ந்த ஸ்மார்ட் டிவி சந்தையில் ஒரு துணிச்சலான நகர்வில், OREL கோர்ப்பரேஷன் Orel Smart TV ஐ அறிமுகப்படுத்துகிறது. இது உலகளாவிய மற்றும் உள்நாட்டு தொழில்துறை ஜாம்பவான்களிடமிருந்து வேறுபடுத்தும் இணையற்ற தொலைக்காட்சி பார்ப்போரின் அனுபவத்தை வழங்குவதில் ஒரு உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. OREL கோர்ப்பரேஷனின் இலத்திரனியல் வர்த்தகத் தலைவரான அனுராதா பெரேரா, தினகரனுக்கு அளித்த பேட்டியில் இது குறித்து தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.உலகளாவிய தகவல் மற்றும் பொழுதுபோக்கு பரிமாற்றத்தில் தொலைக்காட்சி வகிக்கும் முக்கிய பங்கை வலியுறுத்திய அவர் இலங்கையின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பங்களிப்பதில் கூட்டுத்தாபனம் முழு மனதுடன் அர்ப்பணிப்புடன் இருப்பதை அவர் உறுதி செய்தார். புதிய Assembly Line வரிசையால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அங்கீகரித்தார். நேர்காணலின் சுருக்கம் பின்வருமாறு:

**கே: உலகத் தொலைக்காட்சி தினத்தை முன்னிட்டு OREL கோர்ப்பரேஷன் குறிப்பிடத்தக்க என்ன சாதனையைக் கொண்டாடுகிறது?**

“நவம்பர் 21ஆம் திகதி உலகத் தொலைக்காட்சி தினத்தை முன்னிட்டு, OREL கோர்ப்பரேஷன் இலத்திரனியல் துறையில் இலங்கையின் ஆரம்பமான தொழில்முறை Assembly Line திறந்து வைப்பதன் மூலம் அதன் குறிப்பிடத்தக்க சாதனையை பெருமையுடன் அறிவிக்கிறது. OREL Electronics இன் கீழ் இந்த அற்புதமான சாதனையானது, இலங்கையை அதிநவீன இலத்திரனியல் உற்பத்திக்கான வளர்ந்து வரும் மையமாக நிலைநிறுத்த, குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இந்த தொழில்முறை Assembly Line நிறுவப்பட்டதன் மூலம் OREL கார்ப்பரேஷன் நாட்டிற்குள் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வளர்ப்பதில் காண்பிக்கும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**கே: உங்கள் உபகரணங்களின் தரத்தை எவ்வாறு விவரிப்பீர்கள்?**

அதிநவீன இயந்திரங்களுடன் பொருத்தப்பட்ட மற்றும் மிகவும் திறமையான பணியாளர்களால் இயக்கப்படும் Assembly Line உயர்மட்ட மின்னணு தயாரிப்புகளின் உற்பத்தியை உறுதி செய்கிறது. மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சர்வதேச தரங்களை கடுமையாகக் கடைப்பிடித்து, OREL எலக்ட்ரானிக்ஸ், உள்நாட்டிலும், உலக அரங்கிலும் உயர்ந்த நுகர்வோர் மின்னணு மற்றும் மின்னணுக் கூறுகளுக்கான தேவையை பூர்த்தி செய்ய நன்கு தயார் நிலையில் உள்ளது.

**கே: நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் பொருளாதார வளர்ச்சிக்கு இணையாக உங்கள் திறனை எவ்வாறு விளக்குவீர்கள்?**

உற்பத்தி வரியின் மொத்த மதிப்பு 100 மில்லியன் என்ற கணிசமான முதலீட்டைக் குறிக்கிறது. இந்த கணிசமான நிதி அர்ப்பணிப்பு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் தொழில்சார் கூட்டமைப்பு வரிசையின் உருமாறும் தாக்கம் மற்றும் ஆற்றலில் OREL கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த குறிப்பிடத்தக்க முதலீடு, எலக்ட்ரானிக்ஸ் துறையில் தன்னை ஒரு முன்னோடியாக நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் செழிப்பு மற்றும் எதிர்காலத்திற்கும் பங்களிப்பதில் OREL கோர்ப்பரேஷனின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. மேலும், ஒரு தொழில்முறை Assembly Line நிறுவுவதற்கான பயணத்தில், பல முக்கியமான படிகள் மற்றும் செயல்முறைகள் உள்ளன. உள்நாட்டு மற்றும் சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்குதல், தேவையான அனுமதிகள், உரிமங்களைப் பெறுதல், கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர் தரங்களை நிலைநிறுத்துதல் ஆகியவற்றில் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்தல்.



OREL கோர்ப்பரேஷனின் இலத்திரனியல் வர்த்தகத் பொறுப்பாளர்
**அனுராதா பெரேரா**

**கே: சிறந்த தரத்தை அடைவதற்கு பணியாளர்கள் என்ன செய்ய வேண்டும்?**

Assembly Line இயந்திரங்களை திறமையாக இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான நிபுணத்துவத்துடன் பணியாளர்களை தயார் படுத்துவதில் பணியாளர் பயிற்சி மற்றும் மேம்பாடு மேற்கொள்ளப்பட்டது. தரக் கட்டுப்பாடு மற்றும் சோதனை நெறிமுறைகள் நிறுவப்பட்டன, தயாரிப்பு சிறப்பைப் பராமரிக்க பல்வேறு உற்பத்தி நிலைகளில் கடுமையான நடவடிக்கைகள் மற்றும் தர உத்தரவாத சோதனைகள் உள்ளடக்கப்பட்டன. உற்பத்தி செயல்முறை மேம்படுத்தல், உற்பத்திக் கொள்கைகள், பணிப்பாய்வுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கழிவுகளைக் குறைத்தல் போன்ற முறைகள் மூலம் இது கடைபிடிக்கப்பட்டது. முழு அளவிலான உற்பத்திக்கு முன், விரும்பிய விவரக்குறிப்புகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக கடுமையான சோதனை மற்றும் சரிபார்ப்பு நடத்தப்பட்டது. வளர்ந்து வரும் சந்தை தேவைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப நடப்பு பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு உத்திகளும் செயற்படுத்தப்பட்டன.

**கே: Orel Smart TV எவ்வாறு இலங்கையின் அறிமுக ஸ்மார்ட் டிவி என்ற சிறப்பைப் பெற்றுள்ளது?**

“இந்த ஸ்மார்ட் டிவிகள் உயர்நிலை ஸ்மார்ட் டிவி Brandகளில் காணப்படும் நவீன கலைகளைப் பயன்படுத்துகின்றன. அவற்றின் நம்பகத்தன்மை மற்றும் அதிநவீன நவீன கலையை நிறைவு செய்யும் வகையில், Orel Smart TV கள் விதிவிலக்காக மெல்லிய மற்றும் ஸ்டைலான வடிவமைப்பைக் கொண்டுள்ளன, கிடைக்கக்கூடிய மெல்லிய மொடல்களில் தங்கள் இடத்தைப் பாதுகாக்கின்றன. துடிப்பான மற்றும் razor-sharp displays 16.7 மில்லியன் வண்ண தட்டுகளுடன், 55 அங்குலம் மற்றும் அதற்கு மேல் உள்ள பெரிய திரை அளவுகளில் ultra-high-definition (UHD) 4K displays அடங்கும், சந்தையில் காட்சி தரத்திற்கான புதிய அளவுகோலை நிறுவி, வசீகரிக்கும் காட்சிகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

**கே: Orel Smart TV யின் விரிவான அம்சங்களைக் குறிப்பிடுவீர்களா?**

“Orel Smart TVகள் மேலும் விரிவான அம்சங்களுடன் செறிவூட்டப்பட்டுள்ளன. மேலும் அவை ஸ்பீக்கர்கள் போன்ற சாதனங்களுடன் தடையின்றி இணைப்பதற்கான புளூடூத் இணைப்பு உள்ளிட்ட விரிவான சாதனங்களுடன் இணக்கமாக உள்ளன. ஒட்டுமொத்த பயனர் அனுபவத்தை மேம்படுத்துகின்றன. கூடுதலாக, Orel Smart TVகள் HDMI, USB, Wi-Fi மற்றும் ஈதர்நெட் போன்ற நிலையான இணைப்பு இடைமுகங்களுடன் இடைமுகம் செய்து, பல்வேறு சாதனங்களை இணைக்கவும், சேமிப்பகத்தை விரிவுபடுத்தவும், இணையத்தை எளிதாக அணுகவும் பயனர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. Orel Smart TVகள் வழங்கும் எண்ணற்ற அம்சங்களின் மத்தியில் Androனை 13.2 இயங்குதளம் உள்ளது, இது இந்த மேம்பட்ட இயக்க முறைமையுடன் கூடிய இலங்கையின் அறிமுக ஸ்மார்ட் டிவி என்ற சிறப்பை Orel Smart TV பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், Orel Smart TV ஆனது ஆற்றல் செயல்திறனுக்கான அதன் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, ஆற்றல் சேமிப்புகளை அதிகரிக்க தானியங்கி ஸ்கிரீன்சேவர் பயன்முறை போன்ற அம்சங்களை உள்ளடக்கிய ஆற்றல் உணர்வு வடிவமைப்பு மற்றும் கூறுகளை உள்ளடக்கியது. ஆற்றல் வினைத்திறனுக்கான இந்த வலியுறுத்தல், ஆற்றல் செலவீனங்களைக் குறைப்பதன் மூலம் பயனாளர்களுக்குப் பயனளிப்பது மட்டுமன்றி, Orel Smart TVயை இலங்கை நுகர்வோருக்கு எட்டக்கூடிய விதிவிலக்கான பெறுமதியான முன்மொழிவாக நிலைநிறுத்துகிறது. OREL Electronics Assembly Line ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தவும், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் தயாராக உள்ளது. இலங்கையின் வளமான எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கான OREL கூட்டுத்தாபனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்த அற்புதமான முயற்சி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**வாசனா அபேநாயக்க**




## பிரதேச சபை, அட்டாளைச்சேனை

### விலைக்கோரல்கள் ஊடாக அரைக்கப்பட்ட எலும்புத்தூள் விற்பனை

விலங்குகளிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புகளில் இருந்து அரைக்கப்பட்ட எலும்புத்தூள் விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்கள் கோரப்படுகின்றன.
அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குச் சொந்தமான அஷ்ரப் நகரில் அமைந்துள்ள நிலநிரப்பு நிலையத்தில் (குப்பை கொட்டும் இடம்) அரைக்கப்பட்ட எலும்புத்தூள் விற்பனை செய்யப்படவுள்ளது.

**விலைக் குறிப்பீட்டாளர் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்**

1. பொருட்களை பரிசோதனை செய்யும் நாட்களில் அமைவிடத்திலேயே விண்ணப்பங்கள் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்படும்.
2. பொருட்களை பரிசோதிக்கும் நுழைவுக் கட்டணமாக ஒவ்வொருவரிடமிருந்தும் மீளச் செலுத்த முடியாத கட்டணமாக 500.00 ரூபா அறவிடப்படும்.
3. தெரிவு செய்யப்பட்ட விலைக் குறிப்பீட்டாளர், அன்றைய தினமே ஒரே தடவையில் முழுத் தொகையையும் செலுத்தி மூன்று நாட்களுக்குள் தங்களது பொருட்களை அகற்றிக் கொள்ள வேண்டும்.
4. மேற்கூறப்பட்ட அமைவிடத்தில் 2023 டிசம்பர் 04, 05 ஆம் திகதிகளில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை பொருட்களை பார்வையிடலாம்.
5. விலைக் கூறல்கள் 2023.12.06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அட்டாளைச்சேனை பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் விண்ணப்பங்களை இட வேண்டும். மேலும், காலை 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டு அவை திறக்காமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

**அரைக்கப்பட்ட எலும்புத்தூள் விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் / நிறுவனத்தின் பெயர்:…………………………………………
2. விண்ணப்பதாரியின் / நிறுவனத்தின் முகவரி:…………………………………………
3. தொலைபேசி இலக்கம் நிலையானது…………………..கையடக்கம் ………………..
4. மின்னஞ்சல் முகவரி :………………………………………………………………

| தொ. இல | விபரம் | கோரப்படும் 1Kg இற்கான தொகை ரூபா |
|---|---|---|
| 1. | அரைக்கப்பட்ட எலும்புத்தூள் | |

- 1Kg அரைக்கப்பட்ட எலும்புத்தூளுக்கான தொகை எழுத்தில்:………………………………………………………

கையொப்பம்:…………………………
பெயர்:…………………………………
இறப்பர் முத்திரை:……………………

**எம்.ஐ.எம். பாயிஸ்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**அட்டாளைச்சேனை**
**தொலைபேசி இலக்கம் : 0672277375**

# புலமைப் பரிசில் பரீட்சையில் ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியாலய மாணவி சாதனை

*(வவுனியா விசேட நிருபர்)*



புலமைப்பரிசில் பரீட்சையில் ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியாலய மாணவி எஸ். அப்ரீன் ஹப்லா 178 அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவரது சாதனைக்கு உறுதுணையாகவிருந்த வகுப்பாசிரியர் திருமதி ரூவனிக்கு பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு பலத்த பாதுகாப்பு

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில் நேற்றைய தினம் திங்கட்கிழமை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இரும்பு பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டுள்ளதுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் ஏனைய பொலிஸ் நிலையத்திலிருந்து மேலதிகமாக வரவழைக்கப்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞனை பொலிஸார் கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தியதால் தான் இளைஞன் உயிரிழந்தார் என உறவினர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்நிலையில் இளைஞனின் உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் மற்றும் பொதுமக்களை திரட்டி பாரிய போராட்டம் ஒன்றினை பொலிஸ் நிலைய பகுதியில் முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஒரு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. விசாரணைக்கு ஏதுவாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபொடவின் வழிகாட்டுதலின் கீழ் நுவரெலியா நகரை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. நுவரெலியா மாநகர சபை, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், அரச நிறுவனங்கள், பாதுகாப்புப் படையினர், சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள், வர்த்தக சங்கம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பங்குபற்றலுடன் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(படம்; தலவாக்கலை குறூப் நிருபர்)

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகார சபை
### விலைமனுக்கோரல்

**நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாத்தறை நில்வலா கங்கபட பூங்காவை மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு பராமரித்து நடத்திச் செல்லும் முகமாக செயற்பாட்டாளரைத் தேர்ந்தெடுத்தல்**

1. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்விலைமனுக்கோரல் மூலம் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நகர சபை எல்லைக்குள் நில்வலா கங்கைக்கு எல்லையாக நிர்மாணிக்கப்படும் நில்வலா கங்கபட பூங்கா செயற்றிட்டத்தை புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 05 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பராமரித்து நடத்திச் செல்லும் பொருட்டு செயற்பாட்டாளரை தேர்ந்தெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
2. இச்செயற்றிட்ட வளாகம் மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், குறித்த மாதாந்த வாடகை 03 வருடத்திற்கு ஒருமுறை திருத்தப்படுகிறது. எதிர்பார்க்கும் கொள்வனவாளர்கள் குறித்த வளாகத்தைப் பரீட்சித்துப் பார்த்து அதிகார சபைக்குச் செலுத்தக்கூடிய அதிகூடிய மாதாந்த வாடகையை குறிப்பிட்டு தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். செயற்பாட்டாளர் தேர்ந்தெடுக்கப்படுவது குறித்த வளாகத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பொது மதிப்பீட்டிற்கு மேலாக கிடைக்கும் அதிகூடிய பெறுமதியின் பிரகாரமாகும்.
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு குறித்த விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை மீளளிக்கப்படாத ரூ. 7500 மற்றும் சமூக பாதுகாப்பு வரி (2.5%) மற்றும் பெறுமதி சேர் வரி (15%) செலுத்தி பத்தரமுல்ல, செத்சிரிபாய, 7ம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து அல்லது மாத்தறை, கொட்டுவேகொட, H.G.P.M. கட்டிடம், இல. 7 1/1இல் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாத்தறை அலுவலகத்தில் 2023.11.21 முதல் 2023.12.07 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது ரூ. 250,000.00 கேள்வி வைப்புத் தொகையை அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு காசாக செலுத்தி அப்பற்றுச்சீட்டையும் விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய விதம் கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. விலைமனுக்களை ஒப்படைத்தல் 2023.12.08ம் திகதி பி.ப. 2.00 இற்கு முடிவடையும். விலைமனுக்கள் பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு குறித்த நேரத்திற்கு முன்பு தபாலில் "தலைவர், வருமான கேள்விச் சபை (சிறிய), மாநகர அபிவிருத்தி அதிகார சபை, 6ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அவ் அலுவலகத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "மாத்தறை நில்வலா கங்கபட பூங்காவிற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
5. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் விண்ணப்பதாரிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு காசு செலுத்தாமலேயே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கும் கால எல்லைக்குள் கேள்விப்பத்திரங்களைப் பரீட்சித்தல் பத்தரமுல்ல, செத்சிரிபாய, 7ம் மாடியில் அமைந்துள்ள மாநகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவில் அல்லது மாத்தறை, கொடுவேகொட H.G.P.M. கட்டிடம், இல. 7 1/1இல் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறும். இது பற்றிய மேலதிக விபரங்களை தலைமையகத்தின் தொ.பே.இல. 0112871079 மற்றும் மாத்தறை மாவட்ட அலுவலகத்தின் தொ.பே.இல. 0412230413 மூலம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வருமான கேள்விச் சபை (சிறிய),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல.**

# தமிழ் தினப்போட்டியில் மூவர் சாதனை







ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியாலயம் அகில இலங்கை தமிழ் மொழித்தின பரதநாட்டிய மற்றும் கர்நாடக சங்கீத போட்டிகளில் முதலிடத்தையும் மூன்றாமிடங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளது. முதலிடத்தை பெற்றுக்கொண்ட டி.டினுஜன் மற்றும் மூன்றாமிடங்களை பெற்றுக்கொண்ட வி.ஐஸ்வர்யா, எஸ். கிறிஷ்ணவேணி ஆகியோரை பாடசாலை சமூகம் வாழ்த்தியுள்ளது.

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
## இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
### பதியன் கன்று (பொலிபேக்) இறப்பர் செடியை மீள் அமைப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் 2024ஆம் ஆண்டு

தனியார் இறப்பர் கன்றுகளை மீண்டும் உரிமையாளருக்கு 2024 ஜனவரி/ பெப்ரவரி மற்றும் ஓகஸ்ட்/ செப்டெம்பர் காலத்திற்காக வர்த்தக ரீதியில் பெருந்தோட்ட பொருள் உற்பத்திக்கு தேவையான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன.

பீ.பி. 86, ஆர்.ஆர்.ஐ.சி 100, ஆர்.ஆர்.ஐ.சி. 102 க்ளோன்களில் பதியன் கன்று பொலிபேக் செடி உற்பத்தி செய்ய முடியும் என்பதோடு, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரை அடிப்படையில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் செடியை விற்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

நாற்றங்கால் அமைப்புக்கு முன்மொழியப்பட்ட காணியின் தகுதியை பரீட்சித்த பின் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதோடு நாற்றங்காலுக்கு பதியன் கிளைகளை பெற்றுக்கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டாகும்போது, 10 ஆண்டுகள் மேற்படாது வயதுடைய கிளை நாற்றங்கால் விண்ணப்பதாரர் வசமிருத்தல் அவசியமாகும்.

இறப்பர் மீள/ புதிய பயிர்ச்செய்கைக்காக திணைக்களத்திடம் உள்ள அல்லது திணைக்களத்தின் அனுமதி அளிக்கப்பட்ட வர்த்தக நாற்றங்கால் ஒன்றில் இருந்து இறப்பர் கன்றுகளை பெற்றுக்கொள்ள வேண்டி இருப்பதால் அனைத்து அரச பெருந்தோட்ட நிறுவனங்கள், தனியார் பெருந்தோட்ட நிறுவனங்களிடம் உள்ள இறப்பர் கன்று நாற்றங்கள் மற்றும் தனியார் இறப்பர் கன்று நாற்றங்கள் ஆரம்பிப்போர் இந்தத் திணைக்களத்தில் இருந்து அதற்காக அனுமதிப்பத்திரத்தை பெறுதல் வேண்டும். அதேபோன்று 2024 ஜனவரி/ பெப்ரவரிக்காக அனுமதிப்பத்திரம் பெறுகின்ற நாற்றங்கால் 2024 ஜனவரி 31 ஆம் திகதியாகும்போதும், 2024 ஓகஸ்ட்/ செப்டெம்பருக்கு அனுமதிப்பத்திரம் பெறும் நாற்றங்கால் 2024 ஓகஸ்ட் 31 ஆம் திகதியாகும்போதும் நாற்றங்கால் செயற்பாடுகளை ஆரம்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை குறித்த மாவட்டத்தின் பணிப்பாளர் (பிராந்தியம்) மற்றும் தலைமை அலுவலகத்தில் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, குறித்த முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

**1. களுத்துறை மாவட்டம்**
பணிப்பாளர் (பிராந்திம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், 2/195, பிரதான வீதி, களுத்துறை.
தொ.பே. 034-2228934

**2. கேகாலை, கண்டி, மாத்தளை, குருநாகல், கம்பஹா மற்றம் புத்தளம் மாவட்டங்கள்**
பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், 1/16, சேர் பிரான்சிஸ் மொலமுரே மாவத்தை, கேகாலை.
தொ.பே. 035-2222326

**3. இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்கள்**
பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், த.பெ. 02, புதிய நகர், இரத்தினபுரி
தொ.பே. 045-2222113

**4. காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்**
பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், மேல் டிக்சன் வீதி, காலி.
தொ.பே. 091-2242490

**5. மொனராகலை, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்கள்**
பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், பழைய கச்சேரி கட்டடம், மொனராகலை. தொ.பே. 055-2276207

**6. வவுனியா, முல்லைத்தீவு, அனுராதபுரம், மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள்**
பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், 1/16, சேர் பிரான்சிஸ் மொலமுரே மாவத்தை, கேகாலை.
தொ.பே. 035-2222326

விண்ணப்பம் நாற்றங்கால் அமைந்த மாவட்டத்திற்கு தொடர்புடைய பிராந்திய அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதி 2024 ஜனவரி/ பெப்ரவரிக்காக 2023 டிசம்பர் மாதம் 31 மற்றும் 2024 ஓகஸ்ட்/ செப்டெம்பருக்காக 2024 ஜூலை மாதம் 10 ஆம் திகதி என்பதோடு அதன் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்தில்கொள்ளப்படமாட்டாது.

**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்**
**இலக்கம் 465, கனஹேன, பத்தரமுல்லை.**
**T.P. 0112-889447/0112-889446**

**மாதவ வர்ணகுலசூரிய**
**பணிப்பாளர் நாயகம்**

## தேசிய கல்வி நிறுவகம் - மஹரகம
### பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி – 2024/2025
### Diploma in School Management (DSM) – 2024/2025

**தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**பாடநெறியின் காலம்** : பன்னிரெண்டு மாதங்கள் (வார இறுதி நாட்கள்)
: நிகழ்நிலை ஊடான இரு பருவங்களை (Semester) கொண்ட கல்விசார் செயன்முறைகள் நடைபெறும்.

**பாடநெறி நடைபெறும் இடம்** : தொழில்வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க

**பாடநெறியின் மொழிமூலம்** : சிங்களம் / தமிழ்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா 50,000/- (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்)
விண்ணப்பக் கட்டணம் ரூபா 1,500/-, பதிவுக் கட்டணம் ரூபா 1,000/-

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 31.12.2023**

**விண்ணப்பிக்கும் முறை :**

தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் உத்தியோகபூர்வ இணையதள முகவரி exams.nie.lk/intakes/new ஊடாக விண்ணப்பதாரிகள் நிகழ்நிலையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை (exams.nie.lk/info/applying-for-new-enrollments) இணையதள முகவரியிலிருந்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பேராசிரியர் பிரசாத் சேதுங்க**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**



## வட மத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு I (அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்தல் – 2023 (கட்டம் II)

மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்புக்கு இயைபாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் 2023-10-27ஆம் திகதிய ‘‘தினமின’’, ‘‘தினகரன்’’ மற்றும் ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் 02ஆம் இலக்க கல்வித் தகைமைகளில் (ஆங்கில பாடத்திற்கு) திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதுடன் அந்தத் திருத்தம் வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு இணையதளத்தில் (psc.nc.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023-11-29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**செயலாளர்,**
**மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,**
**வடமத்திய மாகாணம்.**

## அட்டாளைச்சேனை பிரதேச சபை

### 2024 ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு பின்வரும் பொருட்கள், வேலை மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2024 ஆம் வருடத்தில் பதிவு செய்து கொள்வதற்கு வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு விடுவிக்கப்படும் அழைப்பு கீழ் வரும் விண்ணப்பப்படிவத்தை 2023.12.31 ஆம் திகதி பி.ப.2.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு “செயலாளர், பிரதேச சபை, அட்டாளைச்சேனை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்திற்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

பதிவிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை “செயலாளர், பிரதேச சபை, அட்டாளைச்சேனை” எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலை அல்லது ரொக்கப் பணம் சகிதம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வழங்கல் நிபந்தனைகள் தொடர்பில் பதிவு செய்து கொள்ளும் போது அறிவுறுத்தப்படும் மேலதிக விபரங்களை இந்த தொலைபேசி இலக்கம் மூலம் பெற்றுக் கொள்ளலாம். **0672277375**

**வழங்கல்கள், சேவைகள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பாக அரசாங்க வரியுடன் கூடிய பதிவுக் கட்டணம் ரூபா 1000.00**

1. அலுவலக தளபாடங்களை வழங்குதல் மற்றும் திருத்த வேலைகள் ( மேசை, கதிரை, அலுமாரி மற்றும் உருக்கு உபகரணங்கள்)
2. அலுவலகப் பணிகளுக்குத் தேவைப்படும் காகிதாதி மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
3. துப்புரவேற்பாட்டுச் சேவைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
4. வீதி நிர்மாணப் பொருட்கள் வழங்குதல்(அ.தார், கொலாஸ் ஆ. கருங்கல், மணல் மற்றும் மண்)
5. கட்டிட நிர்மாணப் பொருட்கள் வழங்குதல் (சீமெந்து, கம்பி, சீட் மற்றும் கனரகப் பொருட்கள்)
6. மரவகைகள் வழங்குதல் (பலகைகள், ரீப்பைகள், பராலைகள் மற்றும் தீராந்திகள்)
7. அலுவலக வேலைகளுக்குத் தேவையான இயந்திராதிகள் (போட்டோ கொப்பி இயந்திரம், புகைப்பட பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி இயந்திரம் மற்றும் கணனி அச்சுப்பொறி)
8. அலுவலக வேலைகளுக்கு உபயோகிக்கும் இயந்திராதிகளுக்குத் தேவைப்படும் (மை, டோனர், காட்ரிச் மற்றும் உதிரிப்பாகங்கள்)
9. மின்சார உபகரணங்கள், வீதி விளக்குகள் மற்றும் அவற்றைப் பராமரிப்பதற்காகத் தேவைப்படும் பொருட்கள் மற்றும் உகரணங்கள்
10. டயர், டீப், பெட்டரிகள் மற்றும் டீசல் பெற்றோல் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் வழங்குதல்.
11. மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குதல்
12. பாதுகாப்புக் கெமரா மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் (CCTV மற்றும் விரல் ரேகை பதிவு இயந்திரங்களை வழங்குதல் மற்றும் திருத்த வேலைகள்)
13. பெற்றோல், டீசல் வாகனங்களின் திருத்த வேலைகள் (கரேஜ்)
14. பெற்றோல், டீசல் வாகனங்களை சேர்விஸ் செய்தல்
15. மின்சார மோட்டார், மின்பிறப்பாக்கிகள் மற்றும் வாகன மின்சார முறைமை திருத்த வேலைகள்
16. வாகன வளிச்சீராக்கி/ வீட்டு வளிச்சீராக்கிகளை வழங்குதல் மற்றும் திருத்த வேலைகள்
17. கணிணி இயந்திரம், கணனி அச்சுப் பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம், போட்டோ கொப்பி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் திருத்த வேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்.
18. உத்தியோக பூர்வ முத்திரை மற்றும் திகதி முத்திரைகளை தயாரித்து வழங்குதல்
19. உணவு, பானங்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல், மர வெட்டும், புல் வெட்டும் இயந்திரங்களின் திருத்த வேலை.
20. மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குதல், நில அளவைச் சேவைகளை வழங்குதல் மற்றும் சட்டத்தரணி சேவைகளை வழங்குதல்
21. டிஜிட்டல் பதாகைகள், ஸ்கிரீன் பிரிண்ட், பெயர்ப்பலகை மற்றும் LED பெயர்ப்பலகைகளை வழங்குதல்
22. அலுவலக அடையாள அட்டைகளை தயாரித்தல்
23. ஒலிபெருக்கி இயந்திரம், மின்சார அலங்காரம், மின்சார உபகரணங்கள், வீடியோ செய்தல், புகைப்படம் எடுக்கும் சேவை மற்றும் வைபவப் பொருட்களை வழங்குதல்
24. தோட்ட அலங்காரம் தொடர்பான கொங்கிரீட் துணையுறுப்பாகங்களை வழங்குதல், முன்பள்ளி விளையாட்டுப் பொருட்கள், சிறுவர் பூங்கா உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள்
25. வாடகை அடிப்படையில் JCB இயந்திரங்கள், D4D இயந்திரங்கள், பகட் வாகனம்(Arial Platform Vehicle) மற்றும் லொறிகள் வழங்குதல்
26. கட்டிடம் மற்றும் வீதி நிர்மாண ஒப்பந்தங்கள்.
27. ஏனையவை அனைத்து ஒப்பந்தக்காரர்களதும் இக்டாட் (ICTAD) சான்றிதழ், விண்ணப்பதாரரின் பெயரில் இருத்தல் வேண்டும். அதன் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் / நிறுவனத்தின் பெயர்:…………………………………………
2. விண்ணப்பதாரியின் / நிறுவனத்தின் முகவரி:…………………………………………
3. தொலைபேசி இலக்கம் நிலையானது…………………கையடக்கம் …………………
4. மின்னஞ்சல் முகவரி :……………………………………………………………
5. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் தொடர் இலக்கம்:……………………

| தொ. இல | தொடர் இலக்கத்துடன் மற்றும் பொருள் / சேவை |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

6. வழங்க இயலுமான வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளதாயின் அது தெடர்பான விபரங்கள்: ……………………………
7. வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:…………………………………………
8. வெட் (VAT) வரி இலக்கம்:…………………………………
(சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
9. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி:…………………………………
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளின் கீழ் குறித்த பொருள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு கட்டுப்படுகிறேன் என உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்:……………………………
பெயர்:……………………………………
இறப்பர் முத்திரை:………………………

**எம்.ஐ.எம். பாயிஸ், செயலாளர்,**
**பிரதேச சபை, அட்டாளைச்சேனை**
**தொலைபேசி இலக்கம் : 0672277375**

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.10.18 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி திரு எம்.எம். சபுர்தீன் அத்தாட்சிப்படுத்திய 2011.10.31 திகதியிட்ட முதநிலை ஈட்டு முறி இல. 10675, 2013.04.04 திகதியிட்டு அத்தாட்சிப்படுத்திய முதநிலை ஈட்டு முறி இல. 11571, 2015.02.25 திகதியிட்ட முதநிலை ஈட்டு முறி இல. 12413, 2013.04.04 திகதியிட்ட இரண்டாம் நிலை ஈட்டு முறி இல. 11572, 2015.02.25 திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல. 12414, 2015.02.25 திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல. 12415 ஆகியவற்றின் பேரில் மன்னார், சின்னகடை, இல. 36 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. திருச்செல்வம் ஜஸ்டின் மற்றும் திருமதி ஜஸ்டின் சுசிலா (ஸனு கன்ஸ்ட்ரக்ஷன் வேர்க்) ஆகியோரிடமிருந்து, 2023.09.26 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 13,461,099.04 (பதின்மூன்று மில்லியன் நானூற்றி அறுபத்தொரு ஆயிரத்து தொண்ணூற்றொன்பது ரூபாய் நான்கு சதம்) மற்றும் ரூ. 20,003,789.12 (இருபது மில்லியன் மூவாயிரத்து எழு நூற்று எண்பத்தொன்பது ரூபாய் பன்னிரெண்டு சதமும்) அத்துடன் ரூ. 7,695,326.80 (ஏழு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து முந்நூற்று இருபத்தாறு ரூபாய் எண்பது சதம்) மற்றும் ரூ. 9,990,115.43 (ஒன்பது மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூறு ஆயிரத்து நூற்றுப் பதினைந்து ரூபாய் நாற்பத்து மூன்று சதம்) மீது 2023.09.27 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை முறையே ஆண்டுக்கு இருபத்திரெண்டு தசம் பூச்சியம் நான்கு (22.04%) வீதத்திலும் இருபத்தேழு தசம் ஏழு ஐந்து (27.75%) வீதத்திலும் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்
2. பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி திரு. எம்.எம். சபுர்தீன் அத்தாட்சிப்படுத்திய 2011.10.31 திகதியிட்ட முதநிலை ஈட்டு முறி இல. 10675, 2013.04.04 திகதியிட்டு அத்தாட்சிப்படுத்திய முதநிலை ஈட்டு முறி இல. 11571, 2015.02.25 திகதியிட்ட முதநிலை ஈட்டு முறி இல. 12413, 2013.04.04 திகதியிட்ட இரண்டாம் நிலை ஈட்டு முறி இல. 11572, 2015.02.25 திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல. 12414, 2015.02.25 திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல. 12415 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்கூறிய ரூ. 13,461,099.04 (பதின்மூன்று மில்லியன் நானூற்றி அறுபத்தொரு ஆயிரத்து தொண்ணூற்றொன்பது ரூபாய் நான்கு சதம்) மற்றும் ரூ. 20,003,789.12 (இருபது மில்லியன் மூவாயிரத்து எழு நூற்று எண்பத்தொன்பது ரூபாய் பன்னிரெண்டு சதமும்) அத்துடன் 2023.09.27 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.றீ. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மன்னார் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

1. வட மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் பிரிவில், மன்னார் கிழக்கு, மன்னார் நகரில் பெரியகடை MN/80 இலக்க கிராம சேவகர் பிரிவில் மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் மன்னார் நகர சபை எல்லைகளுள் வோர்ட் இல. 4 இல் கிராண்ட் பஸார் கிராமத்தில் அமைந்த மூன்று (03) நிரந்தரக் கடையுடன் புதுப்பிக்கும் நிர்மாண வேலையுடன் ஒரு (1) நிரந்தரக் கட்டிடத்துடன் “திஸ்ஸவெர ரத்னசிங்கம் முதலியார் காணி மற்றும் குடிநிலம்“ என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். முருகதாஸ் தயாரித்த 2005 செப்டெம்பர் 17 திகதியிட்ட வரைபடம் இல. 1169 இல் விபரித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் சுப்ரமணியம் கோபாலகிருஷ்ணனின் ஆதனமும் பரம்சோதிநாதனின் ஆதனமும், கிழக்கில் குமரன் தியட்டர் பாதையும், தெற்கில் மீன் சந்தை பாதை அல்லது கடலேரி வீதியும் மேற்கில் சுப்ரமணியம் கோபாலகிருஷ்ணனின் ஆதனமும் மன்னார் மாவட்ட மீன்பிடி கூட்டுறவுச் சங்க யூனியன் லிமிட்டெட்டின் நிலமனைகளும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பதினொரு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.01, பே.11.25) விஸ்தீரணமுடையது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 1 அண்மையில் வரைபடம் இல. 2895 மூலம் மீளளவை செய்து இங்கு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணம், மன்னார் மாவட்டத்தில், மன்னார் பிரிவில், மன்னார் கிழக்கு, மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் மன்னார் நகர சபை எல்லைகளுள் பெரியகடை MN/80 இலக்க கிராம சேவகர் பிரிவில் வோர்ட் இல. 4 இல் கிராண்ட் பஸார் கிராமத்தில் அமைந்த மூன்று (03) நிரந்தரக் கடையுடன் புதுப்பித்தல் நிர்மாண வேலையுடன் ஒரு (1) நிரந்தரக் கட்டிடத்துடன் “திஸ்ஸ வெர ரெத்னசிங்கம் முதலியார் காணி மற்றும் குடிநிலம்” என அழைக்கும் காணி மன்னார், உப்புகுளம், பள்ளிவாசல் வீதி, இல. 160 இல் தனது அலுவலகத்தைக் கொண்டுள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். சீ.எம். ராபிக் தயாரித்த 2011 செப்டெம்பர் 23 இல் அளவையிட்ட வரைபடம் இல. 2895இல் காணித்துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு, வடக்கில் சுப்ரமணியம் கோபாலகிருஷ்ணன் மற்றும் பரம்சோதிநாதனின் ஆதனமும், கிழக்கில் குமரன் தியட்டர் பாதையும், தெற்கில் மீன் சந்தை பாதையும் மேற்கில் மன்னார் மாவட்ட மீன்பிடி கூட்டுறவுச் சங்க யூனியன் லிமிடெட்டின் நிலமனையும் சுப்ரமணியம் கோபாலகிருஷ்ணனின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பதினொரு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.01, பே.11.25) விஸ்தீரணமுடைய மன்னார், தியட்டர் வீதி, வோட் இல. 4 இல் அமைந்த வரிமதிப்பு இல. 36 ஐக் கொண்ட காணி ஆகும். இக்காணி மன்னார் காணிப்பதிவகத்தில் B174/127 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. வட மாகாணம், மன்னார் மாவட்டத்தில், மன்னார் பிரிவில், மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் மன்னார் நகர சபை எல்லைகளுள் சின்னகடை MN/78 இலக்க கிராம சேவகர் பிரிவில் மன்னார் கிழக்கு மன்னார் நகரில் சின்னகடையில் அமைந்த இருபத்தெட்டு பேர்ச்சுகள் (ஏ.0 றூ. 0, பே.28) விஸ்தீரணமுடைய காணி அதாவது மேற்கூறிய தெற்குப் பக்கத்தில் பிரிக்கப்பட்ட பாகம் தரை ஓடு பதித்த வீடும் முற்றமும் பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்துள்ள பாகம் கிழக்கில் பிரதான வீதியும், வடக்கில் டாக்டர் எளியஸ் எம்மானுவெல் பீரிஸ் மற்றும் மனைவி தெரேசா புஷ்பம் ஆகியோரின் ஆதனமும், மேற்கில் பாதையும் தெற்கில் திருமதி ஜெஸ்மினி தியாகராஜா மற்றும் எமானுவெல் லோகு ஆகியோரின் ஆதனமும் ஆகும்.

மேற்கூறிய ஆதனத்திலிருந்து,

மன்னார் கிழக்கு, மன்னார் நகரில் சின்னகடையில் அமைந்த பன்னிரெண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.12) விஸ்தீரணமுடைய அதே அளவை உள்ளடக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சாந்தன்பிள்ளை தயாரித்த 2007 ஆகஸ்ட் 22 திகதியிட்ட அளவை வரைபடம் இல. 1297 இன் பிரகாரம் மேற்குப் புறத்தில் பன்னிரெண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.12) விஸ்தீரணமுடைய பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த பாகம் வடக்கில் எளியஸ் எம்மானுவெல் பீரிஸ் மற்றும் மனைவி தெரேசா புஷ்பம் ஆகியோரின் ஆதனமும், கிழக்கில் சின்னதம்பி யோகராசாவின் ஆதனமும், தெற்கில் பீ. எம்மானுவெல் லோகுவின் ஆதனமும் மேற்கில் ஒழுங்கையும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1297 இல் காணித்துண்டு 1 என அடையாளமிட்ட காணியில் காணப்படும் மன்னார் பீல்ட் வீதி, வோர்ட் இல. 5, வரி மதிப்பு இல. றீ.வீ.74/1 ஐக் கொண்ட தரை ஓடு பதித்த வீடும் ஆகும். (இவ் ஆதனம் மன்னார் காணிப்பதிவகத்தில் B193/120 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.)

3. வட மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் பிரிவில் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் மன்னார் நகர சபை எல்லைகளுள் சின்னகடை MN/78 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில், மன்னார் நகரில் சின்னகடையில் அமைந்த “சின்னகமம்” என அழைக்கும் காணியின் காணித்துண்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.S. கொடுதொரே தயாரித்த 2001 ஏப்ரல் 14 திகதியிட்ட வரைபடம் இல. 822 இல் காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த பாகம் வடக்கில் நல்லம்மாவினதும் ஏனையோரினதும் ஆதனமும், கிழக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.S. கொடுதொரே தயாரித்த 1983 ஒக்டோபர் 05 திகதியிட்ட வரைபடம் இல. 78 இல் காணித்துண்டு 4 S.A. ராஜசெல்வத்தின் ஆதனமும் தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 822 இல் திருச்செல்வம் ஜஸ்டினுக்கு சொந்தமான காணித்துண்டு 2 உம் மேற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 78 இல் றீ.எம். நெவிஸின் ஆதனம் காணித்துண்டு 2 ம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர் பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு மூன்று ஒன்று (ஹெக்.0.0431) க்குச் சமமான பதினேழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.17) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் தரை ஓடு பதித்த வீடும் ஆகும். இக்காணி மன்னார் காணிப் பதிவகத்தில் B174/126இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
4. வட மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் பிரிவில் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் மன்னார் நகர சபை எல்லைகளுள் சின்னகடை MN/78 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில், மன்னார் நகரில் சின்னகடையில் அமைந்த “சின்னகமதடிவயல் வண்ணகுளம்” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் A. சாந்தபிள்ளை கொடுதொரே தயாரித்த 2001 ஏப்ரல் 14 திகதியிட்ட வரைபடம் இல. 822 இல் காணித்துண்டு 2 என அடையாளமிட்ட காணி வடக்கிலும் கிழக்கிலும் மேற்கூறிய வரைபடம் 822 இல் திருச்செல்வம் ஜஸ்டினுக்குச் சொந்தமான காணித்துண்டு 1 உம், தெற்கில் நடைபாதையும், மேற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.S. கொடுதொரே தயாரித்த 1983 ஒக்டோபர் 05 திகதியிட்ட வரைபடம் இல. 78 இல் காணித்துண்டு 2 றீ.எம். நெவிஸின் ஆதனமும், எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர் பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்று ஏழு ஏழு (ஹெக்.0.0177) க்குச் சமமான ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.7.0) விஸ்தீரணமுடையது. இக்காணி மன்னார் காணிப் பதிவகத்தில் B171/107 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.


இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப் படி,

**திரு. எஸ்.ஆர்.சீ.ஜே.ரஜீவ்**
**கிளை முகாமையாளர்**


**இலங்கை வங்கி**
**மன்னார் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# சிறு விளம்பரம்






118
ஜீப்புகள், பிக்கப்புகள்
விற்பனைக்கு







106
கார்கள்
விற்பனைக்கு

SG-AAX-4494 BAJAJ RE- THREE WHEELER CAR 2015, RED கூடிய விலைக் கோரிக்கைக்கு . CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 076112




PT-8635 TATA 207 CAB, 2012, அதியுயர் விலைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 075688



122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

YK-0962 BAJAJ, 2011, QQ-6927 BAJAJ, 2008, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 081 0 . 075686



301
வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்புகள்/சேவைகள்

நீர் கசிவு நிபுணர்கள் ★ கொங்கிறீட் ஸ்லெப்களில், ★ குளியலறைகளில், ★ மீன் தொட்டிகளில் , ★ சுவர்களில், ★ வீட்டுனுள் தரையில் நீ ரூற்று எமக்கு சொல்லவும். பிரச்சினை முடிவுக்கு கொண்டு வ ரப்படும். நாடளாவிய ரீதியில் சேவை. GLK ENGINEERING 0772500366/ 0719375997. 076081




## தேசிய உப்பு நிறுவனம்

(அரசாங்கத்திற்கு உரிமையுள்ள கம்பனி)

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கிளிநொச்சி, ஆனையிறவு வீதி தரைப்பரப்பிற்கு ABC கற்றூள் பதித்தல் - 400 கியுப்புக்கள்

தேசிய உப்பு நிறுவனமானது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் ஆகியவற்றின் ஆதிக்கவரம்பின் கீழுள்ள அரசாங்கத்திற்கு உரிமையுள்ள நிறுவனமாகும். கம்பனியானது வீதி தரைப்பரப்பு நிர்மான நோக்கங்களுக்காக Aggregate Base Course ஐ கொள்வனவு செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது. 2023.12.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தயவு செய்து அனுப்புங்கள் அல்லது கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தலையங்கத்தை தயவு செய்து குறிப்பிடவும்.

விலைமனு ஆவணத்தை பெற்றுக் கொள்ளல்: மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாகிய 1000 ரூபாவை வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்திய பின்னர், கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 561/3, ஆம் இலக்கத்திலுள்ள தேசிய உப்பு நிறுவன பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கீழே குறிப்பிட்டுள்ள முகவரியிலிருந்து அல்லது கிளிநொச்சி ஆனையிறவு உப்பளத்திலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் தரவுத் தாளில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனு ஆவணமானது மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**இல.: 561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

**தொலைபேசி: 0112368964**
**தொலைநகல்: 0112368974**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கம்பஹா

### நலன்புரி சிற்றுண்டிச்சாலை – மீரிகம ஆதார வைத்தியசாலை – 2024

2024ஆம் வருடத்தில் மீரிகம ஆதார வைத்தியசாலை நலன்புரி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு பொருத்தமானவரை தெரிவு செய்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

❖ 2023-11-22ஆம் திகதி 2023-12-04ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில், பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் மற்றும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பிணைத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணமாக 1000.00 ரூபாவை மீரிகம ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகருக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்டதன் பின் விலைமனுக்கள் மற்றும் இயைபுடைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
❖ ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீரிகம ஆதார வைத்தியசாலையில் அலுவலக நேரத்தில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
❖ பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ என வெவ்வேறான உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ‘‘நலன்புரி சிற்றுண்டிச்சாலை - மீரிகம ஆதார வைத்தியசாலை - 2024’’ எனக் குறிப்பிட்டு 2023-12-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மீரிகம ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது ‘‘மருத்துவ அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, மீரிகம’’ எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
❖ தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்தவுடன் 2023-12-05ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீரிகம ஆதார வைத்தியசாலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
❖ விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
❖ விலைக்கோரலை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
❖ இந்த விலைக்கோரல் தொடர்பில் அனைத்து தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமையை கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மருத்துவ நிபுணர் இந்திக வன்னிநாயக்க,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம்,**
**கச்சேரி கட்டிடத்தொகுதி,**
**கம்பஹா.**

**தொலைபேசி: 033-2222873, 033-2222874**
**தொலைநகல்: 033-2230992**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 06.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினம் - 07.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | மட்டக்களப்பு நகரக்கிளை - 113 |
|---|---|
| கிளைகள் | காத்தான்குடி, வாழைச்சேனை, ஏறாவூர் களுவாஞ்சிக்குடி, செங்கலடி, கல்லாறு, ஓட்டமாவடி, கொக்கட்டிச் சோலை |
| சேவை மையங்கள் | ஆரையம்பதி, கிரான்குளம், இருதயபுரம், வாகரை, கிரான், சித்தாண்டி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்தச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு**
**இல. 25/1, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு**
**தொலைபேசி இல. 065-22244746, 065-2222653**

PEOPLES BANK
Pride of the Nation




Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343


## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 1 | பருத்திச்சேனை கி.அ. பிரிவில் (I ஆம் கட்டம்) மீனா முன்பள்ளியின் திடமான நடைபாதையின் நிர்மாணம் |
| 2 | பருத்திச்சேனை, நொச்சாண்டக்கல் கி.அ. பிரிவில் நொச்சாண்டக்கல் திடமான நடைபாகையின் நிர்மாணம் ( II ஆம் கட்டம்) |
| 3 | நோச்சாண்டக்கல் கி.அ. பிரிவில் நொச்சாண்டக்கல் திடமான நடைபாதையின் நிர்மாணம் (III ஆம் கட்டம்) |
| 4. | திகிலிவெட்டை துறையடி வீதியின் நிர்மாணம் ( I ஆம் கட்டம்) |
| 5. | திகிலிவெட்டை துறையடி வீதியின் நிர்மாணம் ( I I ஆம் கட்டம்) |
| 6 | வாழைச்சேனையில் GITZ வீதியின் நிர்மாணம் |
| 7. | கொக்கட்டிச்சோலை கோவில் உள்ளக வீதியின் நிர்மாணம் (I ஆம் கட்டம்) |
| 8 | கொக்கட்டிச்சோலை கோவில் உள்ளக வீதியின் நிர்மாணம் (II ஆம் கட்டம்) |
| 9 | கிரான்குளம் கருத்திட்ட வீதியின் மேம்படுத்தல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.11.21 ஆம் திகதியிலிருந்து 2023.11.28 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்கை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கமத்தொழில் அமைச்சு

## காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**IDA Credit No: 6346 LK – P163742**

7

## வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கூலமுரைப்பு களஞ்சிய கடையின் (எஞ்சிவேலை) நிர்மாணம்

**பெறுகை இல.: LK-MOA-383046-CW-RFB-PMU**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் செலவுகளை நோக்கியதாக உலக வங்கி – சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கூலமுரைப்பு களஞ்சிய கடையின் (எஞ்சிய வேலை) நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்களின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் (CSIAP) சார்பில் திட்டப் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| பெறுகை இல. | வேலை விபரம் | CIDA பதிவு தரம் மற்றும் துறை | மீளளிக் கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை தொகை (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் | மதிப்பிடப் பட்ட செலவு (ரூபா மில்.) வெட் தவிர்த்து | நிர்மாணக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| LK-MOA-383049-CW-RFB-PMU | வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கூலமுரைப்பு களஞ்சிய கடையின் (எஞ்சிய வேலை) நிர்மாணம். | C4 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 19,000.00 | 1,000,000.00 2024 மே 6ஆம் திகதி வரை செல்லுபடி | 95.00 | 90 நாட்கள் |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு முறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) மேல் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் துறை மற்றும் தரத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் (SOEs) அல்லது அமைப்புகள் போட்டியிட தகுதிபெறலாம் என்பதோடு உலக வங்கி பெறுகை ஒழுங்குமுறையின் 3.23 சரத்தின் III ஆவது பிரிவுக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நிறுவ முடியுமாக இருந்தால் மாத்திரமே ஒப்பந்தம் வழங்கப்படும்.

5. ஒப்பந்தம் வழங்குவதற்காக தகைமைக்கு தேவையான தகுதி விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ராஜகிரிய, மாதின்னாகொட, எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை, இல.: 61/1, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், திட்ட முகாமைத்துவ பிரிவு, திட்டப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே. 011-2053252, தொலைநகல்: 011-2053167, மின்னஞ்சல்:- **pdcsiap@gmail.com, csiap.procurement@gmail.com)** என்பதோடு 2023 நவம்பர் 20 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 11ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வேலை நாட்களின் அதே இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

7. மீளளிக்கப்படாத கட்டணமாக 19,000.00 ரூபாவை செலுத்தி 0900 மணி தொடக்கம் 14.00 மணி வரை 2023 டிசம்பர் 11ஆம் திகதி வரை மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் திட்டப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணத்தை 09.00 மணி தொடக்கம் 14.00 மணி (பி.ப. 2.00) வரை 2023 நவம்பர் 20 தொடக்கம் 2023 டிசம்பர் 22 வரை வேலை நாட்களில் ரொக்கப்பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

8. விலைமனுக்களை 2023 டிசம்பர் 11ஆம் திகதி 14.00 மணி (பி.ப. 2.00) அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், திட்ட முகாமைத்துவ பிரிவு, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல.: 61/1, எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை, மாதின்னாகொட, ராஜகிரிய என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன் விலைமனுக்களை ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

9. அனைத்து விலைமனுக்களும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் நேரத்திற்கு விலைமனு ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் வடிவத்தில், இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ராஜகிரிய, மாதின்னாகொட, எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை, இல.: 61/1, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், திட்ட முகாமைத்துவ பிரிவில் 2023 டிசம்பர் 1ஆம் திகதி 10.30 மணிக்கு இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.

**தலைவர்,**
**திட்டப் பெறுகைக் குழு**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்**
**இல.: 61/1, எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை,**
**மாதின்னாகொட,**
**ராஜகிரிய**
திகதி: 2023 நவம்பர் 20

# 2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் பதிவு செய்தல்

## தேசிய தொற்றுநோய் நிறுவனம் – அங்கொட (IDH)

2024ஆம் வருடத்தின் பொருட்டு இந்த வைத்தியசாலைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்வதற்கு ஆர்வம் காட்டும் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்கள், உத்தரவுபெற்ற முகவர்கள், மொத்த விற்பனையாளர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தை சுயமாகத் தயாரித்து பூர்த்தி செய்ததன் பின் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காகப் பதிவு செய்தல்'' பொருள் வழங்கலுக்கு உத்தேசிப்பதானால் அ கீழுள்ள தொடர் இலக்கம், சேவை வழங்கலுக்கு உத்தேசிப்பதானால் ஆ கீழுள்ள தொடர் இலக்கத்தையும் குறிப்பிட்டு (உம்: அ-03 / ஆ - 02) எனக் குறிப்பிட்டு எமது நிபந்தனைகள் மற்றும் நியதிகளின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 2023 டிசம்பர் 12ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர், தேசிய தொற்றுநோய் நிறுவனம், அங்கொட (IDH) எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலில் தொலைந்துபோதல் தாமதமாதல் தொடர்பில் இந்த நிறுவனம் பொறுப்புகூறாது.

03. விண்ணப்பதாரர்கள் தாம் பதிவு செய்ய விரும்பும் ஒவ்வொரு பொருள் / சேவைக்கும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தி அங்கொட, தேசிய தொற்றுநோய் நிறுவனம் (IDH) பணிப்பாளரிடம் பெற்றுக்கொண்ட பொது 172 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒரு மாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய நிறுவனம் பொருட்களைப் போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

| 04. (அ) வழங்க வேண்டிய பொருட்கள் | |
|---|---|
| 1 | அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் (கூட்டல் இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், UPS மற்றும் கணனிகள்) |
| 2 | அலுவலக காகிதாதிகள் |
| 3 | அலுவலகத் தளபாடங்கள் (மரம், பிளாஸ்டிக், பைபர் கிளாஸ் மற்றும் உருக்கு) |
| 4 | கணனி காகிதாதிகள் ரிபன்கள், டோனர்கள், சீடிக்கள் போன்றவை |
| 5 | மெத்தைகள் மற்றும் தலையணைகள் |
| 6 | பாய்கள், விளக்குமாறுகள் மற்றும் அனைத்து வகையான தும்பு உற்பத்திகள் |
| 7 | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் |
| 8 | அனைத்து வகையான துணி சார்ந்த உற்பத்திகள் |
| 9 | மெக்கின்டொஷ் மற்றும் ரெக்ஷின்கள் |
| 10 | அலுமினியப் பொருட்கள் மற்றும் உலோகப் பொருட்கள் |
| 11 | மட்பாண்டங்கள் (போர்சிலின்) |
| 12 | ஹார்ட்வெயார் நிறுவனங்கள் (கட்டிட உபகரணங்கள் வயர், மின்குமிழ்கள், நிறப்பூச்சு, வார்ணிஷ் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் உட்பட) |
| 13 | வாகன உதிரிப்பாகங்கள் |
| 14 | வாகனங்களுக்கான டயர், டியுப் மற்றும் பெற்றரிகள் |
| 15 | மின்உபகரணங்கள் (வளிச்சீராக்கிகள், குளிரூட்டிகள் மற்றும் மின்விசிறிகள் போன்றவை) |
| 16 | பெயர்ப்பலகைகள் மற்றும் அறிவித்தல் பலகைகள் |
| 17 | காலணிகள், தரை விரிப்புகள் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் |
| 18 | பொலித்தின் உட்பட அது சார்ந்த உற்பத்திகள் |
| 19 | மர வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் |
| 20 | மருந்து உறைகள் |
| 21 | மருத்துவ உபகரணங்கள் |
| 22 | சத்திரசிகிச்சை உபகரணங்கள் |
| 23 | சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் |
| 24 | அனைத்து வகையான மருந்து வகைகள் |
| 25 | X ray Films / ECG Paper Roll |
| 26 | Ultrasound Scan இற்குத் தேவையான பாவனைப் பொருட்கள் |
| 27 | ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் |
| 28 | தீயணைப்பு உபகரணங்கள் |
| 29 | கிருமிநாசினித் திரவங்கள் |
| 30 | சத்திரசிகிச்சை கட்டுத்துணி பொருட்கள் |

| (ஆ) வழங்க வேண்டிய சேவைகள் | |
|---|---|
| 1 | தளபாடங்களின் திருத்தவேலைகள் |
| 2 | கணனிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 3 | மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் (புகைப்படப் பிரதி இயந்திரம், அச்சுப் பொறிகள், ரோணியோ இயந்திரம், மின் விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரம், பிளென்டர், ரைஸ் குக்கர் மற்றும் தேங்காய் துருவும் இயந்திரம் உட்பட) |
| 4 | குளிரூட்டிகள் மற்றும் வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் |
| 5 | வாகனங்களின் திருத்தவேலைகள் |
| 6 | உருக்கி ஒட்டுதல் மற்றும் இரும்பு சார்ந்த வேலைகள் |
| 7 | கதிரைகளைப் (பிரம்பு சார்ந்த வேலைகள்) பின்னுதல் மற்றும் குஷன் வேலைகள் |
| 8 | இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல் |
| 9 | போக்குவரத்து சேவைகளை வழங்குதல் (Excavator மற்றும் JCB உட்பட கனரக வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்) |
| 10 | திணைக்கள அடையாள அட்டைகளை தயாரித்தல் |
| 11 | அச்சு வேலைகள் |
| 12 | வாயு அடுப்புக்களின் திருத்தவேலைகள் |
| 13 | கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் (சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சை) |
| 14 | நாளாந்தம் பத்திரிகைகளை வழங்குதல் |
| 15 | வாகனப் புகைப் பரீட்சித்தல் |
| 16 | சடலங்களை வைத்தியசாலையிலிருந்து எடுத்துச் சென்று புதைக்கும் வேலை வரை |
| 17 | நீர்த்தாங்கிகளை சுத்தம் செய்தல் |
| 18 | கரையான் மற்றும் பீடைக் கட்டுப்பாடுகள் |
| 19 | ஆய்வுகூட சேவைகள் (ஆய்வுகூட பரிசீலனைகள் உட்பட) |
| 20 | உள்ளக மின் முறைமைகளின் பராமரிப்பு |
| 21 | கட்டிட நிர்மாணங்களுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் |
| 22 | அபாயகரமான மற்றும் தேவையற்ற மரங்களை வெட்டுதல், தோட்ட அலங்காரம் |
| 23 | மின் பிறப்பாக்கி இயந்திரங்களை சேர்விஸ், பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் |
| (இ) விற்பனைகள் | |
| அப்புறப்படுத்தப்படும் பொருட்கள் (காட்போட் பத்திரிகைகள், காகிதங்கள், கண்ணாடி போத்தல்கள், சிரட்டைகள், அனைத்து வகையான பொலித்தின் பிளாஸ்டிக் வகைகள், மின்சார உபகரணங்கள் மற்றம் பகுதிகள், மின் குமிழ்கள்) | |

**பணிப்பாளர்,**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம் - அங்கொட (IDH) தொலைபேசி: 0112-411284/0112-411224**

**05. மாதிரி விண்ணப்பப்படிவம்**

**2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல்**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம் - அங்கொட** (IDH)

01. வழங்குநரின் பெயர் :......................................................
02. வியாபாரத்தின் பெயர் :......................................................
03. வியாபாரத்தின் முகவரி :......................................................
04. தொலைபேசி இல. மற்றும் தொலைநகல் இலக்கம் :......................................................
05. மின்னஞ்சல் முகவரி :......................................................
06. WHATSAPP இலக்கம் :......................................................
07. வியாபாரப்பதிவு இலக்கம் மற்றும் திகதி:......................................................
08. விண்ணப்பிக்கும் வழங்கல்/ சேவைகள்:......................................................
(மேற்காணப்படும் தொடர் இலக்கம் மற்றும் சரியான விபரங்களைக் குறிப்பிடவும்)
09. கடன் வசதிகளை வழங்கக் கூடிய காலம்:......................................................
10. போக்குவரத்து வசதிகள் :......................................................
11. தற்போது தம்மால் வழங்கல்களை மேற்கொள்ளும் அரச அல்லது ஏனைய நிறுவனங்கள்
......................................................

தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்குவதாகவும், அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நான்/நாங்கள் இணங்குகிறேன்/இணங்குகிறோம்.

......................................................
கையொப்பம்


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

# கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

## இறப்பர் வர்த்தகத்திற்காக அனுமதிப்பத்திரம் பெறுதல்

1956 இன் 14 ஆம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் iii ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய 2024 ஆம் ஆண்டுக்கு இறப்பர் வர்த்தகத்திற்காக அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் புதுப்பித்தலுக்காக விண்ணப்பங்கள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை கோரப்படுகின்றன. அவ்வாறு அனுமதிப்பத்திரம் இன்றி மேற்குறிப்பிட்ட வேலையில் ஈடுபடுவது சட்டவிரோத செயலாகும்.

(02) தற்போது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இறப்பர் வர்த்தகர்களுக்கு அந்த அனுமதிப்பத்திரத்தை 2024 ஆம் ஆண்டுக்காக புதுப்பிப்பதற்கு விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்படும்.

(03) இறப்பர் வர்த்தக அனுமதிப்பத்திரத்தை புதிதாக பெற்றுக்கொள்வது அல்லது புதிப்பிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் குறித்த பிராந்திய அலுவலகத்திற்கு அல்லது தொடர்புடைய வகையில் தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இறப்பர் பால் சேகரிக்கும் நிலையங்களை நடத்தி வருபவர்களும் அனுமதிப்பத்திரம் எடுத்தல் வேண்டும்.

| | குறித்த மாவட்டம் | விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முகவரி |
|---|---|---|
| i | கீழ் பெயர் குறிப்பிடப்படப்படாத அனைத்து மாவட்டங்களுக்கும் மற்றும் கொழும்பு நகர், இரத்தினபுரி, தெஹிவலை, மொரட்டுவை, கொலன்னாவ, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, வத்தலை, களனி பிரதேச செயலாளர் பிரிவுகள் தொடர்பில் | பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 465, கனஹேன, பத்தரமுல்லை தொ.பே. 0112-889447/ 0112-889446 |
| ii | கேகாலை, குருநாகல், கண்டி, மாத்தளை, புத்தளம் மற்றும் கம்பஹா மாவட்டங்கள் (களனி மற்றும் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு தவிர்த்து) | பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், 1/16, சேர் பிரான்சிஸ் மொலமுரே மாவத்தை, கேகாலை. தொ.பே. 035-2222326 |
| iii | களுத்துறை மாவாட்டம் தொடர்பில் | பணிப்பாளர் (பிராந்திம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், 2/195, பிரதான வீதி, களுத்துறை. தொ.பே. 034-2223984 |
| iv | இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்கள் தொடர்பில் (கொழும்பு நகர், இரத்பமலானை, தெஹிவலை, மாரட்டுவை, கொலன்னாவ, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரிதேச செயலாளர் பிரிவுகள் தவிர்த்து) | பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், த.பெ. 02, புதிய நகர், இரத்தினபுரி தொ.பே. 045-2222113 |
| v | காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள் தொடர்பில் | பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், மேல் டிக்சன் வீதி, காலி. தொ.பே. 091-2242490 |
| vi | மொனராகலை, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்கள் தொடர்பில் | பணிப்பாளர் (பிராந்தியம்), பிராந்திய அலுவலகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், பழைய கச்சேரி கட்டடம், மொனராகலை. தொ.பே. 055-2276207 |

(04) பூர்த்தி செய்து அனுப்புகின்ற விண்ணப்பப் படிவத்துடன்,

(1) ஆண்டுக்கான அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 1,150/=
(2) அரச முத்திரைக் கட்டணம் ரூபா 115/= என,

பணிப்பாளர் நாயகம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பெயருக்கு எழுதிய ரூபா 1,265/= (ரூபா ஆயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து) பெறுமதியான காசோலை, காசுக் கட்டளை அல்லது தபால் கட்டளை ஒன்றாக மேல் குறிப்பிடப்பட்டவாறு அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். பணமாக அனுமதிப்பத்திர கட்டணத்தை செலுத்த வேண்டுமாயின் குறித்த அலுவலகத்திற்கு வருகை தந்து செலுத்த முடியும்.

(05) தற்போது இறப்பர் வர்த்தக அனுமதிப்பத்திரத்தை பெற்றிருந்தபோதும், அந்த அனுமதிப்பத்திரத்தை இந்த ஆண்டுக்காக புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத அனைத்து அனுமதிப்பதிரம் பெற்றிருப்பவர்களும் தொடர்ந்து கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தால் தாமதம் இன்றி 2024 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக மேலுள்ளவாறு குறித்த அலுவலகத்திற்கு நிலுவை அனுமதிப்பத்திர கட்டணத்துடன் அவர்களினால் விண்ணப்பித்தல் வேண்டும்.

(06) மூன்றாவது பந்தியின் i பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரதாரர்கள் அனுமதிப்பத்திரத்துடன் அனுப்புகின்ற குறிப்பிட்ட வடிவத்தின் மூலம் மாதாந்த அறிக்கைகளை பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 465, கனஹேன, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு மற்றும் மற்ற அனுமதிப்பத்திரதாரர்கள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் தமக்கு தொடர்புடைய பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்புமாறும் தயவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

**மாதவ வர்ணகுலசூரிய**
**பணிப்பாளர் நாயகம்**

**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்**
**இலக்கம் 465, கனஹேன, பத்தரமுல்லை.**
**T.P. 0112-889447/0112-889446**

---

Sri Lanka
YOU'LL COME BACK FOR MORE

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்**

## விலைமனுக்கோரல்

### 31 ஆம் திகதி இரவு கொழும்பில் நடைபெறும் நிகழ்வுகளுக்காக முகாமைத்துவ நிறுவனமொன்றினை நியமித்தல்

ஒப்பந்த இல: **SLTPB/PROC/NCB/177**

1. SLTPB இன் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் 31 ஆம் திகதி இரவு கொழும்பில் நடைபெறும் நிகழ்வுகளுக்காக முகாமைத்துவ நிறுவனமொன்றினை நியமிப்பதற்காக புகழ்பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.
2. மனுதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்,
   a. உரிய நிறுவனமானது இலங்கையில் சட்ட ரீதியாக நிகழ்வு மேலாண்மை தொடர்பில் பதிவு மேற்கொண்டிருத்தல்.
   b. இலங்கை நிகழ்வுகள் தொடர்பில் ஆகக்குறைந்தது 05 வருட முன்னனுபவத்தை கொண்டிருத்தல்.
   c. கடந்த 10 ஆண்டுகளில் 10 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள குறைந்தபட்சம் ஐந்து (05) நிகழ்வுகளைக் கையாண்டிருத்தல்
   d. நிறுவனமானது போதியளவு மனித வளத்தையும் நிகழ்வுகள் சார் உபகரணங்களையும் கொண்டிருத்தல்.
   e. மனுதாரர் கடந்த ஐந்து வருடங்களது நேர்மறையான நிதிசார் திறன்களை கொண்டிருத்தல்.
3. தேசிய கொள்முதல் வழிகாட்டி 2006 ன் கீழ் தேசிய போட்டி ஏல முறையை பின்பற்றி ஏலம் நடாத்தப்படும். **https://www.treasury.gov.lk/web/procurement-guidelines-and-manuals/section/procurement%20guidelines.**
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் எனும் மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை **procurement@srilanka.travel** மற்றும் **nithinip@srilanka.travel** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆங்கில மொழி மூலமான முழுமையான மனுப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை கீழ்குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதோடு மனுக்கட்டணம் என்பதன் அடிப்படையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.5,000/- (ஐயாயிரம்)** னை இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் 007119985 இலங்கை வங்கி, கூட்டுறவு கிளை கணக்கிலக்கத்திற்கு **2023.12.08** க்கு முன்னர் வைப்பிலிடுதல் அல்லது ஒன்லைன் பரிமாற்றம் மூலமாக கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் கட்டணம் செலுத்தியமைக்கான ஆதாரத்தினை மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் மின்னஞ்சல் வாயிலாக **nithinip@srilanka.travel** க்கு அனுப்பி வைக்கவும்.
   * மனுதாரரின் பெயர்.
   * தொடர்புகொள்ள வேண்டிய நபரின் பெயர் மற்றும் மனுதாரரின் தொடர்பு விபரங்கள்.
   * தொடர்புகொள்ள வேண்டிய நபரின் மின்னஞ்சல் முகவரி.
6. மனுக்கு முந்திய கூட்டமானது **30.11.2023 ஆம் திகதி மு.ப 11.00** மணிக்கு இல.78, காலி வீதி, கொழும்பு 03இலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் (ஹோட்டல் பாடசாலை) கூட்ட அறையில் இடம்பெறும்.
7. அனைத்து விலைமனுக்களும் நிபந்தனைகளற்று மனுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத்தொகையுடன் காணப்படுவதோடு பத்திரத்தில் உள்ளவாறு முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 க்காக இலங்கை ரூபா நான்கு இலட்சம் பெறுமதியான **(ரூ.250,000.00)** தொகை இலங்கையில் பதிவினையுடைய **A** தர கொமர்ஷல் வங்கியிலிருந்து வெளியிடப்பட்டதாக காணப்பட வேண்டும். அவை விலைமனுக்கோரல் முடிவுத்திகதியிலிருந்து **2024.03.26** ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 இல் வழங்கல் சபை (கீழ்தளம்) யில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் **2023.12.11 ஆம் திகதி பி.ப 2.00** மணிக்கு முன்னர் இடவும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக வழங்கல் சபை (கீழ்தளம்), இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 இல் மனுதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. காலதாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. மனு ஆவணங்களை மாற்ற முடியாது.
11. மேலதிக விபரங்களுக்கு வழங்கல் **சபை தலைவரை nithinip@srilanka.travel , 0112426800 (Ext 117)** ஊடாக அலுவலக வேளைகளில் (மு.ப 8.30 - பி.ப 4.15 வரை) தொடர்புகொள்ளலாம்.
12. விலைமனுக்கோரல் அல்லது மனுக்கோரலை நிறுத்துதல் போன்ற அனைத்து அதிகாரமும் வழங்கல் சபைக்கு உண்டு.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு,
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
இல-80, காலி வீதி,
கொழும்பு 03.

---

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**
**சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

### கேள்விகளுக்கான அழைப்பு

### விசேட அனுமதிப்பத்திரம் சகிதம் இறக்குமதி செய்ய வேண்டிய மருந்துகளைக் கொள்வனவு செய்தல்

**WL/02/17/08/Drugs/2023**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் விசேட அனுமதிப்பத்திரம் சகிதம் இறக்குமதி செய்யவேண்டிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த மற்றும் இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி | கேள்விப் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| Lot 1 - Etorphine Hydrochloride 9.8mg/ml | 50,000.00 | 2,000.00 |
| Lot 2 - Diprenorphine Hydrochloride 12mg/ml | 37,500.00 | 1,600.00 |
| Lot 3 - Naltrexone Hydrochloride 50mg/ml | 11,500.00 | 1,400.00 |

01. ஒரு கேள்விதாரர் ஒரு உருப்படிக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.
02. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
03. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை 2023-11-21ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பத்தரமுல்லை, வன சீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை 2023-12-11ஆம் திகதி வரையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எனும் பெயருக்கு எழுத்துமூலமான கோரிக்கை சகிதம் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத வைப்பை ரொக்கப் பணமாக திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்வி ஆவணங்களுடன் Lot - 1 இற்கு 50,000.00 ரூபாவும் Lot - 2 இற்கு 37,500.00 ரூபாவும் Lot - 3 இற்கு 11,500.00 ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் அல்லது வன சீவராசிகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2023-12-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கொடுப்பனவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் பிணை முறிகள் சமர்ப்பிக்கப்படாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப் பிணை முறியானது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
07. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2023-12-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
08. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
09. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

---

www.adz.lk
it's what you want

---

**தெஹிவளை கல்கிசை மாநகர சபை**

## கேள்வி அறிவித்தல்

### வாகன நிறுத்துமிடம் கேள்வி கோரல் – 2024

தெஹிவளை கல்கிசை மாநகர சபையினால் கீழ்க்காணும் இடங்களில் வாகன நிறுத்துமிட கட்டணங்களை அறவிடுவதற்காக 2024ம் ஆண்டிற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் (VAT வரியுடன்) ரூ. 5750.00

| | நிறுத்துமிடம் | வருடாந்த குறைந்தபட்ச கேள்வி (ரூபா) | காசாக மாத்திரம் செலுத்த வேண்டிய கேள்விப் பிணை முறி (மீளளிக்கப் படும்) (ரூபா) |
|---|---|---|---|
| 1 | தேசிய விலங்கியல் பூங்காத் திணைக்களத்திற்கு அருகில் அநகாரிக்க தர்மபால மாவத்தயில் வலது பக்கம் வரிக்கட்டண இல. 146 மற்றும் வரிக்கட்டண இல. 96 இற்கு இடையில் மற்றும் இடது பக்கம் வரிக் கட்டண இல. 165 மற்றும் வரிக்கட்டண இல. 96 இற்கிடையிலான பிரதேசத்திற்கு சொந்தமான வீதியின் இரு பக்கம் | 2,700,000 | 54,000 |
| 2 | கரையோர வீதி (Marine Drive - வெள்ளவத்த பாலத்திற்கு அருகில் இருந்து பிரேஷர் அவென்யூ வரை) இரு பக்கம் | 2,000,000 | 40,000 |
| 3 | இரத்மலானை பொதுச் சந்தைக்கு முன்னால் | 1,200,000 | 24,000 |
| 4 | நுகேகொடைஹைலெவல் வீதி மேம்பாலத்திற்குக் கீழ் | 2,300,000 | 46,000 |
| 5 | தெஹிவளை முச்சந்தியில் மேம்பாலத்திற்குக் கீழ் | 2,200,000 | 44,000 |
| 6 | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் (களுபோவில பொது வைத்தியசாலை) அருகில் வலது எல்லையில் சுனந்தாராம வீதியின் வைத்திய சாலை எல்லைக்கு அருகில் | 3,400,000 | 68,000 |

வாகன நிறுத்துமிட கடடணம் அறவிடல் 2024 கேள்விக்காக விலைமனுக்கள் கீழ்க்காணுமாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

1. தெஹிவளை கல்கிசை மாநகர சபையினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களில் மட்டுமே கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கலாம். மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் நகர சபையின் தரைமாடியில் அமைந்துள்ள கலப்பு வருமானப் பிரிவில் 2023.12.11 மு.ப. 10.00 வரை கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய் முடியும் அத்துடன் 2023.12.11 பி.ப. 2.00 வரை கேள்விப் பிணை முறியைச் செலுத்தலாம். அவ்வாறே அவ் ஆவணங்களை அப்பிரிவில் உங்களுக்கு இலவசமாகப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.
2. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதி 2023.12.11 பி.ப. 3.00 ஆவதுடன் கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவரால் எழுத்து மூலம் ஒப்படைக்கப்படும் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.
3. வாகன நிறுத்துமிட கட்டணங்கள் அறவிடும் கேள்விக் காலம் ஒரு வருடம் மட்டுமே
4. தெஹிவளை கல்கிசை மாநகர சபையின் இல. 011 2738701, 011 2738702 தொ.பே. இலக்கங்களில் 112 எனும் நீடிப்பு ஊடாக கலப்பு வருமானப் பிரிவை அழைத்து இக்கேள்வி கோரல் பற்றிய தகவல்களை விசாரித்தரியலாம்.

**எம்.எம்.சி.கே.கே. மான்னப்பெரும,**
**மாநகர ஆணையாளர் மற்றும்**
**அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**தெஹிவளை கல்கிசை மாநகர சபை.**

திகதி: 2023.11.21

# இலங்கை கிரிக்கெட் தடை தொடர்பில் ஆராயும் ஐ.சி.சி சபைக் கூட்டம் இன்று




இலங்கை கிரிக்கெட் தடை குறித்து பரிசீலிக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் சபைக் கூட்டம் இன்று (21) அஹமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியை பார்வையிட ஐ.சி.சியின் அனைத்து உயர் மட்ட அதிகாரிகளும் வருகை தந்த நிலையில் உலகக் கிண்ணம் நிறைவடைந்து ஒரு நாள் கழித்து இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. எனினும் ஏற்கனவே கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஐ.சி.சியின் காலாண்டுக் கூட்டம் மற்றும் குழு நிலைக் கூட்டங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உலகக் கிண்ண இறுதிப் போட்டியை பார்வையிட இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா மற்றும் இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா ஆகியாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததோடு இலங்கையின் உலகக் கிண்ணத்தை வென்ற முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்கவுக்கும் இறுதிப் போட்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு உலகக் கிண்ணத்தை வென்ற முன்னாள் அணித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவது வழக்கமாகும்.

இந்நிலையில் இன்று நடைபெறும் ஐ.சி.சி சபைக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் மீதான தடை குறித்து பிரதானமாக ஆலோசிக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது. இலங்கை கிரிக்கெட்டை ஐ.சி.சி கடந்த நவம்பர் 10 ஆம் திகதி இடைநிறுத்தியது.

ஓர் அங்கத்தவராக இலங்கை கிரிக்கெட் தனது பொறுப்புகளை தீவிரமாக மீறி இருப்பதாக ஐ.சி.சி. குறிப்பிட்டிருந்தது.. குறிப்பாக, முகாமைத்துவ விடயங்களில் சுய அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் இலங்கை கிரிக்கெட்டின் ஒழுங்குமுறை மற்றும்/ அல்லது நிர்வாகத்தில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய தவறி இருப்பதாகக் கூறப்பட்டது.

இதில் எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியை இலங்கை நடத்தவுள்ள நிலையில் தடைக்கு மத்தியில் அதனை தக்கவைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று தெரியவருகிறது. அதேபோன்று இந்தத் தடைக்கான நிபந்தனைகள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு தொடர்பில் ஐ.சி.சி பிரதித் தலைவர் இம்ரான் க்வாஜா செல்வாக்குமிக்க குரலாக இருப்பார் என்று நம்பப்படுகிறது. கடந்த மே மாதம் இலங்கைக்கான உண்மையை கண்டறியும் குழுவின் போது அவர் இந்த விடயத்தை ஆராய்ந்திருந்தார்.

உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி இரண்டு போட்டிகளில் மாத்திரமே வென்று எஞ்சிய ஏழு போட்டிகளில் தோல்வியை சந்தித்திருந்தது. இந்நிலையில் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இலங்கை கிரிக்கெட் சபையை கலைத்து முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடைக்கால சபை ஒன்றை நியமித்திருந்தார்.

எனினும் அந்த இடைக்கால சபைக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்ததோடு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை பதவி விலகக் கோரும் தீர்மானம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் ஐ.சி.சி. இந்த இடைநிறுத்தத்தை ஓர் எச்சரிக்கையாக விடுத்துள்ளது. தற்போதைய சூழலில் இந்த நடவடிக்கை இலங்கைக் கிரிக்கெட்டுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. இலங்கை அணிக்கு எதிர்வரும் டிசம்பர் வரை எந்த கிரிக்கெட் போட்டிகளும் இல்லை. அதேபோன்று ஐ.சி.சி தனது அங்கத்துவ நாடுகளுக்கான வருடாந்த நிதியை ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களிலேயே வழங்குகிறது.

ஐ.சி.சி முழு அங்கத்துவ நாடுகள் பங்கேற்கும் இன்றைய கூட்டத்தில் மேலும் பல முக்கிய விடயங்கள் குறித்தும் இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. குறிப்பாக 2024–27 சுழற்சிக்கான வருவாய் பகிர்வு மற்றும் 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற்றிருப்பது குறித்து முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ.சி.சி உலகக் கிண்ண கனவு அணியில் டில்ஷானுக்கு இடம்




உலகக் கிண்ணத்தில் சோபித்த வீரர்களைக் கொண்ட ஐ.சி.சி. கனவு அணியில் இலங்கை அணியின் இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவும் இடம்பெற்றுள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் நேற்று முன்தினம் (19) நடந்த இறுதி ஆட்டத்தில் இந்தியாவை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி ஆறாவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்தத் தொடரில் திறமையை வெளிப்படுத்திய வீரர்களை உள்ளடக்கிய கனவு அணியை ஐ.சி.சி நேற்று வெளியிட்டது. இதில் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலியா, இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இந்தியா, அரையிறுதியில் ஆடிய தென்னாபிரிக்கா, நியூசிலாந்துடன் இலங்கை வீரர் ஒருவரும் இடம்பெறுள்ளார்.

அவுஸ்திரேலியா உலகக் கிண்ணத்தை வெல்ல உதவிய சகல துறை வீரர் கிளென் மெக்ஸ்வெல் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் அடம் சம்பா ஆகியோர் அவுஸ்திரேலியாவில் இருந்து இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிகபட்சமாக இந்தியாவில் இருந்து ஆறு வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கே.எல் ராகுல், ரவிந்திர ஜடேஜா மற்றும் ஜஸ்பிரிட் பும்ராவுடன் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்று தொடர் நாயகன் விருதை வென்ற விராட் கொஹ்லி மற்றும் அதிக விக்கெட் வீழ்த்தி மொஹமட் ஷமி ஆகியோர் இடம்பெற்றனர்.

இந்திய அணித் தலைவர் ரோஹித் ஷர்மா ஐ.சி.சி கனவு அணிக்கு தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய அணி இறுதிப் போட்டியில் தோற்றபோதும் லீக் போட்டிகள் அனைத்திலும் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவின் குவன்டன் டி கொக் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு, நியூசிலாந்தின் டரில் மிச்சலும் அணியில் இடம்பெற்றுள்ளார். தென்னாபிரிக்காவின் கெரல் கொட்ஸி 12ஆவது வீரராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 21 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியோர் வரிசையில் முதல் ஐந்து இடங்களை பிடித்தார். அவர் தொடர் முழுவதும் புதுப்பந்தில் எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு தொடர்ந்து சவால் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கனவு அணியை இயன் பிஷொப், காஸ் நைடூ, ஷேன் வொட்சன் (வர்ணனையாளர்), வசீம் கான் (ஐ.சி.சி. பொது முகாமையாளர், கிரிக்கெட்) மற்றும் சுனில் வாய்தா (ஊடகவியலாளர்) ஆகியோர் கொண்ட குழுவே தேர்வு செய்தது.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் மற்றொரு மருத்துவமனையை சுற்றிவளைத்தது இஸ்ரேலிய இராணுவம்

## உயிரிழப்பு 13,000ஐ தாண்டியது: விரைவில் உடன்படிக்கைக்கு வாய்ப்பு

அல் ஷிபா மருத்துவமனையை அடுத்து இஸ்ரேலிய இராணுவம் வடக்கு காசாவில் இருக்கும் மற்றொரு மருத்துவமனையான இந்தோனேசிய மருத்துவமனையை சுற்றிவளைத்துள்ளது. இந்த மருத்துவமனை மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த மருத்துவமனை மீது இடம்பெற்று வரும் தொடர்ச்சியான மற்றும் நேரடியான குண்டு வீச்சுகளில் ஆயிரக் கணக்கான நோயாளிகள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் உயிராபத்தை எதிர்கொண்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

காசாவில் நெருக்கடியை சந்தித்திருக்கும் ஏனைய சுகாதார வசதிகள் போன்று 2016 இல் இந்தோனேசிய அமைப்புகளின் நிதியில் கட்டப்பட்ட இந்தோனேசிய மருத்துவமனையும் தனது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது. எனினும் இங்கு மருத்துவ பணியாளர்கள், காயமடைந்தவர்கள் உட்பட சுமார் 700 பேர் இருப்பதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் கித்ரா தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் செல் வீச்சுகளால் மருத்துவமனை கட்டடம் சேதம் அடைந்திருப்பதோடு மின் பிறப்பாக்கி செயலிழந்ததை அடுத்து மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையை டாங்கிகள் சுற்றிவளைத்திருக்கும் நிலையில் அங்கிருந்து வெளியேறுபவர்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் சூடு நடத்தி வருவதாக காசாவில் இருக்கும் ஊடகவியலாளர் ஒருவரான இஸ்மைல் அல் குல் தெரிவித்ததாக அல் ஜசீனா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அல் ஷிபா மருத்துவமனையை விட அளவில் சிறியதான இந்தோனேசிய மருத்துவமனை மீதான இஸ்ரேலின் நடவடிக்கை பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எகிப்துடனான எல்லைக்கு அருகில் ரபா நகரில் வீடுகள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய இரு வான் தாக்குதல்களில் குறைந்தது 14 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா நிர்வாகம் தெரிவித்தது.



காசாவில் இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 13 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இதில் சுமார் 5,500 சிறுவர்கள் மற்றும் 3,500 பெண்கள் அடங்குகின்றனர். காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 30,000ஐ தாண்டி இருப்பதோடு இவர்களில் 75 வீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

எனினும் காணாமல் போனவர்கள் 6,000ஐ தாண்டி இருக்கும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை கூறப்படுவதை விடவும் அதிகமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இவ்வாறு காணாமல் போனவர்களில் பொரும்பாலானவர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

காசாவில் 43,000க்கும் அதிமான வீடுகள் இஸ்ரேலிய தாக்குதல்களில் தரைமட்டமாகப்பட்டிருப்பதோடு 225,000க்கும் அதிகமாவை சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு காசாவில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்த இஸ்ரேலிய இராணுவம் தனது போர் நடவடிக்கையை விரிவுபடுத்தும் வகையில் காசாவின் மிகப்பெரிய அகதி முகாமான ஜபலியா அகதி முகாம் மற்றும் அதற்கு அருகில் உள்ள கடற்கரை முகாமில் இருக்கும் மக்களை வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது. ஜபலியாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று முன்தினம் (19) உக்கிர தாக்குதல்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இங்கு சனிக்கிழமை பாடசாலைகள் உட்பட பல இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 80 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் காசாவில் இஸ்ரேலிய படைகள் மற்றும் பலஸ்தீன போராளிகளுக்கு இடையில் தரைவழி மோதல்களும் தொடர்ந்து இடம்பெற்று வருகிறன்றன. இதில் மேலும் இரு இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டதை இஸ்ரேலிய இராணுவம் உறுதி செய்துள்ளது. 20 வயதுடைய யினொப் டமிர் மற்றும் ட்விர் பரசானி என்ற இரு வீரர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்படி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய படைகளின் எண்ணிக்கை 387 ஆக அதிகரித்துள்ளது. இதில் காசா மீதான தரைவழி நடவடிக்கையில் 64 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மோதல்கள் தீவிரம் அடைந்தபோதும் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை நெருங்கி இருப்பதாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலுக்குள் ஊடுருவி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டதோடு சுமார் 240 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளுக்கான இஸ்ரேலிய தூதுவர் மைக்கல் ஹர்சொக் ஏ.பி.சி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், “எதிர்வரும் நாட்களில் ஹமாஸினால் கணிசமான பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று இந்த வாரத்தில் எதிர்பார்க்க முடியும்” என்றார்.

மறுபுறம், உடன்படிக்கை ஒன்றுக்கான பிரதான தடங்கல்கள் மிகக் குறைவாக இருப்பதாக கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார். நடைமுறை மற்றும் ஏற்பாட்டு ரீதியான தடங்கல்களே எஞ்சி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று மிகச் சிக்கலான மற்றும் உணர்வுபூர்வமான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனா சென்றிருக்கும் பலஸ்தீன அதிகாரசபை, எகிப்து, சவூதி அரேபியா, ஜோர்தான் மற்றும் இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர்கள் காசாவில் உடன் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர். அவர்கள் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீயையும் சந்தித்து காசா விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். காசாவில் மனிதாபிமான பேரழிவு ஒன்றை நிறுத்துவதற்கு உலகம் உடன் செயற்பட வேண்டும் என்று வாங் குறிப்பிட்டுள்ளார்.

“காசாவின் நிலைமை உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. இது சரி மற்றும் தவறு அதேபோன்று மனிதகுலத்தின் அடிப்படையை கேள்விக்குள்ளாக்குகிறது” என்று வருகைதந்த இராஜதந்திரிகளிடம் வாங் தெரிவித்துள்ளார்.

கடந்த மாத பிற்பகுதியில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் டாங்கிகள் காசாவுக்குள் ஊடுருவிய நிலையில் காசா நகரைச் சூழவுள்ள வடக்கு, வடமேற்கு மற்றும் கிழக்கின் கணிசமான பகுதிகளை கைப்பற்றியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் கெரில்லா பாணியில் போர் புரிந்து வரும் ஹமாஸ் ஆயுதப் பிரிவினர் காசா நகரத்தின் சில பகுதிகள் மற்றும் பரந்து விரிந்த ஜபாலியா மற்றும் கடற்கரை அகதிகள் முகாம்கள் உட்பட, நெரிசலான, நகரமயமாக்கப்பட்ட வடக்கில் இஸ்ரேலிய படைகள் மீது அதிரடி தாக்குதல்களை நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு பகுதிகளான பெயித் ஹனுன், பெயித் லஹியா மற்றும் அல் சப்தாவி அதேபோன்று ஜபலியாவின் மேற்குப் பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் ஏழின் மீது தமது போராளிகள் தாக்குதல்களை நடத்தியதாக ஹமாஸ் அமைப்பின் கூட்டணியான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் 100,000 மக்கள் வசிக்கும் ஜபலியா அகதி முகாமை நோக்கி இஸ்ரேலிய படை முன்னேற முயன்றபோது ஹமாஸ் போராளிகளுடன் கடும் மோதல் வெடித்துள்ளது. 1948இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது வெளியேற்றப்பட்ட பலஸ்தீனர்களின் சந்ததிகள் வசிக்கும் ஜபலியா முகாம் மீது இஸ்ரேல் அண்மைய நாட்களில் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

# இஸ்ரேலுடன் தொடர்புடைய கப்பலை கடத்தியது ஹூத்தி




இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல் ஒன்றை கடத்தி இருக்கும் யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் அதில் இருந்த பணியாளர்களை பணயக்கைதிகளாக பிடித்துள்ளனர்.

காசா மீதான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வரும் வரை சர்வதேச கடலில் உள்ள இஸ்ரேலுக்கு தொடர்புடைய அல்லது இஸ்ரேலுக்கு சொந்தமாக கப்பல்கள் இலக்கு வைக்கப்படும் என்று ஈரான் ஆதரவுடைய அந்தக் கிளர்ச்சிக் குழு எச்சரித்துள்ளது.

இஸ்ரேலிய செல்வந்தர் ஒருவருடன் தொடர்புடைய பஹாமாஸ் கொடியுடனான கப்பல் ஒன்றே கடத்தப்பட்டுள்ளது. அந்த கப்பலில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 ஊழியர்கள் இருந்துள்ளனர். இவர்கள் இஸ்லாமிய பெறுமானங்களுக்கு அமைய நடத்தப்படுவதாக ஹூத்திக்கள் கூறியபோதும் அது என்ன என்பதை விளக்கவில்லை.

துருக்கியிலிருந்து இந்தியா சென்றுகொண்டிருந்தபோது செங்கடலில் வைத்து இந்தக் கப்பல் கடத்தப்பட்டுள்ளது. கப்பல் கடத்தப்பட்டது “ஈரானின் பயங்கரவாதச் செயல்” என்று இஸ்ரேல் கண்டனம் தெரிவித்தது.

ஏற்கனவே ஹூத்திக்கள் இஸ்ரேலை இலக்கு வைத்து பல முறை ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## வினோத வாக்குறுதிகளுடன்

# ஆர்ஜென்டீன ஜனாதிபதியாக வெற்றிபெற்றார் ஜேவியர் மிலி



ஆர்ஜென்டீன ஜனாதிபதி தேர்தலின் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் வினோதமான மற்றும் அதிரடி திட்டங்களை அறிவித்த தீவிர வலதுசாரி சுயாதீனவாதியான ஜேவியர் மிலி வெற்றியீட்டியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற தேர்தலில் 95 வீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் 56 வீதமான வாக்குகளை வென்று மிலி, பொருளாதார அமைச்சர் செர்கியோ மசாவை தோற்கடித்துள்ளார்.

அரசியல் கட்டமைப்புக்கு எதிரானவராகவும், ஆத்திரமூட்டும் சொல்லாட்சிகளை பயன்படுத்துபவராகவும், ஆக்ரோசமாக பேசக் கூடியவருவமான மிலி, நாட்டின் பொருளாதாரத்தை டொலரில் மாற்றுவதற்கும், மத்திய வங்கியை மூடுவதற்கும், 140 வீதத்திற்கு மேல் இருக்கும் பண வீக்கத்தை குறைக்க பொதுச் செலவுகளை பாரிய அளவில் குறைப்பதற்கும் வாக்குறுதி அளித்துள்ளார்.

முன்னாள் தொலைக்காட்சி பிரபலமான மிலியின் வாக்குறுதிகள் ஆளும் கட்சி மீது அதிருப்தியில் உள்ள பெரும்பான்மை ஆர்ஜென்டீன மக்களை கவர்ந்துள்ளது.

இந்நிலையில் அல்பார்டோ பெர்னாண்டஸுக்கு பதில் ஜேவியர் மிலி எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி ஆர்ஜென்டீனாவின் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.